விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 12 ஞாயிற்றுக்கிழமை (28.11.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 344



ரா ம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து


# 13ஆவது அரசியல் திருத்தம்

# நிரந்தரத் தீர்வை ஏற்படுத்தும்!

## இந்திய வெளியுறவு அமைச்சர் நம்பிக்கை



(யாழ்ப்பாணம்)

இலங்கையின் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் அடிப்படையில்லான ஓர் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுத் திட்டம் ஒரு நிரந்தர அரசியல் தீர்வுக்கான சூழ்நிலையை ஏற்படுத்துமென எதிர்பார்ப்பதாகவும் இத்தகைய பேச்சுவார்த்தையொன்று எல்லா சமூகங்களினதும் பங்களிப்புடன் விரைவில் ஆரம்பமாகும் என நம்புவதாகவும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா தெரிவித்தார். யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் செய்த அவர், இந்தியத் துணைத் தூதரகத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

(19ஆம் பக்கம் பார்க்க)





இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா இந்திய உதவி உயர்ஸ்தானிகராலயத்தை திறந்து வைப்பதையும், இந்திய உதவியுடன் ஆரம்பிக்கப்படவுள்ள வீட்டுத் திட்டத்திற்கான அடிக்கல்லை நாட்டுவதையும் படங்களில் காணலாம்.

## இந்தியத் துணைத் தூதரகத்தை கிருஷ்ணா திறந்து வைத்தார்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான இந்திய துணைத் தூதரகம் நேற்று யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா துணைத் தூதரகத்தை திறந்து வைத்தார்.

இலங்கைக்கு நான்கு நாள் விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய வெளியுறவு துறை அமைச்சர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தார்.

இவருடன் இந்திய வெளியுறவுச் செயலாளர் நிருபமா ராவ், இலங்கைக்கான இந்தியத்தூதுவர் அசோக்கே.காந்த், இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், பொருளாதார அபி (20ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய வெளிவிவகார அமைச்சருடன் தமிழ் அரசியல் கட்சிகள் இன்று சந்திப்பு

(கொழும்பு)

தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சருக்கும் இடையில் இன்று சந்திப்பொன்று நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்அரசியல்கட்சிகளின் கூட்டமைப்பு இன்றுவெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவை சந்திக்கவுள்ளதாக தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தையை வெற்றிகரமான ஆரம்பமாக கருதமுடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்அரசியல்கட்சிகளின் கூட்டமைப்பு உறுப்பினர் (20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண தமிழ் அறிஞர்களுக்கு அமைச்சர் கிருஷ்ணா புகழாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண தமிழ் அறிஞர்களுக்கு இந்திய வெளியுறவு அமைச்சர் ,எஸ்.எம். கிருஷ்ணா புகழாரம் சூட்டினார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் இந்தியத் துணைத் தூதரகத்தை திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.அவர்மேலும் கூறியதாவது,

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆறுமுக நாவலர், சி. பி ள்யூ.தாமோதரம்பிள்ளை போன்ற கல்விமான்களும் அறிஞர்களும் பழந்தமிழ் இலக்கியத்தில் தங்களுடைய அறிவாலும், ஆராய்ச்சிகளாலும் தமிழ் இலக்கியத்துக்கு பெரும் அணி செய்தனர்.

இந்திய உதவித் தூதரகம் ஒன்றைதிறப்பதற்கு முடிவு செய்தபோது யாழ்ப்பாணமே அதற்கு இயல்பானதும் தவிர்க்க முடியாததுமான இடமாக இருந்தது எனவும் கிருஷ்ணா கூறினார். (ச)

## பாக்.ஜனாதிபதி இலங்கை வந்தார்

(கொழும்பு)

பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி நேற்றுப் பிற்பகல் இலங்கையை வந்தடைந்தார்.

பாகிஸ்தானின் விசேட விமானம் ஒன்றிலேயே அவர் இலங்கை வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இவரை வரவேற்பதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினர் கட்டு (20ஆம் பக்கம் பார்க்க)

## துணைவேந்தர் நியமனத்துக்கு தேர்தல் மூலம் மூவர் தெரிவு







(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் தெரிவிற்குப் போட்டியிட்டவர்களில் மூவர் பல்கலைக்கழக பேரவையினால் வாக்களிப்பு மூலம் நேற்று தெரிவு செய்யப்பட்டனர்.

இதில் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் 14 வாக்குகளையும், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் மற்றும் பேராசிரியர் ரட்ணஜீவன் கூல் ஆகியோர் தலா 9 வாக்குகளையும் பெற்று பேரவையினால் ஜனாதிபதிக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக (20ஆம் பக்கம் பார்க்க)


வீட்டிலும் வேலைத்தலத்திலும் இதமான காற்றை இனிதே அனுபவிக்க ...

சிங்கர் எயார்கண்டிஷனர்கள்

• உத்தரவாதம் • விற்பனைக்குப் பிந்திய சேவை • இலகு தவணைக் கொடுப்பனவு



SINGER®

யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்

SLMO

யாழ்ப்பாணம்-ஸ்டான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி, சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி, மானிப்பாய்

# தமிழ்க்கட்சிகள் முரண்பாடுகளை மறந்து மக்களின் விடிவிற்காகஒன்றிணைய வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் அழைப்பு



(யாழ்ப்பாணம்)

எமது மக்களின் விடிவிற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட அனைத்து அரசியற்கட்சிகளும்தமது முரண்பாடுகளை மறந்து நடைமுறைக்குத் சாத்தியமான வழிமுறையில் இணைந்து செயற்பட முன்வர வேண்டும் என பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வடமாகாண விவசாயிகளுக்கு இந்தியா வழங்கும் உழவு இயந்திரங்களை கையளிக்கும்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது,

இது சாதாரண நாள் அல்ல. நாம் அழிந்த வரலாறு போதும். இனி அழிவுகளிலிருந்து எழுந்து நிமிர்வோம் என்பதற்கு கட்டியம் கூறும் அர்த்தமுள்ள நாள் இன்றைய நாள்.

ஆகவேதான் இன்றைய இந்த நிகழ்வில் எமது அயலுலக நட்பு நாடாகிய இந்தியாவின் பிரதமர் மன்மோகன் சிங்கின் நல்லெண்ணத் தூதுவராக எஸ்.எம்.கிருஷ்ணா வருகை தந்திருக்கிறார்.

இலங்கை- இந்திய ஒப்பந்த காலத்தின் ஆரம்பங்களில் இந்தியாவிலிருந்து சமாதானத் தூதுவராக வந்திருந்தவர் பார்த்தசாரதி. அப்போது எமது மக்கள் கீதை சொன்ன கண்ணன் வண்ணத்தேரில் வருகிறான் போன்ற பக்திப் பாடல்களை எங்கள் தேசமெங்கும் இசைக்கவிட்டு மகிழ்ச்சி ஆரவாரத்தோடு அதை வரவேற்றிருந்தனர்.

எமது மக்களில்பலர்இறந்துபோன தமது உறவுகளை நினைத்து துயரப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அது எனக்குப்புரிகிறது. இலங்கை-இந்திய ஒப்பந்தம் என்பது எமது மக்களுக்கு கிடைத்த ஒரு பொன்னான வாய்ப்பு. அதை ஏற்று சரிவரப் பயன்படுத்தியுமிருந்தால் நாம் கடந்த காலங்களில் அழிவுகளை சந்தித்திருக்கவேண்டிய துயரங்கள் இங்கு நிகழ்ந்திருக்காது.

மக்களாகிய நீங்கள் உங்களது பிள்ளைகளை அல்லது உறவுகளை அழிவு யுத்தத்திற்கு பலிகொடுத்திருக்கவேண்டிய அவலங்கள் இங்கு நடந்திருக்காது.

நடந்தவைகள்நடந்தவைகளாகவே இருக்கட்டும் இனி நடப்பவைகள் நல்லதாக நடக்கவேண்டும் என்பதற்காக தமிழ்மக்கள் அனைவரும் சிந்தித்துச்செயலாற்ற முன்வரவேண்டும்.

கடந்த காலங்களில் உங்களுக்கு அழிவுகளைப்பெற்றுத்தந்த தவறான வழிமுறைகளை நீங்கள் உணர்ந்து தமிழ் மக்களை நடுத்தெருவுக்கு கொண்டுவந்து நிறுத்தியிருந்த அனைத்து வழிமுறைகளையும் நீங்கள் இன்னமும் முழுமையாக புரிந்துகொண்டு செயற்பட முன் வருவீர்களானால் நாம் கடந்த 20 வருடங்களில் சந்தித்திருந்த அழிவுகளைமிகவும் குறுகிய காலத்தில்நாம் கட்டியெழுப்பிவிடலாம்.

நாம் கட்டம் கட்டமாக எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்போம் என்று உங்களுக்கு வாக்குறுதி அளித்திருக்கின்றோம். அது நிச்சயம் நடக்கும். நாங்கள் அதை நடத்திக் காட்டுவோம்.

எமது மக்களுடைய மீள் குடியேற்றம் அவர்களுக்கான வாழ்வாதார வசதிகள் உயர் பாதுகாப்பு வலயங்களாக இருந்த பிரதேசங்களை மீண்டும் மக்கள் குடியிருப்பாக மாற்றியமைத்தல் போன்ற எல்லாப் பிரச்சினைகளும் கட்டம் கட்டமாக நிறைவேறி வருவதை நீங்கள் கண்டு வருகிறீர்கள்.

இவைகள் எல்லாம் நாங்கள் அரசாங்கத்தில் பங்கெடுத்திருப்பதாலும் அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைகளை உணர்ந்து கொண்டதாலும் நடந்துகொண்டிருக்கும் காரியங்களே என்பதை நீங்கள் உணர்ந்திருக்கின்றீர்கள்.

அது போலவே எமது அரசியல் உரிமை பிரச்சினைகளுக்கும் நாம் தீர்வு காண்போம் என்பதை உறுதியாகத் தெரிவிக்க விரும்புகின்றேன். எமக்கு இன்னமும் அதிகமான அரசியற் பலம் கிடைத்திருந்தால் நாம் இன்னமும் விரைவாக அவைகளை நிறைவேற்றியிருப்போம்.

எமக்குள் பொது உடன்பாடு கண்டு செயற்பட்டுவரும் பல்வேறு கட்சிகளும் இணைந்த தமிழ்க்கட்சிகளின் அரங்கம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தது. இந்தச் சந்திப்பானது மிகவும் திருப்திகரமானதாகவும் நம்பிக்கை தருவதாகவும்,, முன்னேற்றகரமானதாகவும் அமைந்திருந்தது.

ஆகவே எமது மக்களின் விடிவிற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட அனைத்து அரசியற் கட்சிகளும் தமது முரண்பாடுகளை மறந்து நடைமுறைச் சாத்தியமான வழிமுறையில் இணைந்து செயற்பட முன்வரவேண்டும் என்றும் நான் இந்த நிகழ்வின் ஊடாக அழைப்பு விடுக்க விரும்புகிறேன். இதேநேரத்தில் இந்த நாட்டில் நிலவியிருந்த சகல வன்முறைகளும் இன்று முடிபுக்கு கொண்டுவரப்பட்டிருக்கின்றது. எமது சமூகம் ஒரு ஜனநாயகமயப்படுத்தப்பட்ட சமூகமாக முழுமையாக மாறுவதற்கு சகலரும் ஒத்துழைப்பு வழங்க முன்வரவேண்டும்.

வன்முறைகளை முடிபுக்குக் கொண்டுவந்திருக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த ஜனநாயக சூழலை பாதுகாக்க வேண்டும் என்ற எமது விருப்பங்களை வெளிப்படையாகவே ஏற்று கருத்துச் சொல்லிவருகிறார். அது மட்டுமன்றி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பார் என்ற நம்பிக்கை எமக்குண்டு. அபிவிருத்தி அன்றாட அவலங்களுக்கான தீர்வு முதற்கொண்டு அரசியற் தீர்வு வரைக்கும் அனைத்தையும் நாம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் அரசாங்கத்தின் ஊடாக நாம் நிறைவேற்றுவோம். அதற்கு ஈ.பி.டி.பியினராகிய நாம் பொறுப்பு என்றார். (ச)

## மாற்று வலுவுடையோர் தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்வி வலய விசேட கல்விப்பிரிவு நடத்தும் சர்வதேச மாற்று வலுவுடையோர் தின விழா நாளை காலை 9.30 மணிக்கு தியாகி அறக்கொடை நிறுவன மண்டபத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இராஜலிங்கம் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் இ.கணேசமூர்த்தி கலந்துகொள்ளவுள்ளார். (ச-7)

## கடலில் தத்தளித்த மீனவர் மீட்பு

வட பிராந்தியத்தின் ஆழ் கடலில் தத்தளித்துக்கொண்டிருந்த 42 வயதான மீனவரை கடற்படையினர் நேற்று மீட்டுள்ளனர்.

பல்தின இயந்திரப் படகில் கடந்த 23 ஆம் திகதி கடலுக்குச் சென்ற ஆறு மீனவர்களில்ஒருவரே கடற்படையின் சமுத்திரா மீட்புப் படகின் உதவியுடன் மீட்கப்பட்டுள்ளார்.

இவர் கவலைக்கிடமான நிலையில் திருகோணமலை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் தற்போது தேறியுள்ளதாக கடற்படையின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த நான்கு நாட்களாக கடலில் தத்தளித்த நிலையில் கடற்படையினர் முதலுதவிகளை வழங்கியிருந்தனர்.

படகின் உரிமையாளர் வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே இவர்கள் திருகோணமலையிலிருந்து புறப்பட்டு பருத்தித்துறைக்கு அப்பால் 212 கடல் மைல்கள் தொலைவிற்கு சென்றிருந்ததாக தெரியவந்துள்ளது. (ச-5)


**இலங்கை வங்கி முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சைக்கான கருத்தரங்கு**

ஞாயிற்றுக்கிழமை (இன்று) பிற்பகல் ஒரு மணி தொடக்கம் 5 மணி வரை.ஏனைய நேரங்கள் வகுப்பில் தீர்மானிக்கப்படும்.

**யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு**

யாழ்.போதனா வைத்தியசாலை எதிரே

(சி.1690)


## மங்களவின் நாடாளுமன்ற உரையை வெளியிட ஊடகங்களுக்குத் தடை

(கொழும்பு)

ஐ.தே.கவின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவின் நேற்றைய நாடாளுமன்ற உரையை வெளியிடவேண்டாம் என்று ஊடகங்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மங்களசமரவீர தனது நேற்றைய நாடாளுமன்ற உரையில் தமிழ் மக்கள் மீதான அரசாங்கத்தின் பாராமுகம், அலட்சிய மனோபாவம் மற்றும் வடக்கு- கிழக்கு அபிவிருத்தியில் அரசாங்கத்தின் கருசணையின்மை போன்ற விடயங்களை சுட்டிக்காட்டி உரையாற்றியிருந்தார்.

அத்துடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அரசாங்கம் நிலங்களை அபகரித்து சிங்களக் குடியேற்றங்களையும் இராணுவக் கிராமங்களையும் உருவாக்குவது தொடர்பாகவும் கடும் விமர்சனங்களை முன்வைத்திருந்தார்.

இவ்வாறான நிலை தொடருமாக இருந்தால் இன்னொரு ஈழயுத்தம் மூள்வது தவிர்க்க முடியாதது என்றும் அவர் கருத்துத் தெரிவித்திருந்தார்.

அவரது உரையின் போது ஆளும் கட்சி உறுப்பினர்கள் பலத்த இடையூறுவிளை வித்த போதும் அவற்றுக்கெல்லாம் பதிலளித்தபடி தன் உரையைத் தொடர்ந்தார். அதனால் சீற்றமடைந்த அரசுத்தரப்பு உறுப்பினர்கள் ஒரு கட்டத்தில் தனிப்பட்ட முறையில் கூட அவரைப் பரிகசித்தனர்.

அதற்குப்பின்பும் அவரது உரை தொடர்ந்தது. ஆயினும் அந்த உரையில் அடங்கியுள்ள விடயங்களை ஊடகங்களில் பிரசுரிக்கவேண்டாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)


# மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்

**Dr.P.ஆறுமுகம்**

T.P.: 0719315664 , 0777569205

**மீண்டும் யாழில்**

**25.11.2010 முதல் 02.12.2010 வரை உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 250/-**

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம்.நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு.ஆஸ்துமா ,மாதவிடாய்க் கோளாறுகள்,வெள்ளை படுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு ,கல்வியில் நாட்டம் குன்றிப் பயம்,நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

கமால் ரூரிஸ் இன்(சிவதர்சன் எலெக்ரிக்கல்ஸ் அருகில்)
வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்குமிடையில்,
392, மணிக்கூட்டு கோபுர வீதி,யாழ்ப்பாணம்.

(C-1682)



செல்லா சினிமா(நாதன்ஸ்)




காட்சி நேரம்:- 10.30,2.30,6.30,9.30



# தவறிவிட்டது

திவானந்தன் கஜேந்திர பிரசாத் என்பவருடைய தேசிய அடையாள அட்டை [813473062V],தற்காலிக அடையாள அட்டை என்பன யாழ்.நகரப் பகுதியில் தவறவிடப்பட்டுள்ளது.இதனை கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புக்கு: 0770711047



# 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்

## அமரர் இராசரத்தினம் சிவபுரநாதர்

(ஓய்வுபெற்ற நிலஅளவையாளர்)



தந்தையாய் தாயாய்
தயை காட்டி நின்றீர்
சிந்தையில் நிறைவாய்
சிறப்புற வைத்தீர்
சீலச்சைவநெறிநின்று
சிவபுரநாத நாமங் கொண்டீர்
அந்தமில்ஈசனடி சேர்ந்தீர்
அமைதி பெறுக.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(3137)

எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தியறிந்து ஓடோடி வந்து உதவிகள் பலபுரிந்த நண்பர்கள் , அயலவர்கள், உற்றார், உறவினர்களுக்கும் தொலைபேசி, தந்தி, கடிதங்கள் மூலம் எம்மோடு அனுதாபங்களை பகிர்ந்தோருக்கும் நோயுற்ற வேளையில் வைத்திய சிகிச்சை அளித்த யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்களுக்கும், வட்டு இந்து வாலிபர் சங்கத்தினருக்கும், களுத்துறை ஸ்ரீலங்கா பொலிஸ் கல்லூரி சமூகத்தினருக்கும் மற்றும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நவாலி வீதி,
சங்கரத்தை,வட்டுக்கோட்டை.

அன்னாரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்


e-Exchange
காஷ் போனஸ்
இப்பண்டிகைக் காலத்தில் வெளிநாட்டிலிருந்து e-Exchange மூலம் பணத்தை பெறுங்கள்.
ரூபா 25,000 வீதம் 100 பணப்பரிசில்களை வெல்லுங்கள்.
அனைவருக்கும் பரிசுகள், போனஸ்கள் கிடைக்கும் இப்பண்டிகைக் காலத்தில் வெளிநாட்டில் இருக்கும் உங்கள் உறவினர்கள் கஷ்டப்பட்டு உழைக்கும் பணத்தை தாய்நாட்டில் உள்ள உங்களுக்காக கொமர்ஷல் வங்கியின் ஈ-எக்ஸ்சேஞ்ச் ஊடாக அனுப்பினால் பணத்தை பெறுபவர்கள் ரூபா 25,000 வீதம் 100 பணப் பரிசுகளை வெல்லும் வாய்ப்பை பெறுகிறார்கள். 2010 நவம்பர் 15 முதல் 2011 ஜனவரி 15 வரை பணம் பெறும் அனைவரும் இவ்வெகுமதிக்கு தகுதியுடையவர்களாவர். அதிகளவு தடவைகள் பணம் பெறுபவர்களுக்கு வெற்றி பெறும் வாய்ப்பும் அதிகமாகும். விரையுங்கள்! ரூபா 25,000 தை வெல்லும் 100 அதிர்ஷ்டசாலிகளுள் நீங்களும் ஒருவராகுங்கள்.
உலகம் முழுவதும் பணம் அனுப்ப நம்பிக்கையான, விரைவான சேவை கொமர்ஷல் வங்கியின் e-Exchange.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்: 94 115 667 679 அல்லது 94 112 353 576
COMBANK e Exchange MONEY TRANSFER
COMMERCIAL BANK
பணப் பரிமாற்றச் சேவை


இதயத்தில் நிலைத்திருக்கும் இதமான இடவசதி
LumiTec
Dulux
Pentalite Plus
LIGHT & SPACE
உங்கள் வரவேற்பறையில் புதிய காற்றைச் சுவாசியுங்கள்.
டியூலக்ஸ் பென்டலைட் லைட் அன்ட் ஸ்பேஸ் உங்கள் இல்லத்திற்கு மேலும் அழகூட்டுவதுடன், இடப்பரப்பையும் பெருப்பித்துக் காண்பிக்கும்.
இப்பொழுது விசேடமாக 10 வர்ணங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

# தேசிய கல்வியியற் கல்லூரி

## இந்து சமய பாட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் இரண்டாவது பட்டியல்

(வவுனியா)

2011 ஆம் ஆண்டு தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப்பரீட்சையில் இந்து சமய பாடத்திற்கு தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சைக்கு இரண்டாவது பட்டியலில் அழைக்கப்பட்டவர்களின் விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கே.பேர்னார்ட் அறிவித்துள்ளதாவது, 2011 ஆம் ஆண்டில் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு இந்து சமய பாடத்திற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான நேர்முகப்பரீட்சை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் நடாத்தப்பட்டது.

இந்நிலையில் இந்து சமய பாடத்திற்கு மேலதிகமாக மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப்பரீட்சை எதிர் வரும் 3 ஆம் திகதி வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறுகின்றது என பீடாதிபதி கே.பேர்னார்ட் தெரிவித்தார்.

இந்நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டோரின் விபரம் வருமாறு, எம்.நிதர்சனா (கந்தசாமி கோவில் வீதி, திருகோணமலை), கே.ராதிகா(விகார வீதி, திருகோணமலை), ஜே.சசிறேகா (பொலி கண்டி தெற்கு, வல்வெட்டித்துறை),ஏ.வர்ணாம்பாள் (பொலி கண்டி கிழக்கு வல்வெட்டித்துறை),எம்.சரணியா (சாம்பல்தீவு, திருகோணமலை), ஆர்.கௌதமி (புத்தூர் வடக்கு), ரி.யுனிதா (மட்டக்களப்பு), ஆர்.லக்ஷ்மிகாந்தன் (மட்டக்களப்பு), எஸ்.சிந்துஜா (கல்முனை), எஸ்.வித்தியா(இளவாலை), ஜி.நிஷாளினி (நெல்லியடி கரவெட்டி), ஆர்.ஐஸ்வர்யா (அல்வை தெற்கு), கே.சோபியா (புலோலி மத்தி, பருத்தித்துறை), ரி.ஜென்சிகா(வரணி), எஸ்.நிலாந்தினி (பொத்துவில்), எம்.யுவராஜ்.(சம்மாந்துறை), எஸ்.உருத்திரன் (அம்பாறை), பி.போஜினி (இணுவில் மேற்கு), என்.றோகினி பிரியா (சிலாபம்) (5)

## செயற்குழுக் கூட்டம்

(கொழும்புத்துறை)

இலங்கையில் சர்வமத ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைந்த சமூக வெளிப்பாட்டின் ஊடாக மனித நேயத் தீர்வுகளைச் சாத்தியமாக்கல் தொடர்பான செயற்குழு கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை மாலை 3 மணிக்கு புனித யாக்கோபு பாலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-51)

## கோப்பாய் பிரதேச மக்களுக்கான இலவச நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

நீதியமைச்சின் ஏற்பாட்டில் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் மக்களுக்கான நடமாடும் சேவை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்நடமாடும் சேவையில் பிறப்பு பதிவு, திருமணப் பதிவு, இறப்பு பதிவுகள் தொடர்பான சட்ட சேவைகள், தேசிய அடையாள அட்டை, முதியோர் அடையாள அட்டை, ஓய்வூதியம், காணி தொடர்பான நிர்வாக சட்ட நடவடிக்கைகள் ஆகிய சேவைகள் நடை பெறவுள்ளன.

இப்பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மக்கள் மேற்குறித்த விடயங்கள் தொடர்பான ஆவணங்களுடன் சமுகமளித்து இச்சேவை களைப் பெற்றுக்கொள்ளுமாறு கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார். அத்துடன் அன்றைய தினம் தேசிய அடையாள அட்டை, முதியோர் அடையாள அட்டைக்கான புகைப்படங்கள் யாவும் நடமாடும் சேவை நிலையத்தில் பெற்றுக் கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ஸ்ரீ-2)

## பயிற்சிப்பட்டறை

போரினால் பாதிக்கப்பட்ட இளைஞர் யுவதிகளையும் கிராம இளைஞர்களையும் ஒன்றிணைந்து முழு நாள் பயிற்சிப்பட்டறை நேற்று சனிக்கிழமை இலகடி என்ற கிராமத்திலுள்ள இராசலிங்கம் சனசமூக நிலைய மண்டபத்தில் காலை 10.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெற்றது.

இதில் வளவாளர்களாக திருமதி றஜிவ் யூனிஸ், சி.எம்.நெல்சன், ஜோ.ஜெஸ்ரின் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஸ்ரீ-51)

## உடையார் மிடுக்கு நாடக ஆற்றுகை

(கொழும்புத்துறை)

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத் துறைக்கலைப்பீட 17 ஆம் அணி நாடகமும் அரங்கியலும் மாணவர்களின் ஏற்பாட்டில் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் "உடையார் மிடுக்கு" எனும் நாடக ஆற்றுகை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

இதனை நெறியாளர் க.ரதிகரன் ஆற்றுகை செய்துள்ளார். (ஸ்ரீ-51)

## இராசி பலன்

*28.11.2010*
*(கார்த்திகை 12, ஞாயிற்றுக்கிழமை)*
*சப்தமி பிற்பகல் 2.36 மணி வரை*
*மகம் பின்னிரவு 3.39 மணி வரை*
*இராகுகாலம் 4.43-6.13 மணி வரை*
*சுபநேரம் 9.13-10.43 மணி வரை*
*ஆறுமுகநாவலர் குருபூசை.*

**மேடம்** இனிமையான நாள், இல்லம் தேடி நல்ல செய்திகள் வந்து சேரும் நாள், பிள்ளைகள் குடும்ப பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**இடபம்** தாய் வழி உறவில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், கந்தன் வழிபாடு காரிய வெற்றி தரும், பிரயாண யோகமுண்டு, சுபசெலவுகள் செய்து மகிழ்வீர்கள்.

**மிதுனம்** நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங் கண்டு கொள்வீர்கள், பண வரவு திருப்தி தரும்.

**கடகம்** உங்கள் விவேகமான சிந்தனைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும், சொத்துக்கள் வாங்குவதில் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் காணப்படும், இனிய செய்திகள் வந்து சேரும் நாள்.

**சிங்கம்** குடும்பச் சுமைகள் கூடும், திட்டமிட்ட காரியங்களில் திடீர் மாற்றங்கள் செய்யும் சூழ்நிலை உருவாகும், ஆரோக்கியம் சீராக உணவுக் கட்டுப்பாடு தேவை.

**கன்னி** அலைச்சல் அதிகரிக்கும் நாள், தொழிலில் பணியாளர்களை மாற்றும் சிந்தனை உருவாகும், பெரிய மனிதர்களின் ஒத்தாசையுண்டு, சயனசுகக் குறைவுண்டு.

**துலாம்** எதிர்பாராத வகையில் ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வருவர், பணப்புழக்கம் அதிகரிக்கும், பெருமையான நாள், உறவினர் வருகையுண்டு.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி கூடும் நாள், தொட்ட காரியத்தில் வெற்றி கிடைக்கும், பணத்தேவைகள் பூர்த்தியாகும், அதிகாரம் மேலோங்கும்.

**தனுசு** தன்னம்பிக்கையோடு பணியாற்றி தடைகளை அகற்றும் நாள், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், ஆலய வழிபாடு ஆனந்தம் தரும்.

**மகரம்** பயணத்தின் போது பொருட்களில் கவனம் தேவை, கணவன்- மனைவியிடையே வாக்கு வாதங்கள் ஏற்படலாம், பணப்பற்றாக்குறை ஏற்படலாம்.

**கும்பம்** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், மதி நுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், பொருட்சேர்க்கையுண்டு.

**மீனம்** தேகாரோக்கியத்தில் புத்துணர்ச்சி தென்படும், உத்தியோக மாற்றம் பற்றிய சிந்தனை உருவாகும், காணாமல் போன பொருளொன்று கைக்கு கிடைக்கலாம்.

வளவன்

## வாரம் ஒரு தகவல்

### ஆயுள் இரகசியம்

"சேர், உங்களுக்கு கைரேகை பார்க்கத் தெரியும் என்று கேள்விப்பட்டேன். என் கையைக் கொஞ்சம் பாருங்க. பிளீஸ்... ஆயுள் ரேகை கெட்டியாக இருக்கிறதா என்று பார்த்துச் சொல்லுங்களேன்."

"ஏன்?"

"நான் ரொம்ப நாளைக்கு வாழ வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்."

"அதற்கு உங்கள் ஆயுள் ரேகையைப் பார்க்காதீர்கள் இந்த ஆய்வு முடிவுகளைப் பாருங்கள்"

"என்ன ஆய்வு இது?"

"டியூக் பல்கலைக்கழகத்தில் மனித ஆயுளை மேலும் 15 வருடம் அதிகரிக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிறார்கள். அண்மையில் இந்த ஆய்வு முடிவுகள் சில வந்திருக்கிறது."

"அவர்கள் என்ன சொல்கிறார்கள்?"

"மனித ஆயுளைக் குறைக்கும் விடயங்கள்- இரத்த அழுத்தம், கொலஸ்ரோல், அதிக எடை, மன அழுத்தம், புகைப்பழக்கம், மதுப்பழக்கம் இவையெல்லாம்தானாம். இதெல்லாம் இல்லையென்றால் ஆயுள் மேலும் 15 வருடங்கள் அதிகரிக்குமாம்."

"அப்படியா?"

"ஆமாம். 30 வயது வரைக்கும் நமது உடம்பு எல்லா வித பிரச்சினைகளையும் சுலபமாக சமாளிக்கிறதாம். அதற்கு மேல் உடல் பலவீனப்பட ஆரம்பித்து விடுகிறதாம். அதனால் 30 வயதானவர்கள் திட்டமிட்ட வாழ்க்கை முறைகளை அமைத்துக் கொள்ள வேண்டியது அவசியமாம்."

"சரி சேர், நீங்கள் சொல்வது போலவே வாழ்ந்து என் ஆயுளை அதிகமாக்கிக் கொள்கிறேன். இருந்தாலும் என் ஆயுள் ரேகையைக் கொஞ்சம் பார்த்து எனக்கு வாழ்க்கையில் ஆபத்து - விபத்து - இப்படி ஏதாவது உண்டா என்று சொல்லுங்களேன்."

"விடமாட்டீங்களே, சரி கொண்டு வாருங்கள் சொல்கிறேன். ம்..... உங்களுக்கு அடுத்த மாதம் 15 ஆம் திகதி ஒரு கண்டம் இருக்கிறது. அதிலிருந்து தப்பிக்கொள்வது ரொம்பக் கஷ்டம்"

"நல்லாப் பாருங்க சேர்,அது போன மாதம் 15 ஆம் திகதி"

"என்ன சொல்றீங்க?"

"ஹி..... அன்றைக்குத்தான் எனக்கு திருமணம் நடந்தது."

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | - |
| உருளைக்கிழங்கு | 60 | 80 |
| பச்சைமிளகாய் | 60 | 100 |
| தக்காளி | 80 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 |
| கோவா | 60 | 70 |
| கரட் | 60 | 80 |
| பூசணி | 50 | 50 |
| புடோல் | 50 | 60 |
| வாழைக்காய் | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 160 | 180 |
| பெரிய வெங்காயம் | 160 | 170 |
| பாகற்காய் | 140 | 180 |
| வெண்டிக்காய் | 30 | 50 |
| கரணைக்கிழங்கு | 40 | 60 |
| பயிற்றங்காய் | 140 | 180 |
| லீக்ஸ் | 120 | 120 |
| பீற்றூட் | 70 | 80 |
| கறிமிளகாய் | 140 | 170 |
| முருங்கைக்காய் | 200 | - |
| போஞ்சி | 100 | 100 |
| கத்தரி தம்புள்ள | 60 | 90 |
| கீரை - 1 பிடி | 20 | 30 |
| தேசிக்காய் | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 60 |

# மரண அறிவித்தல்கள்

## பொன்னுத்துரை பாலச்சந்திரன்



பலாலி கிழக்கை பிறப்பிடமாகவும் சூசையப்பர் கோவிலடி பத்தமேனி அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை பாலச்சந்திரன் நேற்று முன்தினம் 26.11.2010 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை சின்னாச்சி தம்பதியரின் மகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் ஸ்ரீ ரங்கநாதன் (இத்தாலி), செல்வநாயகி, மனோகரன் (இத்தாலி), வனிதா (கனடா), உமா (ஆசிரியை, செட்டிக்குளம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கருணாகரன், ரவீந்திரன், நந்தகுமாரி, றோகினி, அருட்குமரன் ஆகியோரின் மாமனாரும்,

சாரங்கா, சங்கவி, திருக்குமரன், தனுஜா, இந்துஜா, நிருஜா, சாலினி, கேஷனா, தினேஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.11.2010) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் தீத்தாங்குளம் இந்து மயானத்தில் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சூசையப்பர் கோவிலடி,
பத்தமேனி, அச்சுவேலி.

தகவல்:
பெறாமகன் தயா
T.P-0774454662

(3136)

## செல்லத்துரை அன்னலிங்கம்



(தாவடி ஸ்ரீ அம்பலவாண வேதவிநாயகர் ஆலய முன்னாள் பஞ்சாய உறுப்பினரும், கோயில் திருப்பணியைத் தனது இலட்சியமாகக் கொண்டவரும், இளைப்பாறிய காணிப்பதிவாளரும், யாழ்.மேலதிக மாவட்டப் பதிவாளரும், முன்னாள் உடுவில் பிரிவு விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளரும் , அகில இலங்கை சமாதான நீதவானும், ஆங்கில மொழி பெயர்ப்பாளரும்)

தாவடி, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை அன்னலிங்கம் (24.11.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-கதிரமலை தம்பதியரின் அன்புப்புதல்வனும், தாவடி முன்னாள் பிரபல வர்த்தகர் வே.க.கந்தையா-இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் (திரவியம்) அன்புக் கணவரும், செந்தில்குமரேசன் (விவாக,பிறப்பு, இறப்பு பதிவாளர், உடுவில்), சாந்தினி (லண்டன்), கௌரி (லண்டன்) ஆகியோரின் தகப்பனாரும், கௌரிதேவி, இலங்கரத்தினம் (தாசன்-லண்டன்), குகசேனன் செட்டியார் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், நந்ததயாளன், டிலானி, டிலக்ஷி (லண்டன்), டிலக்ஷன், சுவாரகன், சுவாதிகன் (யாழ்.பரியோவான் கல்லூரி மாணவர்கள்), அபிசீத், அஷ்ணவி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் தியோவின் (லண்டன்) ஆசைப் பூட்டனும், தையல்நாயகி (கனடா), செல்வலிங்கம், காலஞ்சென்றவர்களான மகாலிங்கம், சிவபாக்கியம் மற்றும் சிவமணி (கனடா), பூமணி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற மகேஸ்வரி, தனலட்சுமி(சறோசா-லண்டன்), மகாலட்சுமி (ராசாத்தி), கெசலட்சுமி (கெசம்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"கணேசன் கருணை"
தாவடி- மானிப்பாய் வீதி,
தாவடி.

தகவல்:
குடும்பத்தினர்.
தொலைபேசி இலக்கம்:
தாவடி-0212223522, 0213218551
சாந்தி (லண்டன்)-00442084233280,
கௌரி (லண்டன்)-00442085746358

(C-1687)

## 5 ஆயிரம் ரூபா தாள்கள் விரைவில் அறிமுகம்

இலங்கையில் வெகு விரைவில் 5 ஆயிரம் ரூபாய் தாள்கள் புழக்கத்தில் வர உள்ளன. மத்திய வங்கி புதிதாக இத்தாள்களை அச்சிட்டு வெளியிடவுள்ளது.

நாணய சபையின் மேற்பார்வையாளர் சி.பி.ஏ. கருணதிலக இத் தகவலை உறுதிப்படுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

## ஆன்மீக சொற்பொழிவு

'சின்மியா' மிஷனானது யாழ். குடா நாடு முழுவதும் ஆத்மீக சொற்பொழிவுகளை நடாத்தி வருகின்றது. அந்த வகையில் இந்தியாவின் நாகைப்பட்டினளளத்தில் இரு ந்து யாழ்ப்பாணத்திற்கு வருகை தந் திருக்கும் சுவாமி இராமகிஷ்ணா நந்தஜி இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் சொற்பொழிவினை நிகழ்த்தவுள்ளார். (ஸ்ரீ-2)

# மரண அறிவித்தல்

## அமரர் கனகலிங்கம் கனகம்மா

மன்னார், நானாட்டானை பிறப்பிடமாகவும் சாவகச்சேரி கோவிற் குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட கனகலிங்கம் கனகம்மா (26.11.2010) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் அமரர் கனகலிங்கத்தின் அன்பு மனைவியும் மச்சேந்திரராஜா, மச்சேந்திரகுமார் (யாழ்.பல்கலைக்கழகம்), மச்சேந்திரதேவி, மச்சேந்திரதேவன் (லண்டன்) மச்சேந்திரராணி, மச்சேந்திரகுமாரி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற இராசையாவின் சகோதரியும் புவனேஸ்வரி, விமலாதேவி, அரசேஸ்வரன், உவைஷா, பாஸ்கரன், தெய்வேந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் மாமியும் துர்க்கா, பிரியங்கா, தனுக்ஷன், பேபிசாலினி, குலேந்திரன், மயூரன் , செந்தூரன், கோபி, கோகுலன், சஸ்மிகா, யாதவி ஆகியோரின் பேத்தியும் குஷானிக்காவின் செல்லப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்றைய தினமே (16.11.2010) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

2 ஆம் குறுக்குத்தெரு,
சாவகச்சேரி.

தகவல்:
மச்சேந்திரகுமார் (மகன்)
யாழ்.பல்கலைக்கழகம்.

(C-1685)

# மாற்றுத்திறனாளர்களுக்கான முழுநாள் பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட மாற்றுத்திறனாளர்களுக்கான முழுநாள் பயிற்சிப் பட்டறை இதம் உள வளநிறுவனத்தின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை4 மணி வரை நாவற்குழி சான்றோர் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதம் உள நிறுவனமானது மாற்றுத்திறனாளர்களுக்கான உளவளத்துணை, சுயதொழில் விருத்தி உதவி செய்வதுடன் மற்றும் மருத்துவச் சிகிச்சை, செயற்கை அவயவங்கள் பொருத்துதல், நடமாடுவதற்கான உபகரண உதவி போன்றவற்றை ஏனைய நிபுணத்துவம் வாய்ந்த நிறுவனங்களுடனும் பிரதேச செயலக சமூக சேவை பிரிவுடனும் வலைப் பின்னலை ஏற்படுத்தி அவர்களது தேவைகளை நிறைவேற்றி வருகின்றனர்.

இப்பயிற்சிப் பட்டறையில் " ஜெய்ப்பூர் நிறுவன நிகழ்ச்சித் திட்ட அலுவலர் குழாம் தமது நிறுவன செயற்பாடுகள் தமது நிறுவனத்தினூடாக இவர்களுக்கு எவ்வாறு உதவலாம்" என்பது தொடர்பாக படக்காட்சியுடன் கூடிய விளக்கத்தினையும் வழங்கவுள்ளது.

," ஐ.சி.ஆர்.சி. பிரதிநிதி தமது நிறுவன செயற்பாடுகள்," தொடர்பாகவும், "சாவச்சேரி பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் தமது தொழில்பாடுகள் தொடர்பாகவும் சமூகசேவை திணைக்களத்திடம் இருந்து எவ்வாறான உதவிகளை பெற்றுக் கொள்ளலாம்," என்பது தொடர்பாகவும் , "வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் உத்தியோகத்தர்கள் தமது நிறுவன செயற்பாடுகள் தொடர்பாகவும் தமது நிறுவனத்தினூடாக இவர்களுக்கு எவ்வாறு உதவலாம்" என்பது தொடர்பாக்வும் விளக்கமளிக்கவுள்ளதாக சாவகச்சேரி பிரிவு இதம் நிறுவன உளவள பணியாளர் செ.மயூரன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சிகரெட் புகையால் பாதிக்கப்பட்டு வருடந்தோறும் 6இலட்சம் பேர் பலி

## உலகம் முழுவதும் நடத்திய ஆய்வில் தகவல்

சிகரெட் பிடிப்பது உடல்நலத்துக்கு கேடான்து.இதனால் இதய நோய்கள் , புற்றுநோய் போன்றவை ஏற்படுகின்றன.அதே நேரத்தில் சிகரெட் பிடிக்காதவர்களும், பல விதநோய்களால் பாதிக்கப்பட்டு உயிரிழந்து வருகின்றனர். சிகரெட் புகைக்காது விட்டாலும் கூட மற்றவர் விடும் புகையை சுவாசிப்பதால் இதய நோய் மற்றும் சுவாச நோயினால் பாதிக்கப்படுகின்றனர்.

அவ்வாறு பாதிக்கப்படுபவர்கள் குறித்து கடந்த 2004ஆம் ஆண்டு முதல் 192 நாடுகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சிகரெட் புகைக்காமல் அடுத்தவர் பிடித்த சிகரெட் புகையால் பாதிக்கப்பட்டு ஆண்டு தோறும் சுமார் 6 இலட்சம் பேர் பலியாகி வருவது தெரியவந்துள்ளது. அவர்களில் 40 சதவீதம் பேர் குழந்தைகள் மற்றும் 30 சதவீதம் பெண், ஆண் அடங்குவர் .மேலும் இதய நோயினால் 3 இலட்சத்து 79 பேரும் ஒரு இலட்சத்து 65பேர் மூச்சுக் கோளாறு சம்பந்தப்பட்ட நோயினாலும் 36 ஆயிரத்து 900 பேர் ஆஸ்துமாவினா லும் 21ஆயிரத்து 400பேர் நுரையீரல் புற்று நோயி னாலும் ஆண்டு தோறும் மடிகின்றனர். இவ்வாறு இறப்பவர்களில் இது உலகளவில் 1 சதவீதம் என கணக்கிடப்பட்டுள்ளது. சுவீடன் தேசிய சுகாதார நலக்கழக விஞ்ஞா னிகள் நடத்திய ஆய்வில் இது தெரியவந்துள்ளது. (ஸ்ரீ-2)




## வாக்காளர் பதிவு 2010

### வாக்களிப்பதற்கு பதிவு செய்து விட்டீர்களா?

✓ வடக்கு-கிழக்கு மாகாணங்கள் மற்றும் இடம் பெயர்ந்து புத்தளம் மாவட்டத்தில் வாழும் மக்களுக்கான வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் 2010 நவம்பர் 30 ஆம் திகதி வரை தொடரும்.

✓ மேலதிகத் தகவல்கள் மற்றும் படிவங்களை பெற்றுக்கொள்ள இன்றே உங்கள் கிராம சேவை அலுவலர் அல்லது மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளரை அனுகுங்கள்.

இத் தகவலை உங்களுக்கு வழங்குவோர்:

CPA

minority rights group international

# மின் இணைப்புத் திறப்பு விழாவும் கண்காட்சியும்

(யாழ்ப்பாணம்)

யா/தோப்பு அருள்நந்தி வித்தியாலயத்திற்கு புதிதாக வழங்கப்பட்ட மின் இணைப்புத் திறப்பு விழாவும் கண்காட்சியும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு பாடசாலை அதிபர் மு.ராஜவரோதயம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசன் , ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரி த.இராசலிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக வித்தியாலய பழைய மாணவன் நா.நாகேந்திரன் மற்றும் அச்சுவேலி மேற்கு கிராம அலுவர் வி.கோபாலதாஸ் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மேலும் கலைநிகழ்வுகளும் இடம் பெறவுள்ளது. (ஸ்ரீ-2)

# வங்கிக் கடனும் வாழ்க்கைத்தரமும் (1)



இலங்கையில் தற்போது யுத்தம் முடிவுக்கு வந்ததையிட்டு ஏலவே இருந்த வங்கிகளும் புதிய புதிய வங்கிகளும் தமிழ் பிரதேசங்களை நோக்கி நகர்ந்து தமது கிளைகளை திறந்து வருகின்றன.

இவ்வங்கிகள் மக்களிடமிருந்து வைப்புப் பணங்களை சேமிப்பதில் உள்ள ஆர்வத்தையும் அதற்கு கொடுக்கின்ற விளம்பரங்களையும் நோக்கும் போது இச்சேமிப்பு பணங்களிலிருந்து மீண்டும் மக்களுக்கே கடனாக வழங்கி, அவர்களது வாழ்க்கையின் அபிவிருத்திக்கு உதவும் தொகை மிகவும் குறைந்த விகிதாசாரமே என்பது பலரது அபிப்பிராயமாகும்.

மக்கள் தங்கள் முக்கியமான தேவைகளுக்கு வங்கிகளை அணுகுவதில்லை என்பது வங்கிகள் சார்பாக வைக்கப்படும் நியாயமாகும்.

கிராமிய மக்களின் வாழ்வை வளம்படுத்துகின்ற ஜீவனோபாய வழிகள் மற்றும் வருமானம் ஈட்டும் வியாபாரங்களை விருத்தி செய்வதற்குக் கடன்களை வழங்கி கூடுமான அளவு அரச வங்கிகளும் மற்றும் தனியார் வங்கிகளும் இலங்கை மத்திய வங்கியினால் பணிக்கப்பட்டுள்ளன.

வறுமை ஒழிப்புக் கடனாக ரூபா 50 ஆயிரம் தொடக்கம் மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் ரூபா 50 இலட்சம் வரை ஒருவர் கடனாகப் பெற முடியும்.

வங்கி என்பது வெறுமனே இலாபத்தை மட்டும் இலக்காகக் கொண்டு இயங்கும் ஒரு நிதி நிறுவனமல்ல.

தனிப்பட்ட மனிதனின் அல்லது குழுக்களின் தொழில் மேம்பாட்டுக்கு உதவுவதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி தேச அபிவிருத்திக்கு உறுதுணையாக இருப்பதும் வங்கிகளின் கடமையாகும்.

தொழில் அபிவிருத்திக்கான கடனுக்குத் தேவைப்படும் சகல தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய ஒருவருக்கு வங்கி முகாமையாளர் ஒருவர் கடன் வழங்க மறுப்பாரேயாயின் அவர் தனி மனிதனின் உயர்ச்சிக்கு இடையூறாக இருப்பதோடல்லாமல் தேச நலனுக்கும் குந்தகமாக இருக்கிறார் என்பதாகவே அர்த்தப்படும். அதிலும் யுத்தத்தால் சகலவற்றையும் இழந்து போயுள்ள வடக்கு, கிழக்கு மக்களின் மீள்கட்டுமானங்களிலிருந்து தம்மை முற்றாக விடுவித்துக் கொண்டவராகவே கருதப்படுவார்.

**வருமானம் ஈட்டும் செயல்களுக்கான வங்கிக்கடன்**

1.1 நிதி ஏன் தேவைப்படுகிறது?

- புதிதாக வியாபாரமொன்றை ஆரம்பிப்பதற்கு
- ஏற்கனவே நடாத்துகின்ற வியாபாரத்தை முன்னேற்றுவதற்கு

1.2 எவ்வாறு நிதி தேடலாம்?

- தனது சேமிப்பின் மூலம்
- கடன் பெறுவதன் மூலம்

சிறு தொழில் முயற்சியாளர் ஒருவர் காலாகாலம் சேமித்து வைத்த பணம் மாத்திரம் வியாபாரத்திற்கு போதுமானதாக இல்லாவிடின் வெளியிலிருந்து கடன்பெற நேரிடும். தனியார் கடன் வழங்குநர்களிடமிருந்து அத்தகைய கடன் ஒன்றைப் பெறுவதாயின் கூடிய வட்டியைச் செலுத்த வேண்டி ஏற்படும்.

**வங்கித்துறையிலிருந்து கடன் பெறுவதால் ஏற்படும் நன்மைகள்**

- வட்டி வீதம் குறைவு
- சிறிய வியாபாரம் ஒன்றிற்கு வழங்கப்பட்ட கடன் தொகையைத் திருப்பி செலுத்துவதற்கு 3 தொடக்கம் 5 வருடங்கள் வரை நீண்ட காலம் வழங்கப்படுகிறது. மாதாந்த தவணைகளில் கடனைச் செலுத்தலாம். மாதாந்த தவணைகளில் கடன் செலுத்தப்படும் போது வட்டியுடன் முதலும் சேர்த்தே செலுத்தப்படுவதால் கடன் முற்றாக இல்லாதொழிகின்றது.
- அபிவிருத்தி நோக்கத்திற்காக கடன் வழங்கப்படுகின்றமையால் தேசிய அபிவிருத்திக்கும் உறுதுணையாதல்.
- மேலும் எதிர்கால நலன் கருதி, வங்கியின் பிரதான வளமாகிய சிறந்த வாடிக்கையாளராக உருவாதல்.

அரசாங்க மற்றும் தனியார் துறையில் பல வர்த்தக வங்கிகள் காணப்படினும் கிராமியத்துறையின் சிறிய, பெரிய வியாபார அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு முக்கிய பங்களிப்பது பின்வரும் வங்கிகளாகும்.

**பி.கிருஷ்ணானந்தன்**
முகாமையாளர்,
மக்கள் வங்கி,
வல்வெட்டித்துறை.

- மக்கள் வங்கி
- இலங்கை வங்கி
- ஹற்றன் நஷனல் வங்கி
- செலான் வங்கி
- வர்த்தக வங்கி
- சம்பத் வங்கி
- இவற்றுடன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுடன் இணைக்கப்பட்ட 1086 கிராமிய வங்கிகளும் மற்றும் சமுர்த்தி திட்டத்தின் கீழ் சமுர்த்தி வங்கிகளும் சிறுசிறு அளவிலான கடன்களை வழங்குகின்றன.

(தொடரும்)

# வடமராட்சியில் தொடர்ந்து கனமழை; தாழ்வுப்பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கின

## நூற்றுக்கணக்கான மக்கள் இடப்பெயர்வு



(கரவெட்டி)

வடமராட்சி பிரதேசங்களில் இருநாட்களாக தொடர்ந்து பெய்த கனமழையினால் தாழ்வுப் பிரதேசம் மற்றும் மண்குடிசைகளுக்குள் மழை வெள்ளநீர் உட்புகுந்தமையால் பல நூற்றுக் கணக்கான மக்கள் நேற்று அதிகாலை இடம் பெயர்ந்து அருகில் உள்ள ஆலயம், தேவாலயம் , பாடசாலை, பொதுமண்டபங்களில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

கரையோரப் பிரதேசமான பருத்தித்துறை , இன்பசிட்டி, சக்கோட்டை, பொலிகண்டி , திக்கம் , வல்வெட்டித்துறை, கெருடாவில் ஆகிய தாழ்வுப் பிரதேசங்களிலும் மற்றும் வடமராட்சி பிரதேசங்களில் மண் குடிசைகளிலும் வசித்துவரும் மக்களே இவ்வாறு இடம் பெயர்ந்துள்ளனர்.

சக்கோட்டை தேவாலயத்தில் பல நூற்றுக் கணக்கான மக்கள் இடம்பெயர்ந்திருந்ததுடன் நேற்றுக்காலை 10 மணிக்கு அவர்கள் தமது வீடுகளுக்குச் சென்றுள்ளனர்.

அவ்விடத்தைச் சேர்ந்த குடும்பத்தலைவி ஒருவர் தெரிவிக்கையில், தனது கணவர் ஓமந்தை தடுப்பு முகாமில் இருப்பதாகவும் தாமும் இரண்டு பிள்ளைகளும் மண்குடிசையில் வாழ்ந்து வருவதாகவும் அதிகாலை 3 மணிக்கு வெள்ள நீர் தமது வீட்டுக்குள் உட்புகுந்தமையால் தாம் இடம்பெயர்ந்து அருகில் உள்ள தேவாலயத்தில் தஞ்சமடைந்ததாக தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்கள் இது குறித்து தெரிவிக்கையில் , தம்மை இதுவரை எந்த அரச அதிகாரிகளும் வந்து பார்க்கவில்லை என்றும் எனவே, உரிய அதிகாரிகள் பாதிக்கப்பட்ட மக்களை வந்து பார்த்து நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-24)

# காலாவதியான பொருட்கள் விற்கப்படுவதாக விசனம்

கிளிநொச்சியில் அம்பாள்குளம் , உதயநகர் போன்ற இடங்களிலுள்ள சிறிய கடைகளில் காலாவதியான பால்மா, பிஸ்கெட் வகைகள் என்பன விற்கப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் வாணிப நிலையங்களில் காட்சிப் படுத்தலுக்காக மென்பானங்கள் வெளியில் வைக்கப்படுவதாகவும் இதனால் அவற்றில் சூரிய ஒளிபட்டு மென்பானங்களின் தன்மை இழக்கப்பட்ட நிலையில் அவை விற்கப்படுவதாகவும் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ)

# வீட்டுத்திட்டப் போட்டியில் வெற்றியீட்டியோருக்கு பரிசில்

"நாம் பயிரிடுவோம் நாட்டைக் கட்டியெழுப்புவோம்" எனும் தொனிப் பொருளிலான தேசிய செயற்றிட்டத்தின் கீழ் 2009/2010 இற்கான வீட்டுத் தோட்டப்போட்டி நடத்தப்பட்டது.

இதில் வெற்றியீட்டிய கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் விவசாயக் குழுக்களுக்கான ஒன்று கூடலில் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (ஸ்ரீ)

# யாழில் சிங்களவர் மீள்குடியேறுவதற்கேற்ப தேச வழமைச் சட்டத்தைத் திருத்த வேண்டும்

## என்கிறார் சுஜீவ எம்.பி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வழக்கிலுள்ள தேச வழமை சட்டத்ததை திருத்த வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் கூறியுள்ளார்.

கொழும்பில் சகல இன மக்களும் ஒற்றுமையாக வாழ்கின்றனர். இதேபோன்று யாழ்ப்பாணத்திலும் சகல இன மக்களும் வாழ வேண்டும். இதனால் சிங்கள மக்கள் அங்கு குடியேறுவதற்கேற்ப தேச வழமைச் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க குறிப்பிட்டுள்ளார். யாழ்ப்பாணத்தில் சிங்கள குடியேற்றங்கள் இடம் பெறுவதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் கூறியமைக்கு பதிலளிக்கும் முகமாகவே நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஓர் இனவாதியல்ல எனவும் அவர் இவ்விடயத்தை ஆராய்வார் என்றும் அவர் கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

# நாணயங்களில் தளர்வு நிலையை ஏற்படுத்துவதற்கு வரவு-செலவுத்திட்டம் வழிவகை செய்துள்ளது

## மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

நாணயங்களில் தளர்வு நிலையை ஏற்படுத்துவதற்கு வழிவகை செய்துள்ள வரவு-செலவுத் திட்டம் நாட்டின் எதிர்காலப் பயணத்திற்கு முக்கியமாக பங்களிப்புச் செய்யும் என்று மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

நாட்டில் 2.5 மில்லியன் டொலராக இருந்த வெளிநாட்டு நாணயம் தற்போது 7 மில்லியனாக அதிகரித்து இருக்கின்றது. இந்நாட்டின் வர்த்தகர்கள் வெளிநாடுகளில் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு வெளிநாட்டு வருமானங்களை தேடிக்கொள்ள முடியுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படும் பட்சத்தில் வெளிநாட்டு வர்த்தகர்கள் முதலீடுகளுக்காக நாட்டில் வெளிநாட்டு நாணயங்களை பயன்படுத்துவதற்கும் வரவு -செலவுத் திட்டத்தில் வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய நடவடிக்கைகள் அனைத்தும் நாணயக் கட்டுப்பாட்டு திணைக்களத்தின் பூரண கண்காணிப்பின் கீழ் இடம்பெறும்.

உயர் கல்வியை மேற்கொள்ள வெளிநாடுகளுக்குச் செல்வதற்காக மாணவர்கள் வருடந்தோறும் ஆயிரம் மில்லியன் டொலர்களை செலவிடுகின்றனர். இந்தக் கல்வி நடவடிக்கைகளை உள்நாட்டிலேயே மேற்கொள்வதன் மூலம் இத்தொகையை மிச்சப்படுத்திக் கொள்ள முடியும்.

வரவுத் திட்டத்தில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட வரித் தளர்வு முறைமூலம் முதலீட்டாளர்களுக்கு இந்த நாட்டில் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். இதற்கு வரவு- செலவுத் திட்டத்தின் மூலம் வர்த்தகர்கள் ஊக்குவிக்கப்பட்டுள்ளார்கள் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# நந்தலாலா



சித்திரம் பேசுதடி, அஞ்சாதே ஆகிய வித்தியாசமும்,விறுவிறுப்பும் மிக்க வெற்றிப்படங்களை இயக்கிய மிஷ்கின், கதையின் நாயகராக நடித்து, இயக்கியும் இருக்கும் வித்தியாசமான படம்தான் நந்தலாலா. அவர் இயக்கத்தில் வெளிவந்த மற்றப்படங்களைப் போன்று விறுவிறுப்பு இல்லாமல் விருதுப் படங்களைப் போன்று வித்தியாசமான கதையும், காட்சியமைப்புக்களும்தான் நந்தலாலா படத்தின் பலமும் பலவீனமும்.

இப்படம் வெளிவராமல் எத்தனையோ நாட்கள் தாமதமானதில் இருந்தே இது எத்தனை நல்ல படம் என புரிந்திருக்கும். பாட்டியின் அரவணைப்பில் வளரும் சிறுவன் ஒருவன் பள்ளி சுற்றுலாவிற்கு போவதாக பாட்டியிடமும், வேலைக்கார அம்மாவிடமும் சொல்லிவிட்டு சுற்றுலாவுக்குப் போகாமல் தன் தாயை தேடி தன் தாய் இருப்பதாக பாட்டி சொல்லி வரும் கிராமத்திற்கு கிளம்புகிறான். அதேநேரம், சின்ன வயதிலேயே தன் தாயால் மனநல காப்பகத்தில் விடப்படும் மனநோயாளியான கதையின் நாயகனும் தன் தாயை தேடி காப்பக காவலாளி ஒருவரை அடித்துப்போட்டு: விட்டு அவரது உடையில தாயைத் தேடி கிளம்புகிறார்.

தாயைத் தேடிச் செல்லும் இந்த இருவரும் எதிர்பாராதவிதமாக ஒன்றுசேர, இருவரும் சேர்ந்து தங்களது அம்மாக்களை தேடி கண்டுபிடித்தார்களா? இல்லையா ? என்பதுதான் நந்தலாலா படத்தின் மொத்த கதையும்!

இப்படி ஒரு கதையை இயக்குநர் மிஷ்கின் காட்சிப்படுத்தியிருக்கும் விதம்தான் வித்தியாசமோ வித்தியாசம். அதிலும் இவரது கிராமத்துப் பெயர் தாய்வாசல் என்றும், அந்தச் சிறுவனின் பெயர் அன்னை வயல் என்றும் சென்டி மெண்ட்டால் பெயர் சூட்டியிருப்பதில் தொடங்கி, பரபரப்பான நெடுங்சாலைகளில் நடந்தே வரும் இருவரும் பண்ணும் சேட்டைகள் வரை சகலத்திற்கும் கோட்டைவிடாமல் மிக அழகாக ஒருபடத்தை முயற்சித்திருக்கிறார் ரைடக்டர் மிஷ்கின்.



திரை விமர்சனம்

கதையின் நாயகராக மிஷ்கின் கலக்கலாக நடித்திருக்கிறார். அதுவும் முட்ட முட்ட முழிக்கும் தனது விழிகளாலேயே தனது மன வியாதியை வெளிப்படுத்தும் இடங்கள் சுப்பர். அதேநேரம் சிறுவனின் தாய் வேறு ஒருவருடன் வாழ்வதை சிறுவனிடம் மறைக்கும் அளவிற்கு விவரம் தெரிந்த மிஷ்கினுக்கு, பாண்ட்டை போட்டுக்கொள்ளத் தெரியாதது, சின்னத்தம்பி பிரபு மாதிரி நம்ப முடியாமல் இருக்கிறது.அதேமாதிரி அவர் கையில் பிடித்துக்கொண்டே திரியும் பாண்ட்டை பாதி படத்திற்கு மேல் ஒரு நாடாமூலம் கட்டி விடும் பள்ளிமாணவி, சைக்கிளில் போய் டிராக்டரில் திரும்பி வரும் காட்சிகள், மிலிட்டரி கெட்-அப்பில் பைக்கில் இரண்டு குண்டு ஆசாமிகள் வரும் காட்சிகளும்,டிரக்- லொறி உள்ளிட்டவைகளில் மிஷ்கினும், சிறுவனும் தப்பிக்கும் இடங்களும் வேறு ஏதோ அயல்நாட்டு மொழிப் படங்களில் பார்த்தஞாபகம் விலைமாதுவாக வரும் ஸ்னிக்தா,னும் அவரை பழங்கால காரில் துரத்தும் கிழவரும் லொறியில் இரும்பை பிடுங்கி வந்து அதனால் மிஷ்கின் அடிபடும் இடங்களும் இளநீர் காரரிடம் இளநீர் திருடி, பின் அவரது மயக்கம் தாகத்திற்கே இளநீர் தரும் இடங்களும் மிஷ்கினின் இயக்கத்திற்கு சான்று.

மிஷ்கின் மாதிரியே விலை மாதராக வரும் ஸ்னிக்தா, பள்ளி மாணவி , இளநீர் வியாபாரி , மனநோயாளியாக வரும் ரோஹினி , பள்ளி சிறுவன் என சகலரும் பளிச் என்று நடித்திருக்கிறார்கள்.விருதை மட்டுமே குறிவைத்து படம் வேகமே இல்லாமல் பயணிக்கும் விதம் வெறுப்பை ஏற்படுத்தினாலும், இரசனை மிகுந்தவர்களுக்கு லாலா கடை இனிப்பு இந்த நந்தலாலா என்றால் மிகையல்ல...!

## வடிவேலுவை முந்தும் சந்தானம்



தமிழ் திரையுலகில் நகைச்சுவை நடிகர்களில் வடிவேலுக்கு அடுத்தபடியாக சந்தானம் இருக்கிறார். யங் ஹீரோ முதல் சுப்பர்ஸ்டார் வரை நடித்துள்ள சந்தானத்திற்கு சுக்கிரன் உச்சத்தில் உள்ளார். அவர் சமீபத்தில் நடித்து வெளியான படங்கள் ஹிட் ஆகி இருப்பதால் திரைப்பட தயாரிப்பாளர்களும் வடிவேலுக்கு பதில் சந்தானத்தை புக் செய்து வருகின்றனர்.

இதற்கு இன்னொரு காரணம் இருக்கு.. தமிழ் திரையுலகில் அதிக சம்பளம் வாங்கும் நகைச்சுவை நடிகர் வடிவேலு. ஒரு நாள் சம்பளமாக ஏழிலிருந்து பத்து இலட்சம் வாங்குகிறார். வடிவேலு நடிக்கும் படங்களும் ஹிட் ஆகி வருகிறது. ஆனால் சந்தானம் வடிவேலுவை விட 2 இலட்சம் குறைவாக வாங்குவதால் தான் தயாரிப்பாளர்கள் சந்தானத்தை புக்செய்து வருவதாக பேச்சுக்கள் அடிப்பட்டு வருகின்றன.

வடிவேலு இந்த இடத்தை அடைய எடுத்துக் கொண்ட பல வருடங்கள். சந்தானம் சில வருடங்களிலேயே ஐந்து இலட்சத்தை எட்டிப் பிடித்திருக்கிறார்.

மேலும் வடிவேலுவைவிட இப்போது இவர்தான் அதிகபடங் களில் நடித்து வருவதாக சினிமா வட்டார பட்சி சொல்கிறது.

# பிரபு தேவாவின் புதிய காதலி ஹன்சிகா



ஜெயம் ரவி - ஹன்சிகா மோட்வானியை ஜோடியாக வைத்து ''எங்கேயும் காதல்'' என்ற படத்தை பிரபுதேவா இயக்கி உள்ளார். விரைவில் திரைக்கு வர இருக்கிறது எங்கேயும் காதல். இதன் படப்பிடிப்பில் ஹன்சிகாவும் பிரபு தேவாவும் நெருக்கமாகி விட்டதாக கிசு கிசு பரவியது. வெளி நாடுகளில் படப்பிடிப்பு நடந்த போது இருவரும் சேர்ந்து சுற்றினர்.

ஹோட்டல்களிலும் ஒன்றாக தங்கியதாக படக் குழுவினர் முணுமுணுத் தனர்.

ஐதராபாத்தில் உள்ள நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் ஹன்சிகாவுக்காக சிறப்பு விருந்துக்கும் பிரபுதேவா ஏற்பாடு செய்தாராம். இந்த விருந்து விடயம் நயன்தாரா காதுக்கு எட்டியதும் உடனடியாக கேரளாவில் இருந்து விமானம் பிடித்து ஐதராபாத் போய் இறங்கியுள்ளார்.

பிரபுதேவா - ஹன்சிகா இருவரையும் கையும் களவுமாக பிடித்து ஆவேசமாக திட்டி தீர்த்தார்.

பிரபு தேவாவுடன் கடுமையாக வாக்குவாதத்தில் ஈடுபட்டார் என்று ஹோட்டல் ஊழியர்கள் தெரிவித் துள்ளனர்.

''நம்பி வந்த என்னை மோசம் செய்து விட்டீர்களே'' என்று நயன்தாரா தலையில் அடித்து அழுததாகவும் கூறப்படுகிறது. இதனால் பிரபுதேவா நயன்தாராவை கழற்றிவிட்டு ஹன்சிகாவை திருமணம் செய்து கொள்ளப்ப போகிறார் என்றும் ஆந்திர திரையுலகம் பேசிக் கொள்கிறது.

ரம்லத்தின் சாபம் சும்மா விடுமா நயன்தாராவை! அட அதை விடுங்க சிம்பு வீட்ல வெடி வெடிக்கிறாரே சத்தம் காதுக்கு கேக்குதா....




# சிம்புவை நம்பி தலையை கொடுக்கும் ஜெய்!

சுப்ரமணியபுரம் படத்திற்கு பின்னர் அடுத்த ஹிட்டாக காத்திருக்கின்றனர் ஜெய். ஆனால் அவர் தனியாக நடித்த படங்கள் அனைத்தும் தோல்வி அடைந்தது. அதனால் தற்போது டபுள் ஹீரோ சப்ஜெக்டில் இறங்கியுள்ளார் ஜெய். தற்போது முருகதாஸின் அசிஸ்டெண்ட் சரவணன் இயக்கும் படத்தில் ஜெய் பசங்க ஹீரோ விமலுடன் நடிக்கிறார். இது மட்டும் இன்னொரு டபுள் ஹீரோ சப்ஜெக்டிலும் அவர் கமிட்டாகியுள்ளார்.அந்தப் படம் சிம்புவின் வேட்டை மன்னன்.



இந்தப் படத்தில் முக்கியமான வேடம் ஒன்று வருகிறது. அதில் நடிக்க பலரை யோசித்த சிம்பு இறுதியில் தனது நெருங்கிய நண்பரான ஜெய்யையே தேர்வு செய்திருக்கிறார். சிம்பு படத்தில் மற்றவர்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் இருக்கும் என்பது தெரிந்ததே.

இந்த வேட்டைக்கு ஜெய் தலையை கொடுத்திருப்பது ஆச்சரியம்.

# அஜித் பிறந்தநாளில் மங்காத்தா

சென்னை -28, சரோஜா, கோவா ஆகிய வெற்றிப் படங்களை இயக்கிய வெங்கட் பிரபு, தயாநிதி, அழகிரி தயாரிப்பில் அஜித்தை வைத்து இயக்கி வரும் படம் மங்காத்தா. இதில் அஜித் ஜோடியாக த்ரிஷா நடித்துள்ளார். யுவன்சங்கர் ராஜா படத்திற்கு இசையமைத்துள்ளார்.



இது அஜித்தின் 50ஆவது படம் என்பதால் ரசிகர்கள் இடையே மிகுந்த எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. பட்டப்படிப்பு ஆரம்பமாகி மும்முரமாக நடைபெற்று வருகிறது. படத்தின் ஓபனிங் சோங்கை பாங்கொக்கில் முடித்து சென்னை திரும்பியுள்ளனர் படக்குழுவினர். படத்தின் பாடல் வெளியீட்டு விழா 2011ஆம் ஆண்டு ஏப்ரல் 14ஆம்திகதி வெளியிடவும், படத்தை மே 1 அஜித் பிறந்தநாளில் ரிலீஸ் செய்யவும் திட்டமிட்டுள்ளனர். இதனால் அஜித் ரசிகர்கள் மிகுந்த உற்சாகமடைந்துள்ளனர்.-





தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகம் அண்மையில் அல்லாரைக் கிராமத்தில் மாதர் சங்க அனுசரணையுடன் டெங்குநோய் விழிப்புணர்வுக் கருத்தரங்கை நடாத்தியது.இக் கருத்தரங்கில் டாக்டர் எஸ்.எஸ்.அருளானந்தம் எம்.ஜெ.எப். உரையாற்றுவதையும் அருகில் கழகத் தலைவர் லயன் எஸ்.தேவகுமார், முன்னாள் தலைவர்களாகிய லயன் ஆர்.கந்தையா, லயன் சி.சரவணமுத்து, கிராமசேவகர் ஆகியோர் இருப்பதையும், பங்குபற்றிய மக்களுக்கு லயன் ஏ. கலைச்செல்வன் துண்டுப்பிரசுரம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## பிரதான வெளிநாட்டு வர்த்தகர்களுக்கு மல்டிபல் விசாக்களை வழங்க தீர்மானம்

(கொழும்பு)

இலங்கையில் முதலீடுகளை செய்துள்ள மற்றும் புதிதாக முதலீடுகளை ஆரம்பிக்கும் பிரதான வெளிநாட்டு வர்த்தகர்களுக்கு விரும்பியபோது தடைகள் சென்று வரும் (மல்டிபல்) விசாக்களை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரங்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் இந்த விசாக்கள் வழங்கப்படவுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் முதலீடு செய்துள்ள வெளிநாட்டு வர்த்தகர்கள் பல வருடகாலமாக சுற்றுலா விசாக்களிலேயே இலங்கைக்கு வருகின்றனர். இதற்காக அவர்கள் பல பொய்யான தகலவ்களை வழங்கவேண்டியுள்ளது.

இது அவர்களின் ஆத்ம கௌரவத்திற்கு பிரச் சினையான விடயம்.இதனால் விரும்பிய தடவைகள் இலங்கைக்கு வரும் வகையில் விசாக்களை வழங்க தீர்மானித்துள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் தெரிவித்துள்ளார்.கொழும்பு ஜெய்க் ஹில்டன் விடுதியில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## மலையக மக்களை இந்திய வம்சாவளியினரென அழைப்பதை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை

### பிரதமர் தெரிவிப்பு



(கொழும்பு)

ஏனைய நாடுகளை விட இலங்கைக்கு இந்தியாவின் மீதே கூடுதலான நம்பிக் கை உள்ளது. எனவே இந்த நம்பிக்கையும் நீண்ட நாள் நட்புறவும் ஒரு போதும் பாதிப்படையக்கூடாது. மலையக மக்கள் இந்திய வம்சாவளியினர் என்று அழைக்கப் படுவதை நான் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. அவர்கள் இலங்கையர்களேயாவர் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். எம்.கிருஷ்ணாவிடம் பிரதமர் டி.எம்.ஜயரட்ண எடுத்துக்கூறியுள்ளார். உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா மற்றும் இந்திய வெளிவிவகாரச் செயலர் நிருபமாராவ் உட்பட குழுவினர் நேற்று முன்தினம் பிரதமர் அலுவலகத்தில் பிரதமர் ஜயரட்ணவை சந்தித்துப் பேசினர். இதன்போது மேற்கண்டவாறு பிரதமரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சந்திப்பு தொடர்பாக பிரதமர் தெளிவுபடுத்துகையில்,

இந்திய வெளிவிவகார அமைச்சரும் அவரது குழுவினரும் என்னுடன் சந்திப்பொன்றை மேற்கொண்டு இலங்கை- இந்திய நீண்டநாள் நட்புறவு தொடர்பாகவும் தற்போதுள்ள பிரச்சினைகள் குறித்தும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தனர்.

எவ்வாறாயினும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டின் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு இந்தியா தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்குமென வெளிவிவகார அமைச்சர் மேலும் சுட்டிக்கட்டினார். மலையக மக்கள் குறித்து பேசப்பட்ட போது மலையக மக்கள் இந்திய வம்சாவளியினர் அல்ல. அவர்கள் இலங்கையர்கள் என்று நான் எடுத்துக் கூறினேன் என்றும் பிரதமர் தெரிவித்தார். (ஸ்ரீ)

## ரிசானாவின் விடுதலை கோரி அமைச்சர் ரிசாட் சவுதி விஜயம்

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் மரண தண்டனைக் கைதியாக இருந்து வரும் இலங்கைப் பணிப்பெண் ரிசானா நௌபீக்கை விடுவிப்பதற்காக கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிசாத் பதியுதீன் விரைவில் அந்நாட்டுக்குச் செல்லவுள்ளார்.

அமைச்சர் இது தொடர்பாக வழங்கிய பேட்டி ஒன்றில் தெரிவித்ததாவது, நான் சவுதி அரேபியாவுக்கு விரைவில் செல்ல உள்ளேன். உயிர் இழந்த குழந்தையின் தந்தையை நேரில் சந்தித்து ரிசானாவை மனிதாபிமான அடிப்படையில் மன்னிக்க வேண்டும் என்று கோர உள்ளேன். சவுதி அரேபியாவின் நீதி மன்ற தீர்ப்பை இலங்கை மதிக்கின்றது. குழந்தையை இழந்த பெற்றோரின் துன்பத்திலும் பங்கெடுக்கின்றது. ஆனால் குழந்தையை இழந்த பெற்றோரின் பொது மன்னிப்பை பெறுவதன் மூலம் ரிசானாவின் தலைவிதி யை மாற்றலாம் என்று பகீரத முயற்சிகளை மேற்கொள்கின்றது.

2005 ஆண்டு சவுதிக்கு பணிப்பெண்ணாக சென்றபோது ரிசானா 17 வயதுச் சிறுமி. கடவுச்சீட்டில் பிறந்த நாள் மோசடி செய்யப்பட்டே சவுதிக்கு கொண்டு வரப்பட்டிருக்கின்றார்.

இவருக்கு ஆயா வேலை அங்கு வழங்கப்பட்டிருக்கின்றது. வேலைக்கு சேர்ந்த இரண்டாம் வாரத்தில் எஜமானரின் குழந்தை புட்டிப் பால் குடித்துக் கொண்டிருந்தபோது புரையேறி இறந்துவிட்டது.

ஆனால் ரிசானா குழந்தையை கொன்று விட்டார் என்று குழந்தையின் பெற்றோர் குற்றம் சாட்டி உள்ளனர்.

அந்நாட்டு கீழ் நிலை நீதிமன்றம் மாத்திரம் அன்றி உயர்நீதிமன்றமும் குற்றவாளியாக கண்டு மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கி உள்ளது.

ரிசானாவுக்கு பொதுமன்னிப்பு வழங்க வேண்டும் என்று சவுதி அரசருக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விண்ணப்பித்து உள்ளார். தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களிடையே ரிசானா விவகாரம் மிகுந்த அனுதாபத்தை ஏற்படுத்தி உள்ளது.

மூவின மக்களும் ரிசானாவின் விடுதலைக்காக பிரார்த்திக்கின்றனர். மன்னிப்பு மிக உயர்ந்த தெய்வீகப் பண்பு. குழந்தையின் பெற்றோர் ரிசானாவை மன்னிப்பார்கள் என்று நான் நம்புகின்றேன். ரிசானா மீது காருண்யம் காட்டுவார்கள் என்று விசுவாசிக்கின்றேன் என்றார். (ஸ்ரீ)

## இத்தாலி செல்ல முயன்ற நிலையில் கைது செய்யப்பட்டவர் பிணையில் விடுதலை

(கொழும்பு)

போலி விசாவுடன் கூடிய போலி கடவுச் சீட்டை பயன்படுத்தி இத்தாலி செல்ல முயன்ற நிலையில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் ஒருவரை நீர்கொழும்பு நீதவான் ஜயகி டி. அல்விஸ் 3 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா ரொக்கப்பிணையிலும், சரீர பிணையில் விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார்.

இத்தாலியைச் சென்றடைந்ததும் 22 இலட்சம் ரூபாவை வழங்கும் வாக்குறுதியுடன் சந்தேகநபர் இத்தாலிக்கு செல்லவிருந்தார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ். சுந்தரலிங்கம் என்பவருக்கே பிணை வழங்கப்பட்டுள்ளது. சட்ட விரோதமாக இத்தாலி செல்ல முயற்சித்த போது டுபாய் அதிகாரிகளினால் கைது செய்யப்பட்ட இவர் கடந்த 12 ஆம் திகதி நாடு கடத்தப்பட்டார்.

நாடு கடத்தப்பட்ட அவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணி கொட்பிறி. குரே ஆஜராகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான பிரதிநிதிகளின் பெயர்கள் பரிந்துரை

சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான பிரதிநிதிகளின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏழு சுயாதீன ஆணைக்குழுக்களுக்குமான பிரதிநிதிகளின் பெயர் விபரங்கள் பாராளுமன்றப் பேரவைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி செயலகத்தினால் இந்த பெயர் விபரங்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த மாதம் நடுப்பகுதியளவில் சுயாதீன ஆணைக்குழுக்களின் நடவடிக்கைகள் ஆரம்பமாகும் என ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

பிரதிநிதிகள் தொடர்பான பரிந்துரைகளை பாராளுமன்றப் பேரவை ஏழு நாட்களுக்குள் சமர்பிக்க வேண்டும் எனவும் இப் பேரவையின் அனுமதியுடனோ அல்லது இல்லாமலோ ஜனாதிபதி சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு நியமனங்களை மேற்கொள்ள முடியும் எனவும் குறிப்பிடப்படுகிறது.

தேர்தல்,ஊழல் மோசடி தவிர்ப்பு, நிதி, மனித உரிமைகள், பொலிஸ், பொதுச்சேவை மற்றும் எல்லை நிர்ணயம் ஆகிய சுயாதீன ஆணைக் குழுக்கள் நிறுவப்பட உள்ளன. (ஸ்ரீ-2)

## 106 வருடங்கள் பழைமையான லொக்கர் கண்டு பிடிப்பு

(கொழும்பு)

106 வருடங்கள் வரை பழைமையான பெரிய லொக்கர் ஒன்று மூடப்பட்ட நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலை வளவில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த லொக்கர் இரும்பினால் ஆனது. அத்துடன் சுவரோடு சேர்த்துக் கட்டப்பட்டு இருக்கின்றது.

லொக்கருக்கு நான்கு கதவுகள் உள்ளதுடன் கவும் ஒரே ஒரு பட்லொக் மாத்திரம் இதை பூட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

இது பிரித்தானியர் காலத்துக்கு உரிய லொக்கர் என்று நம்பப்படுகின்றது.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் மேற்பார்வையில் 106 ஆண்டுகள் பழைமை வாய்ந்த கட்டிடம் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை ஒன்றின் போதே இந்த லொக்கர் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

கடந்த 1904 ஆம் ஆண்டு பிரித் தானியர்களால் இக் கட்டிடம் கட்டப்பட்டு இருக்கின்றது. அமைச்சுப் பேச்சாளர் இத்தகவலை உறுதிப்படுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

# வரவு - செலவுத் திட்டம் 2011

2011-ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் கடந்த 22-ம் திகதி ஜனாதிபதியும், நிதி அமைச்சருமான மகிந்த ராஜபக்ஷவால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அரசாங்க ஊழியர்களுக்கு 5% சம்பள அதிகரிப்பு, தனியார் துறையினருக்கு ஓய்வூதியத் திட்டம், சர்வதேச அழைப்புக்களுக்கான கட்டணம் 2 ரூபாயால் அதிகரிப்பு, ஆழ்கடல் மீன் பிடிக்கு நீண்ட கால கடன் வசதி உட்பட பல முன்மொழிவுகள் வைக்கப்பட்டன.

2011-ம் ஆண்டுக்கான மொத்த வருமானம் 986.1 பில்லியன், மொத்த செலவினம் 1419.9 பில்லியன், பற்றாக்குறை 433.8பில்லியன் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கடந்த கால பட்ஜட்கள் .....

| ரூபாய் பில்லியனில் | 2007 | 2008 | 2009 |
|---|---|---|---|
| வருமானம் - பட்ஜட் | 621 | 751 | 855 |
| வருமானம் - உண்மை | 584 | 655 | 703 |
| செலவினம் - பட்ஜட் | 588 | 708 | 825 |
| செலவினம் - உண்மை | 615 | 736 | 883 |
| மூலதன செலவினம் - பட்ஜட் | 351 | 386 | 405 |
| மூலதன செலவினம் - உண்மை | 262 | 264 | 350 |
| பற்றாக்குறை - பட்ஜட் | 654 | 736 | 849 |
| பற்றாக்குறை - உண்மை | 609 | 756 | 1046 |

## வரவு-செலவுத் திட்டத்தை வெற்றிபெற வைக்கும் முக்கிய பொறுப்பு தனியார் துறையிடம்-பி.பீ.ஜயசுந்தர

தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த தனியார்துறை உதவவேண்டும் என நிதி அமைச்சின் செயலாளர் பி.பீ. ஜெயசுந்தர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

டெய்லி பினான்சியல் ரைம்ஸ் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற பட்ஜட் தொடர்பான கருத்தரங்கிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

வரவு-செலவுத் திட்டத்தில் 70 வீதத்தை வெற்றிகொள்ள வைக்கும் பொறுப்பு தனியார் துறையின் கைகளிலும், மிகுதி அரசினதும் பொறுப்பாகும். இதனால் அரசு, தனியார் துறைக்கு சாதகமான வர்த்தக சூழலை ஏற்படுத்த முயன்று வருகிறது என்றார்.

## இலங்கை வர்த்தக சங்கம்

சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டமானது அரசாங்கத்தின் அபிவிருத்தியை நோக்கிய வரவு செலவுத் திட்டம். இது நாட்டின் உள்நாட்டுப் பெறுமதியை அதிகரிப்பதுடன், பொருட்கள் சேவைகளின் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் வகையில் அமைந்துள்ளது என இலங்கை வர்த்தக சங்கம்(CCC) தெரிவித்துள்ளது.

வரி சீரமைப்பு, நிர்வாக சீரமைப்பு என்பன சீரான வளர்ச்சிக்கு அவசியமானது. இலங்கை இன்று முக்கியமான திருப்புமுனையான காலகட்டத்தில் உள்ளது. அவ்வகையில் நாம் எமது அங்கத்தவர்களைக் கேட்டுக் கொள்வது, இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி முதலீட்டை மேற்கொண்டு நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்பை வழங்கவும், வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தவும் உதவவேண்டும் என சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஹார்ஸா டி சில்வா கருத்து

வரவு செலவுத் திட்டத்தில் நாட்டின் சாதாரண பிரஜைகளுக்கு எந்த சலுகையும் வழங்கப்படவில்லை. பொதுமக்கள். இதைவிட அதிகம் எதிர்பார்த்ததால் இது குறித்து அவர்கள் திருப்தி அடையவில்லை. சாதாரண பிரஜை களுக்குப் பதிலாக வர்த்தக சமூகத்தினர் அதிக சலுகைகளைப் பெற்றுள்ளனர் என பொருளாதார நிபுணரும், ஐ.தே.க.எம்பியுமான ஹார்ஸா டி சில்வா தெரிவித்துள்ளார்.




## இலங்கையின் பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கு எஸ்.எல்.ஐ.ஐ.ரியின் 12 000 பட்டதாரிகள் பங்களிப்பு

இலங்கையின் முன்னணி தகவல் தொழில்நுட்பக் கற்கைகளை வழங்கும் கல்வி நிறுவகமான இலங்கை தகவல் தொழில்நுட்பக் கல்வியகத்தில் (SLIIT) கற்கைகளை பூர்த்தி செய்த 12 ஆயிரத்திற்கும் அதிகமான பட்டதாரிகள் இலங்கையில் பல்வேறு துறைகளில் தமது சேவைகளை ஆற்றி வருகின்றனர்.

1999ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதியுடன் நிறுவப்பட்ட இலங்கை தகவல் தொழில்நுட்ப கல்வியகம் இலங்கையின் முக்கிய பகுதிகளான கொழும்பு, மலாபே, கண்டி, மாத்தறை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் தனது கிளைகளைக் கொண்டுள்ளது. மேலும் பங்களாதேஷிலும் தனது கிளையை நிறுவியுள்ளது.

எஸ்.எல்.ஐ.ஐ.ரியின் தலைவர் பேராசிரியர் எஸ்.கருணாரத்ன கருத்துத் தெரிவிக்கையில், வருடாந்தம் 2 ஆயிரம் பட்டதாரிகளை நாம் தயார்ப்படுத்துகிறோம். இவர்கள் நாட்டின் வளர்ச்சிக்கு மிகவும் உந்து சக்தியாக அமைந்துள்ளனர். இதுவரை எமது கல்வியகத்தில் 12 ஆயிரம் பட்டதாரிகள் தமது உயர் கல்வியைப் பூர்த்திசெய்துள்ளனர். தகவல் தொழில் நுட்பம், வணிக முகாமைத்துவம் மற்றும் இலத்திரனியல் பொறியியல் ஆகிய துறைகளில் பட்டப்படிப்புக்களை வழங்கி வருகிறோம் எனத் தெரிவித்தார்.

### ஏற்றுமதி அ/தி சபை பணிப்பாளராக மரைக்கார்

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் பிரதான நிறைவேற்றுப் பணிப்பாளராக யூசுப் கே.மரைக்கார் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கையிலும், வெளிநாட்டிலும் சுமார் 30 வருட கால வங்கித் தொழில் துறை அனுபவத்தைக் கொண்டுள்ள மரைக்கார், வர்த்தக முயற்சியாண்மையில் 12 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தைப் பெற்றவராவார்.

மன்னாரில் ஆரம்பக் கல்வியைக் கற்ற இவர், கொழும்பு பல்கலைக் கழகத்தில் வர்த்தக நிர்வாகம் மற்றும் மனித உரிமை(முதுமாணி), ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் வர்த்தக இளமாணி (சிறப்பு) பட்டப்படிப்பையும் பூர்த்தி செய்துள்ளதுடன் வங்கியியலாளர் நிறுவகத்தின் பட்டதாரியுமாவார்.

ஜனாதிபதியின் அனுமதியுடன், வர்த்தகம் மற்றும் முதலீட்டு விவகார அமைச்சர் றிசாட் பதியுதீனினால் இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6565.00 | 6381.07 ⇩ |
| மிலங்கா விலைச்சுட்டி | 7115.43 | 6959.65 ⇩ |

விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 8277.79

*உயர்வடைந்த பங்குகள்(ரூ.):* எஸ்.எம்.பி.லீசிங் (1.50), ஹன்ரஸ் (1289.00), செரன்டிப் ஹோட்டல்ஸ்(X)(95.20), பிரேமல் கிளாஸ் (5.40), ஹ்ஜே (48.00).

*சரிவைக் கண்ட பங்குகள்(ரூ.):* எல்.ஓ.எல்.சி.(117.40), அற்கின் ஸ்பென்ஸ் ஹோட். (96.60), சிலோன் கார்டியன்(224.60), பொகவந்தலாவ (30.90), ஹொரனப்பி ஹோட்டல் (207.60). மேலதிக தகவல்கள்: www.cse.lk

# செலிங்கோ ஆயுள் நிதியம் ரூ.30.6 பில்லியனாக அதிகரிப்பு



2010ஆம் ஆண்டின் முதல் 9 மாத காலப் பகுதியில் ஏற்பட்ட ஆரோக்கியமான வர்த்தக வளர்ச்சியின் காரணமாக செப்ரெம்பர் 30இல் தனது ஆயுள் நிதியத்தை 30.6 பில்லியன் ரூபாயாக அதிகரிக்க முடிந்துள்ளதாக செலிங்கோ ஆயுள் காப்புறுதி நிறுவனம் தெரிவித்துள்ளது.

செலிங்கோ லைஃப் நிறுவனம் கொழும்பு பங்குச்சந்தைக்கு வழங்கியுள்ள புள்ளிவிபரங்களின்படி குறிப்பிட்ட 9 மாத காலத்தில் செலிங்கோ லைஃப் நிறுவனம் தனது ஆயுள் நிதியத்துக்கு மாற்றியுள்ள தேறிய தொகை 4169 மில்லியன் ரூபாயாகும். இது கடந்த ஆண்டு இதே காலப் பகுதியில் மாற்றம் செய்யப்பட்ட ரூ.3446 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இது 21 சதவீத அதிகரிப்பாகும்.

கம்பனியின் முதலீட்டுப் பெறுமதி சுமார் 20 சதவீதம் அதாவது 4664 மில்லியன் ரூபாயாக அதிகரித்து ரூ.28 பில்லியன் என்ற இலக்கை குறிப்பிட்ட காலப் பகுதியில் எட்டியுள்ளது. அதேவேளை மொத்தச் சொத்து 14 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இதன் பெறுமதி 34.9 பில்லியன் ரூபாயாகும்.

மேற்குறித்த 9 மாதங்களுக்கான மொத்த வருமானம் 8.5 பில்லியன் ரூபாயைத் தாண்டியுள்ளது. இதில் காப்புறுதி சந்தா வருமானம் 6 பில்லியன் ரூபாயாகும். முதலீடு மற்றும் ஏனைய வருமானம் 2.45 பில்லியன் ரூபாயாகும்.

மூன்றாவது காலாண்டில் எட்டப்பட்ட வளர்ச்சி மிகவும் உற்சாக மூட்டுவதாக அமைந்துள்ளதுடன், இலங்கையில் மிகவும் வெற்றிகரமான ஆயுள் காப்புறுதி நிறுவனமாக செலிங்கோ லைஃபே திகழ்கிறது என்பதையும் ஊர்ஜிதம் செய்துள்ளது என கம்பனியின் முகாமைத்துவப் பணிப்பாளரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஆர்.ரெங்கநாதன் தெரிவித்துள்ளார்.

கம்பனியின் கடன் தீர்ப்பனவு எல்லை மீளாய்வுக்குட்பட்ட காலத்தில் மேலும் அதிகரித்துள்ளது. 2010 செப்ரெம்பர் நிலைவரப்படி அரசாங்கத்தால் வேண்டப்படும் தொகையை விட 8 மடங்குக்கு மேல் அதிகமாகும்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

$ (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூ |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 110.67 | 112.37 |
| பவுண்ட் (ஐக்கிய இராச்சியம்) | 173.69 | 177.75 |
| யூரோ (ஐரோ. ஒன்றியம்) | 146.48 | 150.82 |
| சுவிஸ் பிராங் | 109.71 | 113.36 |
| கனேடிய டொலர் | 108.57 | 112.30 |
| அவுஸ்திரேலிய டொலர் | 106.94 | 110.41 |
| சிங்கப்பூர் டொலர் | 83.82 | 86.30 |
| ஜப்பான் யென் | 1.31 | 1.35 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.45 | |
| ஐக். அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.30 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## ஒரு பொருளாதார மேதை இந்தியப் பிரதமரான கதை

1932 செப்ரெம்பர் 26ஆம் திகதி பிறந்தவரான மன்மோகன் சிங், இந்தியாவின் 14-வது பிரதமரானார். மேற்கு பஞ்சாப்பில் உள்ள 'கா'(இது தற்போது பாகிஸ்தானில் உள்ளது) எனும் ஊரில் பிறந்தவர்.

சீக்கிய சமயத்தை சார்ந்த இவர், இந்து சமயத்தை சாராத முதல் இந்தியப் பிரதமர் ஆவார். அவருக்கு மனைவியும் மூன்று மகள்களும் இருக்கிறார்கள்.

கடந்த 1991ஆம் ஆண்டு முதல் 1996ஆம் ஆண்டுவரை முன்னாள் பிரதமர் பி.வி.நரசிம்மராவ் அமைச்சரவையில் நிதி அமைச்சராக மன்மோகன் பணியாற்றினார். கல்வியாலும் பயிற்சியாலும் தேர்ந்த பொருளாதார நிபுணராக அவர் விளங்கினார்.

இந்தியாவின் பொருளாதார தாராளமயமாக்கல் கொள்கையில் அவர் பெரும் பங்கு வகித்தார். பொருளாதாரத்திலும் டாக்டர் பட்டம் பெற்றவர்.

அவர் நிதி அமைச்சராவதற்கு முன், பின்தங்கியிருந்த இந்தியப் பொருளாதாரம், மன்மோகன் வகுத்த வியூகங்களால் முன்னேறத் தொடங்கியது.

இந்தியாவில் மக்களவை மூலம் தேர்ந்தெடுக்கப்படாத ஒரே பிரதமர் மன்மோகன் ஆவார். 1999ஆம் ஆண்டு தெற்கு டில்லியில் போட்டியிட்ட அவர், பாஜக வேட்பாளரால் தோற்கடிக்கப்பட்டார். 1995-ம் ஆண்டு முதல் அசாம் மாநிலத்திலிருந்து இந்திய மேலவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார்.

### பணி அனுபவங்கள்

பொருளாதார துறையின் முதல்தர பட்டதாரியான மன்மோகன், 1957-ம் ஆண்டு கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக பணியாற்றியவர். பஞ்சாப் மாநிலத்தின் சண்டிகார் நகரில் உள்ள பஞ்சாப் பல்கலைக்கழகத்திலும் அவர் பணியாற்றினார்.

1957 முதல் 1959 வரை பொருளாதார மூத்த விரிவுரையாளராகவும், 1963 முதல் 1965 வரை அவர் பொருளாதாரப் பேராசிரியராகவும் பணியாற்றினார். 1962ஆம் ஆண்டு ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் நபீல்ட் கல்லூரியில் அவர் பொருளாதாரத்தில் டாக்டர் பட்டம் பெற்றார்.

1969முதல் 1971வரை அனைத்துலக வர்த்தகத்தில் பேராசிரியராகவும், 1971-1972வரை இந்தியாவின் வெளிநாட்டு வர்த்தக அமைச்சின் பொருளாதார ஆலோசகராகவும், 1972 முதல் 1976 வரை முதன்மை பொருளாதார ஆலோசகராகவும் இருந்தார்.

1976இல் ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் கௌரவப் பேராசிரியராக பணியாற்றினார்.

1976-1980 வரை இந்திய ரிசர்வ் வங்கியின் இயக்குநராகவும், அதே காலகட்டத்தில் இந்திய தொழில் மேம்பாட்டு வங்கியில் இயக்குநராகவும், இந்திய நிதி அமைச்சகத்தின் செயலாளராகவும் விளங்கினார்.

### வங்கியின் ஆளுநர்

1982-1985 வரை இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநராக அவர் விளங்கினார். 1990-1991 வரை இந்தியப் பிரதமரின் பொருளாதார ஆலோசகராக



விளங்கிய மன்மோகன் சிங், 1991 ஜுன் தொடங்கி 1996 வரை இந்திய நிதி அமைச்சராகப் பொறுப்பேற்றார்.

இந்திய நாடாளுமன்ற மேலவையில் எதிர்க்கட்சி தலைவராகவும் அவர் விளங்கினார்.

கடந்த 2004-ம் ஆண்டு மே 22-ம் திகதி பிரதமராக பொறுப்பேற்று இன்று வரை அவர் இந்தப் பொறுப்பை வகிக்கிறார்.

மன்மோகனுக்கு முன்னர் அடிக்கடி நிகழ்ந்த அரசியல் குளறுபடிகளால் அற்ப ஆயுளில் பிரதமர் பதவி நெருக்கடிக்கு உள்ளானதைத் தடுத்து நிலையான அரசாங்கத்தை தந்த பெருமையும் அவருக்கு உண்டு. கடந்த இரண்டு தவணைகளாக அவர் இந்தியாவிற்கு தலைமையேற்று வருகிறார்.

மௌனமும் புன்னகையையுமே தனது வெற்றியின் இரகசியமாகக் கொண்ட மன்மோகன் சிங் ஒரு பொருளாதார மேதை.

ஏழை நாடென வர்ணிக்கப்பட்ட இந்தியாவை பொருளாதார வல்லரசாக மாற்றும் நுட்பம் தெரிந்தவர்.

# 23 ஆம் திகதியில் பிறந்த உங்கள் பலன் எப்படி?

23ஆம் திகதியில் பிறந்தோர் குறிப்பிட்ட காலம் வரை மிக அதிக நன்மையை அடைவார்கள். இவர்கள் மனதில் தைரியம் உள்ளவரை மட்டுமே செயல்படும் தன்மை உடையவர்கள். சிறு பிரச்சினை என்றாலும் துவண்டு விடுவார்கள். எதிர்த்து நின்று போராடும் குணம் மிகக் குறைவாகவே இருக்கும்.

போராடுவதற்கும் ஒரு தூண்டுகோல் இவர்களுக்குத் தேவை. நன்மையோ தீமையோ-இவர்களுக்குப் பின்னால் எப்பொழுதும் ஒருவர் இருந்து கொண்டே இருப்பார். முற்பகுதியில் நன்மையும் பிற்பகுதியில் தீமையும் செய்யும் தன்மை கொண்ட எண் என்பதால், இந்த திகதியில் பிறந்தோர் இரண்டு விதமான தன்மையுடைய வாழ்க்கை அமைப்பைப் பெற்றிருப்பார்கள். இவர்களின் தொழில் எண்கள் 1, 4 தொழில் உதவி எண்கள் 6, 8.

இவர்கள் பெரும்பாலும் பிறர் புகழ வேண்டும் என்பதற்காக ஏதேனும் செய்து கொண்டே இருப்பார்கள். இவர்கள் பெரும்பாலும் திட்டமிடுதல், செயற்படுத்துதல், மக்கள் தொடர்பு போன்ற துறைகளில் இருப்பதைக் காணலாம். எண் ஆதிக்கம் சரியாக அமையப் பெற்றுவிட்டால் மிக உயர்ந்த பதவி, புகழ் பெற்று சிறப்பான வாழ்வைப் பெறுவார்கள்.

எண் ஆதிக்கம் குறைவாக இருந்தால் மற்றவர்களின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாகி ஏதேனும் சிக்கலில் மாட்டிக் கொள்வார்கள். இவர்கள் பெரும்பாலும் மூன்று வயதுக்கு மேல், 50 வயது வரை சிறந்த தன் மையுடன் நன்மைகள் கிடைக்கப் பெறுவார்கள்.

5-ஆம் எண் வரிசையில் வரும் இந்த எண்ணின் (23) மறுபக்கம் யாரும் விரும்பத் தகாததே. இவர்களுக்கு தொழில் எண்களான 1, 4 சரியாக அமைந்தால், தொழில் உதவி எண்களான 6, 8 சரியாக அமைவதில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தான் தொழில் எண்கள், உதவி எண்கள் நல்ல ஆதிக்கம் பெற்று எதிர்பாராத முன்னேற்றத்தையும் சுகமான வாழ்க்கையையும் கொடுக்கும். இவர்கள் புதன்கிழமைதோறும் லட்சுமி நாராயணரை வழிபட்டு வந்தால் நன்மைகள் பெற்று பெருவாழ்வு வாழலாம்.

23ஆம் திகதியில் பிறந்து சுயதொழில் செய்வோர், பெரும்பாலும் மற்றவர்களை ஏவல் செய்யும் அல்லது இருக்கும் இடத்தில் இருந்துகொண்டு (பெரும்பாலும் உட்கார்ந்த படியே) செய்யும் தொழில்களில் தான் இருப்பார்கள்.

மற்றவர்களின் உழைப்பில் தன் நிலை உயரும்படியான தொழில்களில் முன்னேற்றம் பெறக்கூடியவர்கள் இவர்களே. அதே சமயம் மிக உன்னதமான நிலையில் இருக்கும்போது எந்தவித சலனமுமின்றி புதைகுழியில் தள்ளும் தன்மை கொண்ட நிலையைத் தருவதும் இந்த எண்தான்! கொடுத்தாலும் எடுத்தாலும் இந்த எண்ணிற்கு நிகர் இந்த எண்ணே.

எண் வரிசையில் நடுநாயகமாக இருப்பதால், இதன் நிலையை சரியாகப் புரிந்து கொள்ள முடியாமல் இருப்பதும் ஒரு காரணம். இவர்களுக்குத் தொழில் எண் மற்றும் தொழில் உதவி எண்களின் ஆதிக்கம் சிறப்பாக அமைந்துவிட்டால் மட்டும் போதும். பிறந்த திகதி எண் செயல் இழந்து, நன்மையை மட்டும் பெறுவார்கள். அல்லது பிறந்த திகதி எண் மற்றும் பெயரெண் ஆகியவை நன்றாக அமைந்தாலும் சிறப்பைப் பெற்று விடுவார்கள்.

தொழில் உதவி எண் சரியாக அமையாவிட்டால் ஏற்றமும் இறக்கமும் அடிக்கடி நிகழும். இவர்களுக்குப் பெரும்பாலும் பணம் சம்பந்தப்பட்ட வகையில்தான் சிக்கல்கள் உருவாகும். ஆதலால் பணம் கொடுக்கும் போதும் வாங்கும்போதும் சரி யான அதிர்ஷ்ட திகதிகளில் மட்டுமே செயல் பட்டு வந்தால், இழப்பைத் தவிர்க்க முடியும். (சிலர் 5 ஆம் எண் வரிசைக்கு துரதிர்ஷ்ட திகதியே இல்லை என்று சொல்கிறார்கள் அது தவறு). இவர்கள் சனிக்கிழமை தோறும் கருடாழ்வாரைத் தரிசனம் செய்து, சங்கர நாராயணரை வழிபட்டு வந்தால் செல்வ நிலை உயரும்.

இவர்கள் பெரும்பாலும் எண் ஆதிக்கம் பெறாதவர்களாகவே இருப்பார்கள். இவர்கள் உயர்வைப் பெற சரியான திகதியில் (7, 16, 25 ஆம் திகதிகள்) பிறந்த பெண்ணை மணம் முடித்தால்தான் வாழ்வில் வெற்றி பெற முடியும்.

பிறந்த திகதி 23 ஆம் பெயரெண்ணும் நல்ல ஆதிக்கம் பெற்றிருந்தால் மத்திம பலனை நிரந்தரமாகக் கொடுக்கும். இவர்களின் வாழ்வில் முற்பகுதி கஷ்டமானதாகவும் பிற்பகுதி (மனைவி வந்தபின்) நன்மையானதாகவும் அமையப் பெற்றிருப்பார்கள் மற்றவர்களால் மனைவி சொல்கேட்பவர் என்று சொல்லப்படுபவர்களும் இவர்களே. எப்படியும் ஐம்பது வயதுக்கு மேல் இவர்களின் மனநிலை மற்றும் பொருளாதார நிலை சீரமைந்து சுகவாழ்வு அமையும்.

எண் ஆதிக்கக் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய தகுந்த பரிகாரங்களைச் செய்து கொள்வது நன்மை தரும். புதன்கிழமை தோறும் திருநங்கைகளுக்கு உதவிகள் செய்தால் நன்மைகள் பெறலாம்.

இவர்கள் கலைக்காகவே பிறந்தவர்கள் என்று பெயரெடுக்கக் கூடியவர்கள். இவர்களுக்கு அதிர்ஷ்டம் வாயிற்கதவைத் தட்டிக் கொண்டே இருக்கும். ஆனால் வாழ்வின் பிற்பகுதியில் மிகத் தாழ்ந்த நிலையில் வாழும் துர்பாக்கிய நிலையையும் பெற்றவர்கள்.

23ஆம் எண்ணின் மறுபகுதி 32ஆக வருவதே இதற்குக் காரணம். நல்ல திற மையையும் நல்ல பண்புகளையும் பெற்ற கலைஞர்களாக இருந்தும்-புகழ் பெற்றவர்களாக இருந்தும் பிற்கால வாழ்வில் சோகம் நிறைந்து துன்பப்படும் நிலையும் உண்டாகும்.

"காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்பதுபோல, எண் ஆதிக்கம் நன்மைகளை வாரி வழங்கும்போது சரியான பாதையில் சென்றால் மட்டுமே தப்பிக்க முடியும். புதன் மற்றும் சனிக்கிழமை ராகு காலங்களில் துர்க்கையை வழிபாடு செய்தும், சிவபெருமானைத் துதித்தும் வந்தால் சரிவில்லாத வாழ்வைப் பெறலாம்.

பிறந்த திகதி 23, விதி எண் 1ஆக இருப்பவர்களுக்கு 20 ஆண்டுகள் நற்பலன்கள் உண்டாகும். பிறந்த திகதி 23, விதி எண் 2 ஆக இருப்பவர்களுக்கு 24 ஆண்டுகள் நற்பலன் உண்டாகும். பிறந்த திகதி 23, விதி எண் 3ஆக இருப்பவர்களுக்கு 19 ஆண்டுகள் நற்பலன் கிடைக்கும். பிறந்த திகதி 23, விதி எண் 4ஆக இருப்பவர்களுக்கும் பிறந்த திகதி 23, விதி எண் 5ஆக இருப்பவர்களுக்கும் வாழ்நாள் முழுவதும் அதிகபட்ச யோகங்கள் கிடைக்கும்.

**எஸ்.என்.ஹிரிஜி**

பிறந்த திகதி 23, விதி எண் 6ஆக இருப்பவர்களுக்கு 33 வருடங்கள் நற்பலன் கிடைக்கும். பிறந்த திகதி 23, விதி எண் 7 ஆக இருப்பவர்களுக்கு 19 ஆண்டுகள் நற்பலன்கள் கிடைக்கும்.

பிறந்த திகதி 23, விதி எண் 8ஆக இருப்பவர்களுக்கு 6 வருடங்கள், பின் இடைவெளிவிட்டு 6 வருடங்கள் என நான்கு முறை நற்பலன்கள் கிடைக்கும். பிறந்த திகதி 23, விதி எண் 9 ஆக இருப்பவர்களுக்கு 21 ஆண்டுகள் நற்பலன்கள் கிடைக்கும்.

குறிப்பு :- பிறந்த திகதி எண், விதி எண், தொழில் எண், நன்மை செய்யும் எண் ஆகியவற்றின் ஆதிக்கத்தைப் பொறுத்து தொழில் நிலைகள் மாறுபடும். (தொடரும்)

# கிண்ணியாவில் கிழக்கின் மாபெரும் அறிவியல் கண்காட்சி-2011

கிழக்கு மாகாணத்தின் மாபெரும் அறிவியல் கண்காட்சி அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதியில் இருந்து மார்ச் மாதம் 4 ஆம் திகதி வரை தொடர்ந்து ஐந்து நாட்கள் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சி கிண்ணியா மத்திய கல்லூரி, தி/கிண்ணியா அல் அக்ஷாமகா வித்தியாலயம், தி/கிண்ணியா அப்துல்மஜீத் வித்தியாலயம் மற்றும் தி/ அல்-ஹிரா மகளீர் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கிழக்கு மாகாண சபைத் தவிசாளர் எச்.எம். எம். பாயிஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

995 இற்கு மேற்பட்ட தமிழ், முஸ்லிம், சிங்களப் பாடசாலைகளில் கல்விகற்கும் மாணவர்களின் திறன்களை வெளிக்கொணரும் திட்ட மாக இக்கண்காட்சி நடாத்தப்படுகின்றது.

இந்நிகழ்வுகள் கல்விக் கண்காட்சி, நிறுவனம் சார் கண்காட்சி ,தொழிற்சாலைகளின் கண்காட்சி, பொதுவானது என நான்கு பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

கல்விக் கண்காட்சியானது மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களும் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், கல்வியாளர்கள், விரிவுரையாளர்கள் பங்களிப்புச் செய்யக் கூடிய விதத்திலும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களில் உள்ள அரசிய கலாசாலைகள், கல்வியற் கல்லூரிகள், தொழில் நுட்பக் கல்லூரிகள், பல்கலைக்கழகங்களான கிழக்கு, தென்கிழக்கு, பேராதனை, யாழ், மொறட்டுவை பல்கலைக்கழகம் என்பன பங்கு பெறவுள்ளன.

மேலும் இலங்கையின் பல்வேறு நிறுவனங்களான தொலைக்காட்சி, வானொலி, வங்கிகள், ஆய்வு மையங்கள், தொலைத் தொடர்பு சாதனங்கள் ஆகியவற்றுடன் இலங்கையில் உள்ள பிரபல்யமான தொழிற்சாலைகளான ஆடை, சீமெந்து, கூரை, பிலாஸ்டிக், காலணி, கட்டடப் பொருட்கள், பால் போன்ற தொழிற்சாலைகளும் விவசாயத்துறை, காணிவேல், பல்வைத்திய அலகு, புத்தகசாலைகள், கணனி விளையாட்டுக்கள், விளையாட்டுப் பூங்கா, உல்லாசப் பயணத்துறை ,கடல் வளம் போன்ற பல்துறை சார்ந்த நிறுவனங்கள் இக் கண்காட்சியில் கலந்து கொள்ளவுள்ளன.

பாடசாலைகளும் உயர் கல்வி நிறுவனங்களும் கலந்து கொள்கின்ற கல்விக் கண்காட்சியில் பாடசாலைக்கிடையே பல்வேறு போட்டிகள் நடைபெறவுள்ளன.

அதில் மாவட்ட மட்டப் போட்டிகள் நடைபெற்று மாவட்ட மட்டத்தில் 300 வகை காட்சிப் பொருட்கள் தெரிவு செய்யப்பட்டு இறுதிப் போட்டி மாகாணப் போட்டியாக கிண்ணியாவில் நடைபெறும்.

இப்போட்டிகள் பாட ரீதியாகவும், ஆரம்பப் பிரிவு, இடைநிலைப்பிரிவு, கல்லூரி மட்டம் ஆகிய பிரிவு ரீதியாக மாணவர்களின் கண்டுபிடிப்புக்கள் என்ற வகையில் நடத்தப்படுகின்றன.

வெற்றிபெறும் பாடசாலைக்கு சிறந்த பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட இருப்பதுடன் மாகாண மட்டத்தில் தெரிவு செய்யப்படும் பாடசாலைக்கு தங்கப் பதக்கமும் வழங்கப்படும். அதிகூடிய புள்ளிகளைப் பெறுகின்ற சிறந்த பரிசும் பாராட்டுப் பத்திரமும் வழங்கப்படும்.

கல்வி தவிர்ந்த நிறுவனங்கள் "பொதுவானவை" என்ற வகையில் உள்ளடக்கப்படுவர் .கண்காட்சியில் பங்கு கொள்ள விரும்புவர்கள் எச்.எம். பாயிஸ், தலைவர், கண்காட்சிக்குழு, கிழக்கு மாகாணசபை, உட்துறை முக வீதி, திருகோணமலை என்ற முகவரியிலோ அல்லது 0773674875/0770538343/0262226045 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ உடன் தொடர்பு கொள்ளுமாறு கிழக்கு மாகாண சபைத் தவிசாளர் எச்.எம். எம். பாயிஸ் அறிவித்துள்ளார்.

# விபரங்கள் திரட்டல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேச செயலக கலாசாரப் பிரிவினரால் யாழ். பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட கலைஞர் விபரங்கள் , வணக்கஸ் தலங்களின் விபரங்கள் மற்றும் கலை நிறுவனங்களின் விபரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

இவற்றிற்குரிய விண்ணப்பப்படிவங்கள் யாவும் கிராம அலுவலர் ரீதியாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

எனவே விண்ணப்பங்களை எதிர்வரும் டிசம்பர் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்பதாக கிராம அலுவலரிடம் பெற்று பூரணப்படுத்தி யாழ்ப்பாண பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் ஒப்படைக்குமாறு யாழ். பிரதேச செயலர் திருமதி. சுகுணரதி தெய்வேந்திரம் அறிவித்துள்ளார். (ஶ்ரீ-2)

# சபை விவாதங்களை குழப்புவோருக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ அறிவுரை

நாடாளுமன்றத்தில் வரவு -செலவுத் திட்டம் மீதான விவாதங்களின் போது இடையூறு ஏற்படுத்தும் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் வைத்தியரை நாடி சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டுமென சபாநாகர் சமல் ரஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர உரையாற்றிய போது ஆளும் கட்சியைச் சேர்ந்த சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ச்சியாக இடையூறு ஏற்படுத்தியமையைத் தொடர்ந்து சபாநாயகர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் வைத்தியர் ஒருவர் இருப்பதாகவும் அவரின் உதவியை ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஶ்ரீ-2)



யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் திருமதி இரத்தினேஸ்வரி முத்துக்குமாரின் பிரிவுபசார நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மண்படத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் சு.தியாகலிங்கம் உரையாற்றுவதையும், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் ஸ்ரீதரன் ஆசிரியரிடம் வாழ்த்துப் பாமாலையை கையளிப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- எஸ்.கரன்)

## பாதுகாப்பு செயலர் பயணம் செய்த ஹெலிகொப்டர் திடீர் தரையிறக்கம்

(கொழும்பு)

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பயணம் செய்த ஹெலிகொப்டர் திடீரென தரையிறக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஹெலிகொப்டர் கம்பஹா ஸ்ரீபோதி மைதானத்தில் நேற்று முன்தினம் அவசரமாகத் தரையிறக்கப்பட்டதாகவும் மோசமான காலநிலையினால் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பாதுகாப்புச் செயலாளர் கண்டியிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஹெலிகொப்டரிலிருந்து இறங்கியபின் வேறு வாகனமொன்றின் மூலம் அவர் கொழும்பிற்குச் சென்றதாகக் குறிப்பிடப்படுகிறது.(ஸ்ரீ-2)

## பஸ்ஸின் மிதிபலகையில் பயணித்த இளைஞன் தவறிவிழுந்து மரணம்

பஸ் வண்டி ஒன்றின் மிதி பலகையில் பயணம் செய்த இளைஞன் தவறுதலாக கீழே விழுந்ததில் பஸ்ஸின் சில்லில் பட்டு மரணமடைந்துள்ளார்.

கண்டி கொஹாகொடையிலுள்ள கட்டுகஸ்தோட்டை-பேராதெனிய வீதியில் நேற்று முன்தினம் இச் சம்பவம் இடம்பெற்றது. விபத்தில் உயிரிழந்தவர்கொஹாகொடையை சேர்ந்த அனுரஹேரத் என்ற 22 வயதுடைய இளைஞர் என இனம் காணப்பட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)

## மாத்தறையில் பொலிஸார் மீது இராணுவத்தினர் தாக்குதல்

(கொழும்பு)

மாத்தறை நகரில் உள்ள சோதனை சாவடி கடமையில் இருந்த இரண்டு பொலிஸாரை அங்கு சென்ற இராணுவத்தினர் சிலர் கடுமையாக தாக்கி விட்டு தப்பிச் சென்றுள்ளதாக மாத்தறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் கடந்த 25 ஆம் திகதி இரவு இடம்பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் சிப்பாய் ஆகியோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாத்தறை நகரில் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கைதுசெய்யப்பட்டமையே மேற்படி தாக்குதல் சம்பவத்திற்குக் காரணம் என பொலிஸார் கூறியுள்ளனர்.

மேற்குறித்த இராணுவ முகாமில் பணியாற்றி வரும் சுமார் 10 இராணுவச் சிப்பாய்கள் பொலிசார் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கைதுசெய்வதற்காக பொலிஸார்விரிவானவிசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ஸ்ரீ-2)

## தமிழீழ விடுதலைப்புலிகளின் சின்னங்களை கைத்தொலைபேசியில் வைத்திருந்தவர் கைது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் சின்னங் கள் மற்றும் ஈழ வரைபடம் ஆகியவற்றை கையடக்கத் தொலைபேசியில் வைத்திருந்த இளைஞர் ஒருவரை மாங்குளம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

முல்லைத்தீவு ஜீவநகர் பிரதேசத்தைச் சேர்ந்த ஜெகநாதன்பிள்ளை வீரகுமார் என்ற இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் படங்களை குறித்த சந்தேக நபர் வேறு நபர்களுக்கு குறுந்தகவல் மூலம் அனுப்பி வைத்தாரா என்பது தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.வேறு ஒரு நபர் இந்த படங்களை கைது செய்யப்பட்ட நபரின் கையடக்கத் தொலை பேசிக்கு அனுப்பி வைத் துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட நபர் நலன்புரி நிலையத்திலிருந்து அண்மையில் மீள் குடியேற்றப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆரம்ப கட்ட விசாரணைகளின் பின்னர் குறித்த நபரை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட உள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

## 2010.11 28 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1520 - தென்னமெரிக்கா ஊடாகப் பயணித்த போர்த்துகேய நாடுகாண் பயணி மகலன் பசுபிக் பெருங்கடலை அடைந்தான். இவனே அட்லாண்டிக் கடலில் இருந்து பசுபிக் கடலை அடைந்த முதலாவது ஐரோப்பியர் ஆவான்.
- 1729 - மிசிசிப்பியில் நட்சே இந்தியர்கள் குழந்தைகள், பெண்கள் உட்பட 239 பிரெஞ்சு இனத்தவரைக் கொன்றார்கள்.
- 1821 - பனாமா ஸ்பெயினிடம் இருந்து பிரிந்து பாரிய கொலம்பியாவுடன் இணைந்தது.
- 1843 - ஹவாய் இராச்சியத்தை ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ் ஆகியன விடுதலை அடைந்த தனி நாடாக அங்கீகரித்தன.
- 1893 - நியூசிலாந்தில் முதற்தடவையாக பெண்கள் வாக்களித்தனர்.
- 1905 - ஐரிஷ் தேசியவாதி ஆர்தர் கிறிபித் அயர்லாந்தின் விடுதலைக்காக சின் ஃபெயின் என்ற அரசியல் கட்சியை உருவாக்கினார்.
- 1912 - அல்பேனியா ஒட்டோமான் பேரரசிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1918 - புக்கோவினா ருமேனிய இராச்சியத்துடன் இணைய முடிவு செய்தது.
- 1942 - மசாசுசெட்ஸ் மாநிலத்தில் பொஸ்டன் நகரில் இரவுவிடுதி ஒன்றில் இடம்பெற்ற தீயினால் 491 பேர் இறந்தார்கள்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: அல்பேனியா அல்பேனியப் பார்ட்டிசான்களினால் விடுவிக்கப்பட்டது.
- 1958 - சாட், கொங்கோ குடியரசு, காபோன் ஆகியன பிரெஞ்சு ஆட்சியின் கீழ் சுயாட்சி பெற்றன.
- 1960 - மவுரித்தேனியா பிரான்சிடம் இருந்து விடுதலை அடைந்தது.
- 1964 - நாசா செவ்வாய்க் கோளை நோக்கி மரைனர் 4 விண்கலத்தை ஏவியது.
- 1975 - கிழக்குத் திமோர் போர்த்துக்கலிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1979 - நியூசிலாந்து விமானம் எரெபஸ் மலையில் மோதியதில் அதில் பயணம் செய்த 257 பேரும் கொல்லப்பட்டனர்.
- 1987 - தென்னாபிரிக்காவின் விமானம் இந்தியப் பெருங்கடலில் வீழ்ந்ததில் அதில் பயணஞ் செய்த 159 பேரும் கொல்லப்பட்டனர்.
- 1989 - பனிப்போர்: செக்கோஸ்லா வாக்கியாவின் தனியாதிக்க உரிமையை விட்டுத்தருவதாக அந்நாட்டின் கம்யூனிஸ்ட் கட்சி அறிவித்தது.
- 1990 - ஐக்கிய இராச்சிய தலைமை அமைச்சர் மார்க்ரெட் தட்சர் தனது பதவியை விட்டு விலகினார்.
- 1990 - லீ குவான் யூ சிங்கப்பூர் தலைமை அமைச்சர் பதவியை விட்டு விலகினார். கோ சொக் டொங் புதிய தலைமை அமைச்சரானார்.
- 1991 - தெற்கு ஒசேத்தியா ஜோர்ஜியாவிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1994 - ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைய நோர்வே மக்கள் எதிர்த்து வாக்களித்தனர்.
- 2006 - நாசாவின் நியூ ஹரைசன்ஸ் தானியங்கி விண்கலம் புளூட்டோவின் முதலாவது படத்தை அனுப்பியது.

### பிறப்புகள்

- 1820 - பிரெட்ரிக் ஏங்கல்ஸ், ஜேர்மன் அரசியல் மெய்யியலாளர் (இ. 1895)
- 1864 - ஜேம்ஸ் ஆலன், ஆங்கில எழுத்தாளர் (இ. 1912)
- 1984 - ஆன்ரூ போக, அவுஸ்திரேலிய கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்புகள்

- 1694 - மட்சுவோ பாஷோ, ஜப்பானியக் கவிஞர் (பி. 1644)
- 1939 - ஜேம்ஸ் நெய்ஸ்மித், கூடைப்பந்து கண்டுபிடிப்பாளர் (பி. 1861)
- 1954 - என்றிக்கோ பெர்மி, இத்தாலிய இயற்பியலாளரும் நோபல் பரிசு பெற்றவரும் (பி. 1901)



**1943 - இரண்டாம் உலகப் போர்: ஜெர்மனியையும், ஜப்பானையும் ஒடுக்குவது பற்றி, அமெரிக்க ஜனாதிபதி பிராங்கிளின் ரூஸ்வெல்ட், பிரித்தானியத் தலைமை அமைச்சர் வின்ஸ்டன் சேர்ச்சில், ரஷ்ய ஜனாதிபதி ஜோசப் ஸ்டாலின் ஆகிய மூவரும் டெஹ்ரானில் சந்தித்துப் பேசினார்கள்.**

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### காத்திருக்கிறேன்

ஒவ்வொரு நாட்களும் - உன்
நினைவுகளைச் சுமந்தபடி - உன்
திருமுகம் காண ஓடோடி வந்தேன்
நீயும் என்னைக்காண வருவாய்
என நினைத்தபடி ஏக்கத்துடன்
உன் வரவை எதிர்பார்த்த
என்கண்கள் துடியாய் துடித்தது
உன் காதலை என்னிடம்
சொல்லி விடுவாய் என - என்
மனம் ஆசைகளுடன் தனியாய் தவித்தது
என் மனத்தவிப்பை புரிந்துமா?
இவ்வளவு தாமதம் - உன்
பாதச் சுவடுகள் என்னை நோக்கி
வரும் பாதை
பார்த்துக் காத்திருக்கிறேன்

டுசிந்தன்
மந்துவில்

### தடங்கள்

என் இலட்சியப்பாதைகள்
ஒவ்வொன்றிலும்
உன் நினைவின்
மைல்கற்கள்
தடங்கள் பதிக்க...
என் பயணமும்
தொடர்கின்றது...
நாட்களை
தக்கவைத்தபடி...

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்

### கவிதைத் துளிகள்

**பார்வை**
இலக்கணமில்லா மொழி
கண்களின் பாஷை.

**கனவு**
மனத்திரையின்
மௌனத்திரைப்படம்

யாழ்.அஞ்சனா
கல்லுவம்

### கண்டு கொள்

மௌனங்கள் சொன்ன
வார்த்தையால் கவிதைக்
கலசத்தில் என் நினைவுகள்
மௌனத்தின் தேடலில்
கால் பதிக்கின்றதே...
கண்ணே! கண்டு கொள்
என் கவிதைகள்
உனக்காக....

சிற்பி
சிறுவையூர்

### புரியவில்லையா

உண்மைகள் உறங்குவதில்லை
உன் நினைவுகளும் வாடுவதில்லை
என் கனவுகளும் நிற்பதில்லை
உன் வார்த்தைகளும் மடிவதில்லை
என் அன்பு உனக்குப் புரியவில்லையா?

மோ.மோகனா
அல்வாய் வடக்கு

### படிப்பினை

வீதியில் வீசவா என்னைப்
பிரசவித்தீர்கள்?
வீதியிலிருந்தும் பலவற்றை
நான் கற்றுக் கொண்டேன்!



கே.எஸ்.சிவஞானராஜா,
கொக்குவில்.

### முகவரி

பிறந்த இடம்
வேறு தான்
நான் வாழப்போவது
உன் வீடு தான்
இதை அறியாமல்
நீ ஏன் - என்
முகவரி தேடுகிறாய்

செ.சுசி
குப்பிளான்

### இமயம் தொட...



அதிகாரம் செய்யு முன்
அதற்கு - நீ
அடங்கப் பழகு
உள்ளொன்று வைத்து
புறமொன்று நடவாதே !
உள்ளத்தில் உள்ளது
உன் முகத்தில் தெரிந்துவிடும்
பகுத்தறிவை இறைவன்
மனிதனுக்கு மட்டும் தான்
கொடுத்திருக்கின்றான்

மாவை. நா.கஜேந்திரா

### ஆயிரத்தில் ஒருவன்

வயிறு நிரம்புவதில்லை
என்றுமே எனக்கு
உணவுப் பஞ்சம்
நீர் மொன்று குடிக்கவோ!...
உடலில் வல்லமை இல்லை
வாகனச்சத்தமோ! இன்னும்
ஓய்ந்தபாடில்லை
வீதியோரத்தில் எச்சி இலைக்காய்!
நானம்..ஆயிரத்தில் ஒருவனாய்!



பொலிகையூர்
ஸ்ரீ.சுனந்தன்



## மௌனத்தின் தேடல் - 46

### இவர்கள் எங்கே?

தானாக எவரும் உண்மையில்
காணாமல் போவதில்லை
தேனான தமிழ் பிள்ளைகளின்
தந்தைமார் எங்கே?
ஆனால் உயிரற்ற சான்றிதலிலாம்!
உண்மை மறைப்பு

சி.சுகிர்தமலர்

### பதில் வருமா

சீருடை நடுவே
கையசைத்துப் போன
கணவன்
காணாமற் போகையில்
சாட்சியங்களும்
குப்பைக்குள் போன
காகிதங்கள் தானா?

சி.வினோவர்மன்
புளியங்கூடல்

### மீட்டுத் தாருங்கள்

மதிப்புக்குரிய அதிகாரிகளே!
பிறந்த நாள் முதல்
இந்த நாள் வரை
தன் கண்காணாது
தவிக்கும் இந்தப் பாலகனின்
தந்தையைப் புனர்வாழ்வு
முகாமிலிருந்து விரைவாய்
மீட்டுத் தாருங்கள்

வி.அபிசன்
துன்னாலை

### பதிவு

பல இடங்கள் சென்று
பல பதிவுகள் பதிந்தாலும்
அழிந்தவர்கள் மீண்டும்
கிடைப்பார்களா?

சி.டனுசயன்
யா/தாவடி இந்து தமிழ்
கலவன் பாடசாலை

### நியாயமா?

கடந்துபோன யுத்தத்தில் முகம் மாறி
தொலைந்துபோன என் அன்புமகனை
கண்டு பிடித்துத் தாருங்கள்
என்று உங்களிடம் வர
மௌனமாக இருக்கிறீர்களே!
இது உங்களுக்கே நியாயமா?

எஸ்.அசோக்குமாலா
உடுப்பிட்டி

### பட்டிமன்றம்

வன்னி மண்ணில் பட்டி
மன்றம் தேவை இல்லை?
பசியால் வாடும் பாலனுக்கு
பழஞ்சோறு ஆவது
தாருங்கோவன்

அன்பரசன்
வடவரணி

### கற்றுக் கொண்ட பாடம்

பழமையை மறந்து மக்கள்
இனிமையை நாடும் வேளை
இடையினில் இமயம் போல
இக்குழு புகுந்து - இன்று
மறந்ததை மனக்கண் முன்னே
மறுபடி கிளறியதே!

கி.சரண்ராஜ்
கிளிநொச்சி

உறவுகளே!...
சொல்லுங்கோ
சொல்லிக் கொண்டேயிருங்கோ!..
கேளுங்கோ
கேட்டுக்கொண்டேயிருங்கோ!..
இறுதியில் மிஞ்சுவது
ஏமாற்றம் மட்டுமே...!

து.திலக்
யாழ்ப்பாணம்

### புரியவில்லை

நாளை காணாமல் போகும்
ஆணைக்குழு முன்
நேற்றுக் காணாமல்போன
கணவனை மீட்க...

செ.அனுசன்
முல்லைத்தீவு

### நாளை

கண்ணாடி வாழ்க்கையில்
உடைவுகள் வந்தன
காகித ஓடமாய்
வாழ்க்கை ஆனது
கண்ணீர் மட்டுமே சொந்தம்
பெரியாரே
நாளையாவது...?

பொ.ஜெனினா
சங்கையூர்

### கண்டுபிடியுங்கள்

கண்டுபிடியுங்கள்
கணவனை இவள்
இளமை தேயுமுன்னே
கண்டுபிடியுங்கள்
தணயன் இவன்
தீவிரவாதியாகமுன்னே

செ.அனுசா
கிளிநொச்சி

### முடியுமா?

குறைகேள் அரங்கத்தில்
குந்தியிருப்போரே!
நீங்கள் உறங்கிப்போனாலும்
உண்மைகள் உறங்காது....!
உறவுகளே!
மடிந்த என்
மழலைகளைத்
திருப்பிக் கொடுக்க
இவர்களால் முடியுமா?

பொ.கிருசாந்
சங்கானை

## சங்குநாதம் மௌனத்தின் தேடல்- 47



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 03.12.2010 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# 19ஆம் நூற்றாண்டின் 'யுகபுருஷர்' ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்



*" நல்லை நகராறுமுக நாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே - எல்லவரும் ஏத்து புராணாகமங்களெங்கே பிரசங்கமெங்கே ஆத்தனறி வெங்கே யறை"*

''இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது கடவுளை வணங்கி முத்தி இன்பம் பெறும் பொருட்டேயாம்'' என்ற நாவலரது கருத்து நிலை சரீரம் கிடைக்கப் பெற்றதன் மகத்துவ நிலையையும், ஆன்மாக்களின் உயர் இலட்சியம் / முத்தியின்பமே என்ற சித்தாந்த சிந்தனையின் மகோன்னத நிலையையும் வெளிப்படுத்துவதாயுள்ளது.

19ஆம் நூற்றாண்டில் ஈழம் கண்ட யுக புருஷன் நாவலராவார். இவர் பல்துறை சார்ந்த அறிஞரும் சைவம், தமிழ் வளர்த்த பேராசானும் தர்க்கம் செய்வதில் வல்லவரும் பிற சமயக் கருத்துக்களை அறிந்துணர்ந்த சமய ஆர்வலரும் பன்மொழிப் புலவரும் ஆவார்.

ஒரு சீர்திருத்த வாதியாகவும், அறிவுக் களஞ்சியமாகவும், அந்நியரின் அட்டுழியங்களை அடக்கவந்த அவதார புருஷராகவும், தமிழ் இலக்கிய மறுமலர்ச்சியின் திறவு கோலாகவும் விளங்கிய நாவலரின் பெருமையினை அவரது குரு பூசைத் தினமாகிய இன்றைய நாளில் ஏற்றிப் போற்றுவோமாக.

இந்து சமய வரலாற்றில் போர்த்துக்கீசர் ஒல்லாந்தர், ஆங்கிலேயரது வருகை இந்து சமய வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்தது. நாவலர் இப்புவியதனில் தோன்றுவதற்கு முன்னரே கத்தோலிக்க மதம் பேர்த்துக்கீசரினால் ஈழத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒல்லாந்தரிடமிருந்து ஆட்சியதிகாரங்கள் அனைத்தையும் ஆங்கிலேயர் தம்வசப்படுத்தினர். ஆங்கிலேயர் காலத்தில் ஈழத்தின் சுதேசிய மதங்கள்,மொழிகள்,கலாசார பண்பாட்டு அடையாளங்கள் என்பன பாரியளவிலான நெருக்குதல்களுக்குள்ளாகின.

ஈழத்தின் அரசியல் நிர்வாகக் கட்டமைப்பை மாற்றியதன் மூலம் ஆங்கில ஆட்சியாளர்கள் தமது மொழி,மதம்,கலாசார விழுமியங்கள் ஆகியவற்றைப் பரப்புவதற்கான சூழலை அமைத்துக் கொண்டனர்.சுருங்கக் கூறின் ஆங்கில ஆட்சியின் விளைவாக ஏற்பட்ட அந்நிய கலாசாரம்,வேற்றுமதம், பிறமொழி என்ற நோய்களால் இந்துசமயம், அதன் பண்பாடு நிறைவடைந்து உருக்குலைந்த வேளையில் சைவத்தையும் தமிழையும் வளம் படுத்துவதற்கென தோன்றிய மகானே ஆறுமுக நாவலரவர்கள்.

சுவாமி ஞானப்பிரகாசர் மரபிலே தோன்றிய முருக பக்தரான கந்தப்பர் -சிவகாமிப் பிள்ளை தம்பதிகளுக்கு ஆறாவது பிள்ளையாக 1822 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 18 ஆம் திகதி யாழ்ப்பாணத்து நல்லூரில் பிறந்தார். இருபாலை சேனாதிராசா முதலியாரிடமும், கோப்பாய் சரவணமுத்துப் புலவரிடமும் ஆரம்பக் கல்வியைக் கற்றார். ஆங்கிலக் கல்வியினை யாழ்.மத்திய கல்லூரியிலே கற்று அங்கு அதிபராயிருந்த பேர்சீவல் பாதிரியாரின் நன்மதிப்பைப் பெற்று அவருக்கு தமிழ்ப் பாடம் புகட்டியவர். இருப்பினும் அவரது வற்புறுத்தலை ஏற்காத நாவலரவர்கள். ஆங்கில மோகத்தை அடியோடு நிராகரிக்கப்பவராகவே விளங்கினார். 1872 ஆம் ஆண்டு சைவ ஆங்கிலப் பாடசாலையை நிறுவினாலும் ஆங்கில ஆட்சியாளர்களின் அனுமதி மறுப்பினால் 1876 இல் மீண்டும் அப் பாடசாலை மூடப்பட்ட வரலாற்று நிகழ்வு சைவத்தமிழ் மக்களுக்கு ஒரு வேதனைக்குரிய விடயமேயாகும்.

சைவத்தையும் தமிழையும் போற்றி

## இன்று ஆறுமுகநாவலரின் குருபூசை தினமாகும்

வாழ்ந்த நாவலர் பூரண பிரமச்சரிய வாழ்வியலை மேற்கொண்டு உத்தியோகத்தினைத் துறந்து வாழ முற்பட்டார்.

*" நான் இல்வாழ்க்கையில் புகவில்லை. இவைகளெல்லாவற்றுக்கும் காரணம் சைவ சமயத்தையும், அதன் வளர்ச்சிக்கு கருவியாகிய கல்வியையும், வளர்த்தல் வேண்டும் எனும் பேராசையேயாம்"*

என்று நாவலரவர்களே குறிப்பிட்டுச் சென்றதில் இருந்து அவரின் நோக்கம் சைவத்தை வளர்ப்பதென்றும்,அதற்கு உதவக்கூடிய முறையில் தமிழ்க்கல்வியையும் அவர் வளர்க்க முற்பட்டாரென்றும் அறியமுடிகிறது.

ஆங்கில ஏகாதிபத்தியத்தினால் பல இன்னல்கள் வரும் என்பதனை உணர்ந்த நாவலரவர்கள் சற்றும் மனம் தளராது சைவத்துக்கும் தமிழுக்கும் சமூகத்துக்கும் பணியாற்ற முற்பட்டார். இவ் வகையிலே நாவலரின் பணிகள் கல்விப்பணி, சமூகப் பணி, சமயப் பணி என்றவாறாக அமைந்திருந்தது. இந்து சமூகத்தில் இருந்த அறியாமையை நீக்க கல்விப் பணியை முன்னெடுத்தார். கல்வியினால் சமூகத்தை விழிப்படையச் செய்தார். சமூக விழிப்புணர்ச்சி சமயத்தின் இருப்பைத் தீர்மானித்தது. ஆகையால் கல்வியினால் சமூகத்தை தட்டியெழுப்பி சமயத்தை நிலைபெறச் செய்ததோர் யுக புருஷரே நாவலர் எனலாம்.

நாவலர் இளமையிலேயே "நா" வன்மை பொருந்தியவராகையால் திருவாவடுதுறை ஆதீனம் "நாவலர்" பட்டமளித்து அவரை சமய சமூகப் பணிக்கு ஊக்கமளித்தது.

சைவ பிரசங்கம், புராணபடனங்கள் என்பவற்றை நிகழ்த்துதல், நூல்களை வெளியிடுதல், கல்வி நிறுவனங்களை தொடக்கி நிர்வகித்தல், ஆலய புனருத்தாரணஞ் செய்தல், பண்ணிசை வளர்த்தல், பிறரைக் கௌரவித்து ஊக்கப்படுத்துதல், சிவவாழ்வு வாழ்ந்து பிறரையும் வாழும்படி செய்தல், வேதாகம நெறிமுறைகளுக்கமைய கிரியைகள் இடம் பெற வழிசெய்தல், துண்டுப்பிரசுரங்கள் ,பத்திரிகைகள், கண்டனங்கள் என்பவற்றை வெளியிடுதல் என்றவாறாக சமயப்பணி ஆற்றினார். நாவலரது முதற்பிரசங்கம் வண்ணை சிவன் கோயில் 1847 மார்கழி 18ஆம் திகதி ஆரம்பமானது. கேட்போரை பிணிக்கும் வகையில் சமய உண்மைகளை எடுத்து விளக்கி உண்மைச் சமயம் எதுவென உணர்த்தினார்.

செய்யுள் நடை, உரைநடை என்ற வகையில் எழுத்துப் பணி புரிந்தார். உரைநடை அரசன், வசன நடை கைவந்த வல்லாளன் எனப் போற்றப்படும் வகையில் உரைசெய்தல் இவருக்கு நிகர் இவரே.

நாட்டில் வறுமை தலைவிரித்தாடிய போது ஏழைக்கு கஞ்சியாவது வழங்கி வறுமையைப் போக்க "கஞ்சித் தொட்டி" அமைத்துதான தர்மம் செய்த உத்தம புருஷர் நாவலராவர்.

காலத்தின் தேவையுணர்ந்து இந்து சமயம், சமூகம், தமிழ்மொழி ஆகியவற்றின் இருப்புணர்ந்து செயற்பட்டதோர் யுகபுருஷராகவே நாவலரை எண்ணமுடிகின்றது. இது மறுக்க முடியாத ஒன்றே. யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலரவர்கள் ஒரு அவதார புருஷர் என்கிறார் சோமசுந்தர பாரதியார்.

*" நல்லை நகராறுமுக நாவலர் பிறந்திலரேல்*
*சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே -*
*எல்லவரும்*
*ஏத்து புராணாகமங்களெங்கே பிரசங்கமெங்கே*
*ஆத்தனறி வெங்கே யறை"*

என்ற சி.வை.தா.வின் கூற்று நாவலர் என்ற மானுடத்தின் மகத்தான சரித்திரப் பெருமையை பறைசாற்றுவதாயுள்ளதென்பது மறுக்கமுடியாத உண்மையே.

**கே.எஸ்.ரமணன்**
ஆசிரியர்

தான் வாழும் நாட்களில் சைவம், தமிழ் இரண்டையும் இரு கண்களாகப் போற்றிய நாவலரவர்கள் 1879 ஆம் ஆண்டு 12ஆம் மாதம் 2ஆம் திகதி சுகயீனமுற்று 5ஆம் திகதி தனது 57 ஆவது அகவையில் ஈழப்புவியதனை விட்டு இறைபுவியதனைச் சென்றடைந்தார். இன்றைய குருபூசை நன்னாளில் யுக புருஷர், சைவத்தமிழ் பாதுகாவலர் நாவலரை நினைந்துருகி போற்றி மகிழ்வது அவரது சைவத் தமிழ்ப் பணிக்கு நாமளிக்கும் உயர் மதிப்பேயாகும்.

வாழி நாவலர் நாமம்
வளர்க சைவம் தமிழ்...

# இடம்பெயர்ந்த மக்கள் வைப்பிலிட்ட தொகையினை பட்டியலிட்ட ஜனாதிபதி

(கொழும்பு)

யுத்தத்தின் இறுதிக் காலகட்டத்தில் வன்னியிலிருந்து வவுனியாவுக்கு வந்த தமிழ் மக்கள் முகாம்களில் அமைக்கப்பட்ட வங்கிகளில் வைப்புச் செய்த பணம் மற்றும் நகைகளின் விபரங்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் தமிழ்க் கட்சிகளின் அரங்கத்துடனான சந்திப்பின்போது எடுத்துக்கூறியுள்ளார்.

இதில் இராமநாதன் முகாமில் அமைக்கப்பட்டிருந்த வங்கியில் 400 மில்லியன் ரூபாவும் மனிக்பாம் முகாமில் 973 மில்லியன் ரூபாவும் கிளிநொச்சியில் 1.43 பில்லியன் ரூபாவும் அத்துடன் முகாம்களில் அமைக்கப்பட்டிருந்த இலங்கை வங்கியில் 500 மில்லியன் ரூபா வைப்பிலிடப்பட்டதாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

இதேபோல் மாங்குளத்தில் 650 பேரின் கணக்குகளில் 278 மில்லியன் ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனைவிட இராணுவம் வன்னியில் கைப்பற்றிய தங்கம் வங்கிகளில் 16 பெட்டகங்களில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அதன் பெறுமதி 400 மில்லியன் ரூபா எனவும் இராணுவத்தினர் 800 மில்லியன் ரூபா பணத்தினை கைப்பற்றி வங்கியில் வைப்பிலிட்டுள்ளதாகவும் ஜனாதிபதி இந்தச் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியேறிய நிலையில் அவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என தமிழ்க்கட்சிகளின் அரங்கத்தினர் கோரிக்கை விடுத்தபோதே ஜனாதிபதி புள்ளிவிபரங்களுடன் இவற்றைத் தெரிவித்ததாக சந்திப்பில் கலந்து கொண்ட தமிழ்க் கட்சியொன்றின் தலைவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)



# மீண்டும் குண்டுகளை வீசி பரபரப்பாக்கியது வடகொரியா

## தென்கொரியாவுக்கு எச்சரிக்கை



தென்கொரியாவுடன் அமெரிக்கா மேற்கொண்டுள்ள கூட்டு இராணுவப் பயிற்சியை எதிர்க்கும் வடகொரியா நேற்று முன்தினம் மீண்டும் தென்கொரிய எல்லை அருகில் குண்டுகளை வீசியது.

சமீபத்தில் தென்கொரியத் தீவு ஒன்றில் வடகொரியா திடீரென குண்டுகளை வீசித் தாக்கியது. இதில் அத்தீவைச் சேர்ந்த நான்கு பேர் பலியாகியதுடன் 18 பேர் காயம் அடைந்தனர். அங்கிருந்த வீடுகளும் காடுகளும் தீயில் கருகின.

இச்சம்பவத்தையடுத்து அமெரிக்கா தன் விமானந்தாங்கிப் போர்க்கப்பலான ஜார்ஜ் வோஷிங்டனை ஜப்பானின் டோக்கியோ துறைமுகத்தில் இருந்து சியோலுக்கு அனுப்பி வைத்தது.

இன்று முதல் அமெரிக்க- தென்கொரிய இராணுவங்கள் அங்கு கூட்டுப் பயிற்சி மேற்கொள்ள இருக்கின்றன. ஆனால் இப்பயிற்சியை எதிர்த்து வரும் வடகொரியா நேற்று முன்தினம் மீண்டும் தென்கொரியாவுக்கு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது. அதில் தென்கொரியாவுடன் அமெரிக்கா மேற்கொள்ளும் கூட்டு இராணுவப் பயிற்சி கொரிய தீபகற்பத்தில் போரை மூட்டிவிடும்.

வடகொரிய மக்களும் இராணுவமும் கடும் கோபத்தில் உள்ளனர். தங்கள் வீரத்தைக் காண்பிக்க தயார் நிலையில் இருக்கின்றனர். மோதலைத் தீவிரப்படுத்தினால்போரில் தான் முடியும். நெருப்போடு விளையாடுபவன் அதனாலேயே அழிந்துபோவான் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அமெரிக்க இராணுவத் தளபதி ஜெனரல் வால் டர் ஷார்ப் வடகொரியா தாக்கிய தீவுக்குச் சென்று பார்வையிட்டதும் வடகொரியாவுக்கு எரிச்சலூட்டியுள்ளது.

இதற்கிடையில்நேற்று முன்தினம் வடகொரிய இராணுவம் தென்கொரிய எல்லைக்கருகில் சில குண்டுகளை வீசியது.

இது வடகொரியாவின் இராணுவப் பயிற்சி மட்டுமே. மேலும் இந்தப் பயிற்சியின் போது தென்கொரிய எல்லைக்குள் குண்டுகள் விழவில்லை என்று தென்கொரியா கூறியுள்ளது.

தென்கொரிய இராணுவ அமைச்சர் ஜெனரல் கிம் டே யங், தன் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

கடந்த மேமாதம் வடகொரியா எல்லைக்கருகில் தென்கொரிய கடற்படைக் கப்பல் ஒன்று மூழ்கியது. அதில் இருந்து 46 வீரர்களும் பலியாகினர்.

இச்சம்பவத்திற்கு பொறுப்பேற்று கிம் தன் பதவியை இராஜினாமா செய்ய முன்வந்தார். எனினும் அப்போதைக்கு அவரது இராஜினாமா தள்ளி வைக்கப்பட்டது. சமீபத்தில் வடகொரியா நடத்திய தாக்குதலுக்குப் பொறுப்பேற்று இப்போது அவர் இராஜினாமா செய்துள்ளார்.

தென்கொரிய அதிபர் லீ மியுங் பாக் அவரது இராஜினாமாவை ஏற்றுக் கொண்டார். இதையடுத்து புதிய அமைச்சராக ஜெனரல் கிம் க்வான் ஜிங் பொறுப்பேற்றுக் கொண்டார். (ஸ்ரீ-2)

# பொதுவாழ்வு, அரசியலிலிருந்து தலாய்லாமா விரைவில் ஓய்வு

இன்னும் ஆறு மாத காலத்தில் அரசியல் மற்றும் பொது வாழ்விலிருந்து ஓய்வு பெறுவேன் என திபெத்தின் புத்தமதத் தலைவர் தலாய் லாமா தெரிவித்துள்ளார். திபெத் பாராளுமன்ற பொதுத் தேர்தலுக்கு பின்னரே இவர் ஓய்வு பெறுவார் என கூறப்படுகிறது. தலாய்லாமாவின் அலுவலக செய்தித் தொட ர்பு பிரிவு இணைச் செயலாளர் டென் சிண்டக்கா அளித்த பேட்டியில்,

திபெத்திய பாராளுமன்றத்திற்கு அடுத்த ஆண்டு மார்ச் மாதம் பொதுத் தேர்தல் நடக்கவுள்ளது. அதுவரை இவரின் அரசியல் நட வடிக்கைகள் பொதுச் சேவைகள் தொடர வேண்டும். எனவே ஒரு வருடத்திற்கு பின்னரே அவர் ஓய்வு பெறுவார் என்றார். (ஸ்ரீ)

# விளையாட்டின் போது காயம்; ஒபாமாவுக்கு உதட்டில் 12தையல்



கூடைப்பந்து விளையாடிக் கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக அமெரிக்க அதிபர் ஒபாமாவின் உதடு கிழிந்து 12 தையல்கள் போடப்பட்டன. ஓய்வு நாளான நேற்று அதிகாலை தமது உறவினர்கள் , நண்பர்களுடன் ஒபாமா கூடைப்பந்து விளையாடிக் கொண்டிருந்தார்.

அப்போது எதிர் அணி வீரர் ஒருவர் ஒபாமாவிடம் இருந்து பந்தை பறிக்க முயன்றுள்ளார். ஆனால் லாவகமாக பந்தை கடத்தி சென்று கொண்டிருந்த போது மற்றொரு வீரரின் கை மூட்டு ஒபாமாவின் உதட்டில் பலமாக இடித்துள்ளது.

எதிர்பாராத இந்த நிகழ்வால் ஒபாமாவின் உதடு கிழிந்து இரத்தம் வடிந்தது. வலியால் துடித்த அவரை உடனடியாக அருகில் இருந்த வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்ற அதிகாரிகள் முதலுதவிகளை வழங்கினர். பின்னர் மருத்துவர்கள் வரவழைக்கப்பட்டு உதட்டில் 12 தையல்கள் போடப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது.

சுமார் 2 மணி நேர ஓய்விற்கு பின் ஒபாமா அலுவல்களைக் கவனிக்க வெள்ளை மாளிகைக்குச் சென்றதாக குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)




# புதிய ஆவணங்களை வெளியிட விக்கிலீக் முடிவு நட்பு நாடுகளை உஷார்படுத்தியது அமெரிக்கா

(வோஷிங்டன்)

ஈராக் போரிலும்,ஆப்கானிஸ்தான் போரிலும் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து உள்ளிட்ட இராணுவம் நடத்திய அத்துமீறல் குறித்த இரகசிய தகவல்களை விக்கி லீக் என்னும் புலனாய்வு நிறுவனம் தனது இணையத்தளத்தில் வெளியிட்டது. அமெரிக்க இராணுவ வீரர்களின் போர்அத்துமீறல்கள் பற்றி அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகனில் இருந்த 4இலட்சம் இரகசிய ஆவணங்கள் அதில் இடம் பெற்றன.

இந்நிலையில், புதிய ஆவணங்களை வெளியிட விக்கி லீக் முடிவு செய்துள்ளது. இன்னும் சில நாட்களில் இணையத்தளத்தில் வெளியாக உள்ள அந்த ஆவணங்கள், முன்னையவற்றை விட 7 மடங்கு பெரியதாக இருக்கும் என்று கூறப்படுகிறது. ரஷ்யா, ஆப்கானிஸ்தான்,மத்திய ஆசிய நாடுகள் போன்றவற் றில் உள்ள ஊழல் அரசியல்வாதிகளுடன் அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் நடத்திய தூதரக ரீதியிலான இரகசிய தகவல்கள் புதிய ஆவணங்களில் இடம்பெறுகிறன.

இதனையடுத்து தன்னுடைய நட்பு நாடுகளானஇங்கிலாந்து,அவுஸ்திரேலியா, கனடா, டென்மார்க் ,நோர்வே போன்றவற்றை அமெரிக்கா நேற்று முன்தினம் உஷாரப்படுத்தியுள்ளது. விக்கி லீக் வெளியிடும் ஆவணங்கள் குறித்தும் தகவல்களை தெரிவித்துள்ளன. (ஸ்ரீ)

# ரஷ்யாவின் சோயூஸ் விண்கலம் பூமிக்குத் திரும்பியுள்ளது

(மொஸ்கோ)

விண்வெளியில் உள்ள சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையத்திலிருந்து மூன்று வீரர்களுடன் ரஷ்யாவின் சோயூஸ் விண்கலம் நேற்று முன்தினம் பூமிக்கு திரும்பியது.

விண்வெளியில் நடக்கும் அரிய நிகழ்வுகள் குறித்து ஆய்வு செய்வதற்காக பூமிக்கு மேலே 355 கி.மீ தொலைவில் சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டுள்ளது.

அமெரிக்கா, ரஷ்யா,ஜப்பான், அவுஸ்திரேலியா உள்ளிட்ட 16 நாடுகளின் ஒத்துழைப்புடன் அமைக்கப்பட்டுள்ள இந்த ஆராய்ச்சி நிலையத்தில் விண்வெளி வீரர்கள் தங்கி ஆராய்ச்சிகளை செய்து வருகின்றனர்.

இவர்களுக்கு தேவையான உணவு, பிராணவாயு, தண்ணீர் உள்ளிட்ட பொருட்களை அமெரிக்க மற்றும் ரஷ்ய விண்கலங்கள் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கொண்டு செல்கின்றன. ஆறு மாதத்துக்கு ஒரு முறையோ அல்லது மூன்று மாதத்துக்கு ஒரு முறையோ அங்கு தங்கியுள்ள விண்வெளி வீரர்கள் மாற்றம் செய்யப்படுகின்றனர்.

இந்த விண்வெளி ஆராய்ச்சி நிலையத்துக்கு சென்ற ரஷ்யாவின் சோயூஸ் விண்கலம் அங்கு தங்கியிருந்த இரண்டு ரஷ்ய வீரர்களையும் ஒரு அமெரிக்க வீரரையும் சுமந்து கொண்டு நேற்று முன்தினம் பூமிக்குத் திரும்பியது. கசகஸ்தான் பகுதியில் உள்ள அர்கலிக் என்ற இடத்தில் சோயூஸ் பத்திரமாக தரையிறங்கியது. (ஸ்ரீ-2)

# சனிக்கிரகத்தில் ஒட்சிசன் உண்டு நாசா விஞ்ஞானிகள் தகவல்



அமெரிக்காவின் விண்வெளி மையமான நாசா சனிக்கிரகத்துக்கு காசினி விண்வெளி ஓடத்தை கடந்த 2004 ஆம் ஆண்டு அனுப்பியது.

அந்த ஓடம் சனிக் கிரகத்தைச் சுற்றி பறந்து ஆய்வு மேற்கொண்டு வரு கிறது. இந்நிலையில் சனிக் கிரகத்தின் அருகேயுள்ள ரியா விண்வெளி பாதையில் ஒட்சிசன் இருப்பது தெரி ய வந்துள்ளது. இப்பாதையில் காந்த சக்தி உள்ளது. அதுதான் ஒட்சினை தாங்கி பிடித்துள்ளது.

அது ஐஸ்கட்டி நிலையில் உள்ளது என விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர். இவை ஐஸ் கட்டிகளில் மூலக்கூறுகளாக உள்ளன என்றும் கூறியுள்ளனர். இதனால் சனிக் கிரகத்தை சுற்றியுள்ள பகுதிகள் ஐஸ்கட்டிகளால் உள்ளது. மேலும் அங்கு காபனீரொட்சைட் உள்ளது என்றும் அறிவித்துள்ளது. (ஸ்ரீ)



தென்கொரியாவை மேலும் எரிச்சலூட்டும் விதமாக “சியர்ஸ்! அதிபர் கிம் ஜங் மிகப் பெரிய தலைவர்” என்று எழுதப்பட்ட மிகப் பெரிய பதாகையை தென்கொரியாவினர் பார்க்கும் விதத்தில் பறக்க விட்டுள்ளது வடகொரியா. இந்தப் பக்கம் தெளிவாகத் தெரிவது தான் தென்கொரியத் தீவு

## வாகன விபத்தில் முதியவர் படுகாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அக்கராயன் பகுதியில் இடம் பெற்ற வாகன விபத்தொன்றில் வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று காலை 8 மணிக்கு அக்காரயன் 8 ஆம் கட்டைப் பகுதியில் இடம் பெற்றது.

இச்சம்பவத்தில் சைக்கிளுடன் மோட்டார் சைக்கிள் நேருக்குநேர் மோதியதில் சைக் கிளில் பயணித்த ஸ்கந்தபுரம் மணியம்குளத் தைச் சேர்ந்த கந்தசாமி பாக்கியராசா (வயது 64) என்பவரே காலில் படுகாயமடைந்த நிலை யில் அக்கராயன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஸ்ரீ)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டில் மாற்றம் அவசியம்

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளுக் குத் தீர்வு காணப்படவேண்டியது அவசிய மானதென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நாட்டின் உட்கட்டுமான வசதிகளை மேம் படுத்துவதனைப் போன்றே சிறுபான்மை மக் களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கு வதும் முக்கியமானதென அவர் குறிப்பிட்டுள் ளார்.

கப்பல்துறை, தகவல் தொழில்நுட்பம், விமானசேவைகள் போன்ற துறைகளில் உலக அளவில் இலங்கையை அபிவிருத்தி செய்வ தற்கு அரசாங்கம் முயற்சித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

அபிவிருத்தியை ஏற்படுத்துவதனைப் போன்றே சிறுபான்மை மக்களின் பிரச்சி னைகளும் முதன்மையானதெனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் குறை களை மட்டுமே விமர்சனம் செய்து வருவதாக வும், இந்த நிலைப்பாட்டில் மாற்றம் தேவை என் றும் அவர் சுட் டிக் காட்டியுள் ளார்.



தேசிய நல்லிணக்கத் தை ஏற்படுத் தல் உள்ளிட்ட சில முக்கிய காரணிகளின் அடிப்படை யில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆளும் கட்சிக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்தாக அவர் தெரிவித்துள்ளார். நீண்டகாலமாக நீதிமன்றில் நிலுவையில் உள்ள வழக்குகளை குறுகிய காலத்தில் விசாரணை செய்து தீர்ப்புக்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென் றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# மாகாணசபைகளின் அதிகாரங்களை அரசாங்கம் கிரமமாக முடக்கி வருகிறது

## ஐ. தே. க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

மாகாண சபைகளின் அதிகாரங்களை அரசாங்கம் கிரமமாக முடக்கி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. படிப்படியாக மாகாணசபைகளின் ஆதி காரங் களையும் உரிமைகளையும் மத்திய அரசாங் கம் கைப்பற்றி வருவதாகத் தெரிவிக்கப்படு கிறது.

மாகாண சபைகளின் வரி அறவீடு செய்யும் உரிமையை மத்திய அரசாங்கம் பெற்றுக் கொண் டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. மாகாணசபை களின் அதிகாரங்களைப் பறிக்கும் ஓர் திட்ட மாகவே இதனைக் கருத வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர், பிரதி அமைச்சர் நியமனங்க ளின் மூலம், அரசாங்கம் மற்றுமொரு உலக சாதனையை நிலைநாட்டியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

19 பில்லியன் சனத்தொகையைக் கொண்ட இந்தியாவில் 34 அமைச்சரவை அமைச்சர்க ளும், 107 மில்லியன் சனத்தொகையைக் கொண்ட ஜப்பானிய 15 அமைச்சர்களும்,310 மில்லியன் மக்களைக் கொண்ட அமெரிக் காவில் 15 அமைச்சர்களும் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ)

# யாழ்.மாவட்டத்திலுள்ள 331 பாடசாலைகளுக்கு அடுத்த வாரம் 2100 கணனிகள் விநியோகம்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தின் 5 கல்வி வலயங் களிலும் உள்ள 331 பாடசாலைகளுக்கு 2100 கணனிகள் அடுத்த வாரம் வழங்கப் படவுள்ளதாக வடமாகாண கல்வித்திணைக் கள முகாமையாளர் எஸ்.பீரிஸ் தெரிவித் துள்ளார்.

இன்ரல் கல்வி நிறுவனத்தின் அனுச ணையுடன் இன்ரல் கணனிக்கல்விக்காக தேர்ச்சி பெற்ற ஆசிரியர் மற்றும் அதிபர் களுக்கான கருத்தமர்வு கடந்த 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு அவர் மேலும் தெரிவிக்கையில்,

சகல பாடசாலைகளிலும் கணனி அறிவை வளர்க்கும் முகமாக வினைத்திறன் உள்ள ஆசிரியர்களுக்கு கணனிக்கல்வி வழங்கப் பட்டு அவர்கள் மூலம் குறைந்தது 20 ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

அதன் மூலம் மாணவர்கள் பயனடை வார்கள்.

அதற்கமையவே யாழ் வலயம், தீவக வலயம்,வடமராட்சி, தென் மராட்சி, வலிகாமம் ஆகிய வலயங்களில் உள்ள பாடசாலைக ளுக்கு அடுத்த வாரம் கணனிகள் வழங்கப்பட வுள்ளது என்றார். (ஸ்ரீ-51)

# ஜனாதிபதியின் உரையை கைத்தொலைபேசியில் வெளியிட்டமைக்கு ஆளும் கட்சியினர் எதிர்ப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி ஆற்றிய உரையின் ஒரு பகுதி யை தனது கையடக்க தொலைபேசி மூலம் நாடாளுமன்ற அவையில் வெளியிட்ட காரண த்தினால் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவின் கைய டக்க தொலைபேசியை செயலிழக்க செய்து அதனை நாடாளுமன்ற செயலாளரின் அலுவ லகத்தில் ஒப்படைக்குமாறு பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி உத்தரவிட்டார்.

இதன்படி அவை ஊழியரிடம் தனது கை யடக்க தொலைபேசியைக் கொடுத்து அதனை செயலாளர் அலுவலகத்தில் தயாசிறி ஒப்படைத் தார்.

வரவு- செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் சபையில் உரையாற்றிய தயாசிறி, ஜனாதிபதி ஆற்றிய உரை தான் இணையத்தளம் ஊடாக கையடக்க தொலைபேசிக்கு பதிவிறக்கம் செய்ததாக கூறி அந்த உரையை தனது கைய டக்க தொல்லபேசியை தனது ஒலிவாங்கி மூலம் சபையில் ஒலிப்பரப்புச் செய்தார்.

இதற்கு ஆளும் கட்சியின் உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். பதிவுசெய்த உரைகளை நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபைக்கு கொண்டு செல்ல முடியாது என பிரதி சபாநாயகர் குறிப்பிட்டார்.

அதன் போது கருத்து வெளியிட்ட தயாசிறி ஜயசேகர, நாட்டின் ஜனாதிபதி ஆற்றிய உரை யை, அவர் தெரிவித்த கருத்தை வெளியிடு வதை ஆளும் கட்சியினர் விரும்பவில்லை எனவும் தான் இதனை ஜனாதிபதியிடம் கூறப் போவதாகவும் தெரிவித்தார்.

இந்த நிலையில் அங்கு கருத்து வெளி யிட்ட ஆளும் கட்சியின் கொறடாவும் அமைச் சருமான தினேஷ் குணவர்த்தன கையடக்க தொலைபேசியை உடனடியாக கைப்பற்று மாறு கேட்டுக்கொண்டார். இதனையடுத்து கைய டக்க தொலைபேசியை செயலிழக்க செய்து அதனை செயலாளர் அலுவலகத்தில் ஒப்படைக் குமாறு பிரதி சபாநாயகர் உத்தரவிட்டார்.

தொலைபேசியை ஒப்படைத்து விட்டு உரை யாற்றிய தயாசிறி, தான் நாட்டின் ஜனாதிபதி ஆற்றிய உரையொன்றை உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டு உரையாற்றியதாகவும் அதனை எதிர்ப்பதன் மூலம் ஆளும் கட்சியி னர் எந்தளவுக்கு ஜனாதிபதிக்கு எதிராக இருக்கின்றனர் என்பதை அறிந்து கொள்ள முடிவ தாகவும் கூறி னார்.

இந்தச் சந்தர் ப்பத்தில் சபை யில்பெரும்அமளி ஏற்பட்டது. தயா சிறி ஜயசேகர தனது உரையை நிறைவு செய்த பின்னர் கையட க்க தொலைபேசி மீண்டும் அவரி டம் வழங்கப்பட் டது. (ஸ்ரீ)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
இணைந்த சுகாதார விஞ்ஞான அலகு மருத்துவபீடம்
அறிவித்தல்

கல்வியாண்டு 2009/2010
புதிய மாணவர்களுக்கான விரிவுரை ஆரம்பம் - பிற்போடல்

29.11.2010 அன்று ஆரம்பமாகவிருந்த 2009/2010 கல்வியாண்டிற்கான மருந்தியல், தாதியியல், மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம் ஆகிய கற்கை நெறிகளுக்கான ஆரம்ப விரிவுரைகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் 13/12/2010 அன்று ஆரம்பமாகும் என்பதனை அறியத்தருகின்றேன்.

பதிவாளர்
26.11.2010

(சி-1681)



அந்தியேட்டி
வீட்டுக்கிருத்திய அழைப்பு

மலர்வு 02 . 12 . 1934



உதிர்வு 30 . 10 . 2010

அமரர் திரு. கோவிந்தர் ஆறுமுகம் கந்தசாமி
(K.A.KANTHASAMY - J.P.
ALL ISLAND - SWORN TRANSLATOR)

கடந்த 30.10.2010 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 29.11.2010 திங்கட் கிழமை காலை 6.00 மணியளவில் தெணியம்மன் கோவில் அந்தி யேட்டி மடத்திலும், சபிண்டீகரண வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் காலை 11.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வுகளில் கலந்து தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத் திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
தொ.பே.021 226 4758

221/2 விநாயக முதலியார் றோட்,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

(சி-1683)

# முறிகண்டியில் இராணுவக் குடியிருப்புக்களுக்காக பெருமளவான நிலம் அபகரிக்கப்பட்டுள்ளது

## மங்கள எம்.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

முறிகண்டியில் இராணுவக் குடியிருப்புக்களை அமைக்கும் நோக்கில் பெரும் பரப்பளவான இடம் ஒதுக்கப்பட்டிருப்பது குறித்து ஐ.தே.க.பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர நேற்று பாராளுமன்றத்தில் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

சுமார் ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான பரப்பளவில் இராணுவக் குடியிருப்புக்களுக்கான நிலம் ஒதுக்கப்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டிய அவர், இஸ்ரேல் பாணியில் இலங்கையும் நில அபகரிப்பில் ஈடுபடுவதாகவும் குற்றம்சாட்டினார்.

அரசாங்கத்தின் இவ்வாறான போக்குகள் முடிவுற்ற ஈழ யுத்தத்தை விட மூர்க்கமானதும் அபாயகரமானதுமான இன்னொரு ஈழ யுத்தத்துக்கே வழிகோலும் என்றும் அவர் அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இடம்பெயர்ந்த மக்களின் நலன் சார்ந்த விடயங்களுக்கு வரவு -செலவுத்திட்டத்தில் ஒரு சதமேனும் ஒதுக்காத அரசாங்கம், அதே பகுதிகளில் இராணுவத் தேவைகளுக்காக பல்லாயிரக்கணக்கான ரூபாய்களைச் செல



வழிப்பதானது பாரபட்சமான நடவடிக்கை என்பதுடன், தமிழ் மக்களின் மனங்களை வென்றெடுப்பதைத் தடுக்கவும் வழி செய்யும் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# நாவலர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

சைவமும் தமிழும் வளர்த்த பெருந்தகை சுவாமி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் குருபூசை விழா இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வவுனியா பண்டாரிக்குளம் ஐயல் கல்லூரி மண்டபத்தில், ஐயல் கல்லூரி முதல்வரும், நகரசபை உப தலைவருமான எம்.எம்.ரதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ)

# சுற்றாடல் அதிகார சபை சட்டத்தில் திருத்தம்

(கொழும்பு)

சுற்றாடல் அதிகார சபைச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படுமென மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதற்கமைய சுற்றாடல் அதிகாரசபைச் சட்டத்தில் தற்போதுள்ள சட்டதிட்டங்கள் மாற்றமடையுமென மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் சரித்த ஹேரத் குறிப்பிட்டார்.

அத்துடன் புதிய சட்டங்கள் சிலவற்றை அறிமுகப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. காலத்துக்குக் காலம் இந்தச்சட்டத்தில் திருத்தங்களை ஏற்படுத்த வேண்டியுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# காரைநகரில் விறுவிறுப்பாக நடைபெற்ற இளைஞர் பாராளுமன்றத் தேர்தல்

(காரைநகர்)

இளைஞர் பாராளுமன்றத் தேர்தல் காரைநகரில் விறுவிறுப்பாக நேற்று நடைபெற்றுள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் பாராளு மன்றத் தேர்தல் காரைநகர் பிரதேச செயலகத்தில் 4 வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர்.

இவர்களுக்கு வாக்களிக்க என ஆயிரத்து 480 பேர் பதிவு செய்யப்பட்டு தகுதி பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் காரைநகர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இத்தேர்தலில் 4வேட்பாளர்களும் தமக்கு ஆதரவான வாக்காளர்களை வாகனங் களில் ஏற்றிவந்து வாக்களிக்க ஆர்வம் ஊட்டினர்.

இவ் வாக்களிப்பு நிலைப் பொறுப்பதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, இப் பிரதேசத்திலேயே அதிகமான வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டதாகவும் இதில் கூடுதலானோர் உற்சாகமாக வாக்களிக்க வந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

காலை நேரம் மழை காரணமாக மந்த நிலையில் இருந்த வாக்களிப்பு மதிய வேளையில் சூடுபிடித்து சுமார் இரு வரிசைகளில் நீண்ட தூரத்தில் வாக்காளர் கள் வாக்களிக்கக் காத்து நின்றதை அவதானிக்க முடிந்தது.

யாழ்ப்பாணத்திலேயே காரைநகரில் தான் அதிகமான வேட்பாளர்களும் வாக்காளர்களும் பதிவு செய் யப்பட்டும் இத் தேர்தல் ஆர்வமாக இருந்ததை அவதானிக்கப் பட்டது. (ஸ்ரீ-246)

# விபத்தில் இளைஞன் படுகாயம்

(கரவெட்டி)

ஆட்டோ- மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த இளைஞர் ஒருவர் சிகிச்சைக்காக மந்திகை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மந்திகைச் சந்தியில் இடம்பெற்றது.

இவ்விபத்து சம்பவத்தில் தும்பளை தெற்கைச் சேர்ந்த ரவீந்திரன் பிரியதர்சன் (வயது 28) என்ற இளைஞனே மோட்டார் சைக்கிளில் பயணித்த வேளை ஆட்டோவுடன் மோதுண்டு விபத்தில் காலில் படுகாயம் அடைந்த நிலையில் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார். (ஸ்ரீ-24)

# காதர் எம்.பிக்கு சபாநாயகர் எச்சரிக்கை

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவுக்கு தகாதவார்த்தைகளை பிறப்பித்த அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல் காதரை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ எச்சரித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் பயன்படுத்த வேண்டிய வார்த்தைகள் தொடர்பில் அறிவுறுத்திய சபாநாயகர் அவரின் கூற்றை மீளப்பெறும் படி குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# யா/ அச்சுவேலி மத்திய கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபர் திரு. கணபதிப்பிள்ளை ஸ்ரீஸ்கந்தராசா அவர்களின் மணிவிழா சிறப்புமலர் - 27.11.2010

### வாழ்த்துச் செய்தி



திரு.க.ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் எமது கல்லூரியில் ஆசிரியராக பதினொரு வருடங்களாகவும் பிரதி அதிபராக பதினொரு வருடங்களாகவும் சேவையாற்றியுள்ளார். இவர் தனது சேவைக்காலத்தின் போது இக்கல்லூரிக்கு பல சேவைகளை ஆற்றியுள்ளார். பல மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளை பெறுவதற்கு காரணமாக அமைந்து இக்கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார். இவர் தனது சேவையைப் பூர்த்தி செய்து 26.11.2010 உடன் ஓய்வு பெறுகின்றார். இவரது சேவையை பாராட்டுவதுடன் ஓய்வு பெற்ற பின் நீண்ட காலம் சந்தோசமாக வாழ வேண்டுமென பாடசாலையின் சார்பில் வாழ்த்தி நிற்கின்றேன்.

வே.அரசகேசரி,
அதிபர்,
யா/அச்சுவேலி மத்திய கல்லூரி.

### வாழ்த்துச் செய்தி



கடந்த 22 ஆண்டுகளாக யா/ அச்சுவேலி மத்திய கல்லூரியின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்ட எங்கள் பிரதி அதிபர் திரு.க.ஸ்ரீஸ்கந்தராசா அவர்களின் சேவையைப் பாராட்டுவதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். எமது பாடசாலையில் சிறந்த ஆசிரியராக, பகுதித்தலைவராக, பிரதி அதிபராக அவரின் சேவை வியக்கத்தக்கது. கலைத்திட்ட முன்னெடுப்புக் களிலும், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் முன்னின்று உழைத்தவர். அவரின் நீண்டகால கல்லூரிக்கான சேவை பாராட்டத்தக்கது. அன்னார் சேவை யில் இருந்து இளைப்பாறிய பின்னும் சிறந்த நலத்துடனும் மகிழ்வுடனும் வாழ வாழ்த்துகின்றேன்.

திருமதி.யோ.சந்திரகுமார்,
பிரதி அதிபர்,
யா/அச்சுவேலி மத்திய கல்லூரி.

### மணிவிழா நாயகனை வாழ்த்துகிறேன்

யாழ் நகரில் அச்சாணி போல் திகழும் அச்சுவேலியில் புகழ் பூத்தகல்லூரி அச்சுவேலி மத்திய கல்லூரியில் 1980களில் கல்லூரியின் சமூகக்கல்வி ஆசிரியராக பதவியேற்று கடமையாற்றி பின்னர் புவியியல் பாடத்துறையில் பல சிறப்பு கலை பட்டதாரிகளை உருவாக்கிய திரு.க.ஸ்ரீஸ்கந்தராசா அவர் கள் தற்போது இடைக்காடு மகாவித்தியாலயத்தில் சேவையாற்றி 60 ஆவது அகவையில் அரசாங்க கல்வியியலில் ஓய்வு பெறும் பல்கிராமம் போற்றும் உன்னத ஆசான். தனது ஓய்வுறும் காலத்தில் மென்மேலும் கல்விக்காக பலசேவைகள் ஆற்றி தனது ஓய்வு காலத்தை அமைதியாகவும் சாந்தமாகவும் சுபீட்சகரமான எதிர்காலத்தை குடும்பத்தார் சகிதம் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டு கிறேன். அத்துடன் மேற்படி ஆசிச்செய்தியை வழங்குவதற்காக சந்தர்ப்பம் தந்த இறைவனுக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

அ.வேதநாயகம்,
வலயக்கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.





**திரு கணபதிப்பிள்ளை ஸ்ரீஸ்கந்தராசா**
விசேட பயிற்சி சமூகக்கல்வி
கலைப்பட்டதாரி (B.A) Dip in Edu

**சேவை விபரம்**
கிளி /கிளிநொச்சி ம.வி-16.10.1978 - 31.12.1983
ஆசிரிய கலாசாலை - 01.01.1984 - 31.12.1985
கிளி /கிளிநொச்சி ம.வி-01.01.1986 - 14.05.1987
யா/ அச்சுவேலி ம.க-15.05.1987 - 02.03.2009
யா/ இடைக்காடு ம.வி-03.03.2009 - 26.11.2010
பிறப்பு: 27.11.1950
ஆரம்பக்கல்வி: யா/ வளலாய் அ.மி.த.க பாடசாலை
உயர்தரம்: யா/ உடுப்பிட்டி அ.மி.கல்லூரி
பட்டப்படிப்பு: பேராதனைப் பல்கலைக்கழகம்
பட்டப்பின்படிப்பு: யாழ் பல்கலைக்கழகம்

### அர்ப்பணிப்புள்ள நல்லாசான்

யாழ். அச்சுவேலி மத்திய கல்லூரியில் ஆசிரியராக, பாட இணைப்பாளராக, பகுதித்தலைவராக, பிரதிஅதிபராக மிக நீண்ட காலம் கடமையாற்றி தற்போது இடைக்காடு மகா வித்தியாலயத்திலிருந்து ஓய்வுபெறும் திரு.க.ஸ்ரீஸ்கந்தராசா தமது சேவைக் காலத்தில் மிகவும் துடிப்புடன் பணியாற்றி பல கலைப் பட்டதாரிகளை உருவாக்கிய பெருமை பெற்றவர். உயர்தர வகுப்பிலே புவியியல் பாடத்தில் பல மாணவர்கள் சிறந்த பெறுபேற்றைப் பெறுவதற்கு பேருதவி புரிந்தார். இவர் கற்பித்தல் பணிகளுடன் மாத்திரமன்றி முகாமைத்துவச் செயற்பாட்டிற்கும் மிகவும் உறுதுணையானார். அவரது அர்ப்பணிப்புடன் கூடிய சேவை அச்சுவேலி மத்திய கல்லூரியின் வளர்ச்சிக்கு அளப்பரியது. அவரது ஓய்வுக் காலத்தில் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடுழி வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்தி நிற்கிறோம்.

தி.பொ.வரதகுலசிங்கம்,
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

### கடமையே கண்ணானவர்



அச்சுவேலி மத்திய கல்லூரியின் வளர்ச்சிப்பாதையில் இருபத்து மூன்று வருடங்கள் ஆசிரியராகவும் பகுதித்தலைவராகவும் பிரதியதிபராகவும் சேவையாற்றிய திரு.ஸ்ரீஸ்கந்தராசாவின் சேவை பாராட்டுக்குரியது. அதிபருக்கு நல்ல ஆலோசகராய் மாணவர்களுக்கு ஓர் சிறந்த ஆசானாய் செயற்பட்டுத் தன் சேவையில் மிளிர்ந்தவர். கல்லூரித் தேவைகளுக்காக இரவு பகல் பாராது சேவையாற்றிய நல்லாசானின் சேவை போற்றுதற்குரியது. நான் அக்கல்லூரியின் அதிபராக இருந்த போது அவர் வழங்கிய ஒத்துழைப்பை அடிக்கடி நினைவுகூருவதுண்டு. அறுபதாவது அகவையை நிறைவு செய்து சேவையி லிருந்து ஓய்வுபெறும் அவரது ஓய்வுகாலம் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

திரு.வே.பாலசுப்பிரமணியம்,
கோட்டக்கல்விப்பணிப்பாளர்,
கோப்பாய்.

### தன்னலங்கருதாச் சேவையாளன்

யாழ். அச்சுவேலி மத்திய கல்லூரியின் 25 ஆண்டுகள் அரும்பணியாற்றிய கல்விக்கும் தன்னலம் கருதா சேவையும் ஆற்றிய உலகின் வரைபடமாம் புவியியலுக்கு அச்சுவேலியில் வித்திட்ட நல்லாசான் க.ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் மணிவிழாவைக் கொண்டாடி ஓய்வு பெறுகையில் பொன்னான அவர் சேவையை பாராட்டி வெளியிடும் இச்சிறப்பிதழ் மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

மாணவர் நலனே தனது பணியென உயர்ந்த மேன்மை தங்கிய உள்ளத்துடன் சேவையாற்றிய அவரின் ஆசிரியத்துவம் போற்றுவதற்குரியதாகும். அவரது ஓய்வு காலத்தில் பல்வேறு சிறப்புகளும் சரிவரப் பெற்று தனது வாழ்க்கையை அமைதியாகவும் சிறப்பாகவும் பெற வாழ்த்துகிறேன்.

வே.தி.செல்வரத்தினம்,
மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர்,
வடமாகாணம்.

### வாழ்த்துச் செய்தி

யாழ்.அச்சுவேலி மத்திய கல்லூரியில் கடந்த 25 வருடங்களாக கடமையாற்றி தற்போது யாழ். இடைக்காடு மகா வித்தியாலயத்தில் கடமையாற்றி இன்றுடன் வயது 60துடன் இளைப்பாறும் ஆசிரியர் ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் எமது பாடசாலையின் பல கலைப்பட்டதாரிகளை உருவாக்கியதுடன் சாதாரண தரத்தில் புவியியல் பாட ஆசிரியராகவும் நன்மாணாக்கர்களை உருவாக்கிய ஆசிரியப்பெருந்தகை அவர்கள் ஓய்வுக் காலத்தில் சிறப்புடன் வாழ எல்லாம் வல்ல இறைவனை வாழ்த்தி வேண்டி நிற்கும் யாழ்.அச்சுவேலி மத்திய கல்லூரி பழைய மாணவர்கள் சங்கத்தினர்.

இ.துஸ்யந்தன்,
தலைவர்,
பா.ப.மா.ச

-நடைபெற முடியாதது- என்று உலகில் எதுவுமே இல்லை என்றே எனக்குத் தோன்றுகிறது.
- மார்க் ட்வைன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# அரசுத்தரப்புக்குள் அதிருப்தி எதிராக செயற்படும் அமைச்சர்கள்

## கொழும்பு அரசியலில் பிசுபிசுப்பு

(கொழும்பு)

அரசாங்கத் தரப்பிற்குள் நிலவும் அதிருப்திகள் தற்போது வெடித்துக்கிளம்பத் தொடங்கி விட்டதாக அமைச்சரவை உறுப்பினர்களுக்கு நெருக்கமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது. அதிலும் சிரேஷ்ட அமைச்சர்களாக நியமிக்கப்பட்டவர்கள் கடும் அதிருப்தியுடன் ஜனாதிபதியின் செயற்பாடுகளை விமர்சிக்கவும் எதிர்த்து நடக்கவும் துணிந்துள்ளதாக ஜனாதிபதி செயலகத்தின் அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

ஏற்கெனவே சிரேஷ்ட அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தனது முன்னைய அலுவலகத்தை விட்டு இன்னும் வெளியேறவில்லை. புதிய அமைச்சருக்கு பதவியேற்பதற்கும் வழிவிடுவதாக இல்லை என்று அந்த அதிகாரி சுட்டிக்காட்டினார்.

ரட்ணசிறி விக்கிரமநாயக்க முன்னர் பொதுநிர்வாக மறுசீரமைப்பு அமைச்சராக செயற்பட்டிருந்ததுடன் தற்போதைக்கு அந்த அமைச்சுக்குப் பொறுப்பாக நவீன் திஸாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆயினும் முன்னைய அமைச்சர் வெளியேறாத நிலையில் அவர் இன்னும் தன் அமைச்சின் கடமைகளைப் பொறுப்பேற்கவில்லை என்று தெரியவருகின்றது.

அவ்வாறான நிலையில் நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய இன்னொரு சிரேஷ்ட அமைச்சரான பேராசிரியர் திஸ்ஸவிதாரண அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு விடயத்தில் பகிரங்கமாகவே அரசாங்கத்தைச் சாடியுள்ளார்.

குறைந்தபட்சம் 2 ஆயிரத்து 500 ரூபாயாவது அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பாக வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்று குறிப்பிட்ட அவர், தற்போதைய சம்பள அதிகரிப்புக் குறித்து தான் பெரிதும் அதிருப்தியுற்றிருப்பதாகவும் நாடாளுமன்றத்தில் வரவுசெலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே இரண்டொரு நாட்களுக்கு முன் சிரேஷ்ட அமைச்சர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்றை ஜனாதிபதி ஏற்பாடு செய்திருந்தபோதும் அதில் பலர் கலந்துகொள்ளவில்லை என்றும் ஜனாதிபதி செயலக அதிகாரி உறுதிப்படுத்தியுள்ளார். (ச-5)

## கிருஷ்ணாவின் உரை கேட்டு என் கன்னத்தின் ஓரம் நனைந்தது

இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தார்.

சுமார் நூற்றுப்பத்துக்கோடி மக்கள் தொகையைக் கொண்ட பாரத தேசத்தின் வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தமை வரலாற்று முக்கியத்துவமான நிகழ்வு என்பதற்கு அப்பால், அதற்கு மேலாக, இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் உதவிப் பணிமனையை யாழ்ப்பாணத்தில் திறந்து வைத்தமை வரலாற்றின் மிகப் பெரும் பதிவாகும்.

எதிர்காலத்தில் ஈழத் தமிழர்களின் புதிய வரலாற்றின் புனைவுக்கும் அதுவே ஓம்காரமாக அமையும் என்ற எதிர்பார்ப்பும் உண்டு.

அரசியலில் எதுவும் எந்நேரமும் நடக்கலாம்- நடைபெறாமல் போகலாம் என்பதால், அதீதமான எதிர்வுகூறல்களை தவிர்த்துக்கொண்டுள்ளோம்.

எதுவாயினும், ஈழத் தமிழர் தொடர்பில் ஏதோவொரு திருப்புமுனை நடைபெறப் போகின்றது என்பதை ஆழ்மனத்தால் உணரமுடிகின்றது. அதற்குச் சான்றாக சில சம்பவங்களும் நடைபெறுகின்றன.

இருபத்தைந்து ஆண்டுகளாக இடம்பெயர்ந்திருந்த நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் திருவுருவச் சிலை கடந்த ஆகஸ்ட் மாதம் நல்லூர்க் கந்தப் பெருமானின் கோட்டத்தில் மீளவும் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

ஆறுமுகநாவலரின் திருவுருவச் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்ட அதேநாள் நல்லூர் ஆறுமுகப் பெருமானின் இராஜ கோபுரத்தில் இயந்திரத் தகடுகள் பிரதிஷ்டை செய்யப்பட்டன.

இவையெல்லாம் நடந்துகொண்டிருக்கையில், நேற்றையதினம் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்திருந்த இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா யாழ்ப்பாணத்திற்கும் இந்தியாவிற்கும் இருக்கக்கூடிய கல்வி, கலாசார, பண்பாட்டு உறவுகளை கூறியதோடு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாலவரின் பெருமையையும் கூறியபோது எம் கன்னத்தின் ஓரங்கள் நனைந்துகொண்டன.

ஆம், ஈழத் தமிழர்களின் முதல் விடுதலை வீரர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரே. ஆறுமுகநாவலர் போராட்டம் நடத்தாமல் இருந்திருந்தால் தமிழர்களின் எந்தப் போராட்டமும் சாத்தியமாகியிராது. அந்த விடுதலை வீரரின் குருபூசைத்தினம் இன்று.

ஈழத்தமிழர்களின் முதலாவது விடுதலை வீரரை நூற்றுப்பத்துக்கோடி மக்களைக் கொண்ட பாரத தேசம் புகழ்ந்துரைத்ததிலிருந்து தமிழர்களின் உரிமையை அந்த நாடு அங்கீகரிக்கின்றதென்ற முடிவுக்கு நாம் வரமுடியும்.

இன்று ஆறுமுகநாவலரின் குருபூசை. நேற்று அமைச்சர் கிருஷ்ணா அவரைப் புகழ்ந்துரைக்கின்றார். எல்லாம் அவன்செயல். நல்லகுருநாதன் நம்மை வருத்துவது உரிமை தருவதற்காகவும் இருக்கலாம். பொறுத்திருந்து பார்ப்போம்.

## ஆலயத்தில் திருட்டு

(கோப்பாய்)

கோப்பாய் தெற்கு பழையவீதியில் அமைந்துள்ள வீரப்பத்திரர் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணியளவில் ஆலயத்தின் சொத்துக்கள் திருடர்களால் சூறையாடப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த சிலராலேயே இத்திருட்டு மேற் கொள்ளப்பட்டுள்ளதென சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாலை நேர பூசை வழிபாடுகளுக்காக பூசகர் ஆலயத்திற்குச் சென்று பார்த்தபோது ஆலயத்திலுள்ள பெறுமதிவாய்ந்த குத்து விளக்குகள் திருட்டு போனதனை அவதானித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் ஆலயத்தின் வீதியருகில் மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் சந்தேகத்திற்கிடமான முறையில் நின்றதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். (ச-5)

## தங்கநகைகள் திருட்டு

துன்னாலை வடக்கு பகுதியிலுள்ள ஆசிரியர் ஒருவரின் வீடொன்றில் நேற்று முன்தினம் இரவு 9.00 மணியளவில் 20 பவுண் தங்க நகைகள் உட்பட பணமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

வாள், கத்தி, பொல்லுகளுடன் வீட்டிற்குள் புகுந்த திருடர்கள் ஆயுத முனையில் நகைகளை எடுத்துவரும்படி கூறி வீட்டிலிருந்த நகைகளை அபகரித்ததுடன் பெறுமதியான ஒரு கைத்தொலைபேசியையும் களவாடிச் சென்றுள்ளனர். இச் சம்பவம் குறித்து பருத்தித்துறை பொலிஸார் தமது விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-7,24)

## கருத்தரங்கு

சிந்தனைக் கூடத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படும் முழு நாள் கருத்தரங்கு இன்று காலை 9.00 மணிக்கு தியாகி அறக்கொடை மண்டபத்தில் நடைபெறும். இதில் அரசியல் அமைப்புக்கான 18 ஆவது சீர்திருத்தமும், உள்ளூராட்சி அதிகாரங்களுக்கான தேர்தல் சட்டமூலமும் என்ற தலைப்பில் சட்டத்தரணி எஸ்ஜீபுஞ்சி சேவா உரைநிகழ்த்துவார். (ச)

## நெல்லியடி ம.ம.வியில் தரம்-6 மாணவர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் 2011 ஆம் ஆண்டிற்கான தரம் 6ற்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கு விண்ணப்பித்துஅழைப்புக்கடிதம்கிடைத்த பெற்றோர் அல்லது பாதுகாவலர்களை நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு தவறாது சமுகமளிக்குமாறு பாடசாலை அதிபர் எஸ்.சேதுராஜா அறிவித்துள்ளார்.

வரும்போது மாணவர்களின் பாடசாலை விடுகைப்பத்திரம், தரம்- 5இன் தேர்ச்சி அறிக்கை மற்றும் பிறப்புச் சான்றிதழ் ஆகியவற்றை எடுத்துவருமாறும் அவர் தெரிவித்தார். (ச)

## வடமராட்சி லயன்ஸ் கழகத்தினால் இலவச பொது மருத்துவ முகாம்

(பருத்தித்துறை)

வடமராட்சி லயன்ஸ் கழகத்தினால் இலவச பொது மருத்துவ முகாம் ஒன்று கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் 1.30 மணி வரை நடைபெற உள்ளதாக லயன்ஸ் கழக செயலாளர் லயன் என்.துரைராஜா தெரிவித்துள்ளார்.

இம் மருத்துவமுகாமில் நீரிழிவு பரிசோதனை, கண்பரிசோதனை மற்றும் பொது மருத்துவம் போன்ற மருத்துவ சேவைகளோடு கருத்துரைகளும் வழங்கப்படவுள்ளது.

யாழ்.மருத்துவபீட மாணவர்களும் சிரேஷ்ட வைத்தியர்களும் கலந்து கொண்டு இச்சேவையை நடாத்தவுள்ளனர். இதன் மூலம் பயன் பெற விரும் புவோர் தமது பெயர்களை பதிவு செய்து உரிய பயனைப் பெற்றுக் கொள்ளலாம் என செயலாளர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-10-24)

## சட்டவிரோதமாக இறக்குமதியான 650 கிலோ ஏலக்காய்கள் அழிப்பு

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட போது கைப்பற்றப்பட்ட 650 கிலோ கிராம் ஏலக்காய்கள் சுங்கத்திணைக் களத்தால் எரிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு மாதங்களுக்குள் இந்தியா, டுபாய் போன்ற நாடுகளிலிருந்து 21 நபர்களால் பல்வேறு தடவைகளில் சட்டவிரோதமாக இவை இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டிருந்ததாக சுங்கத் திணைக்களத்தின் அத்தியட்சகர் பராக்கிரம பஸ்நாயக்க குறிப்பிட்டார். எரிக்கப்பட்ட ஏலக்காய்களின் பெறுமதி 32 இலட்சம் ரூபாவெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## இறுதிக்காலம் நெருங்குகிறது



இறுதிக்காலம் இதுவே என அறிந்து கொள்ளுங்கள். உற்சாகத்திலிருந்து விழித்தெழும் நேரம் ஏற்கனவே வந்து விட்டது. நான் கிறுஸ்துவின் மேல் நம்பிக்கை கொண்டபோது இருந்ததை விட மீட்பு இப்பொழுது மிக அண்மையில் உள்ளது.

இரவு முடியப்போகிறது. பகல் நெருங்கியுள்ளது. ஆகவே இருளின் ஆட்சிக்குரிய செயல்களைக் களைந்து விட்டு ஒளியின் ஆட்சிக்குரிய படைக்கலங்களை அணிந்து கொள்வோமாக! பகலில் நடப்பது போல மதிப்போடு நடந்து கொள்வோமாக! களியாட்டம், குடி வெறி, கூடா தொழுக்கம், காம வெறி,

### பரமபிதா காட்டிய பாதை

சண்டை சச்சரவு ஆகியவற்றை தவிர்ப்போமாக! தீய இச்சைகளைத் தூண்டும் ஊனியல் பின் நாட்டங்களுக்கு இடம் கொடுக்க வேண்டாம். இயேசுக்கிறிஸ்துவை அணிந்து கொள்ளுங்கள்.

வெள்ளப்பெருக்கு வந்து அனைவரையும் அடித்துச் செல்லும் வரை அவர்கள் எதையும் அறியாதிருந்தார்கள். அப்படியே மானிட மகன வருகையின் போதும் இருக்கும். இருவர் வயலில் இருப்பர் ஒருவர் எடுத்துக்கொள்ளப் படுவார். மற்றவர் விட்டுவிடப்படுவார். இருவர் திரிகையில் மாவரைத்துக் கொண்டிருப்பர். ஒருவர் எடுத்துக்கொள்ளப்படுவார். மற்றவர் விட்டுவிடப்படுவார்.

விழிப்பாய் இருங்கள்! ஏனெனில் உங்கள் ஆண்டவர் எந்த நாளில் வருவார் என உங்களுக்குத் தெரியாது. இரவில் எந்தக் காவல் வேளையில் திருடர் வருவர் என்று வீட்டு உரிமையாளர்களுக்கு தெரிந்திருந்தால் அவர் விழித்திருந்து தம்வீட்டில் கன்னமிடவிடமாட்டார் என்பதை அறிவீர்கள்.

எனவே நீங்களும் ஆயத்தமாய் இருங்கள். ஏனெனில் நீங்கள் நினையாத நேரத்தில் மானிட மகன் வருவார்.

# பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின்

## 47 ஆவது பணி பூர்த்தி சிறப்பு மலர்



உறுதியுடன்
இரு.
அதற்கு மேலாகத்
தூய்மையாகவும்,
முழு அளவில்
சிரத்தை
உள்ளவனாகவும்
இரு.
-சுவாமி விவேகானந்தர்

காற்று
மேகத்தை அடித்துச்
செல்வது போல்
இறைவனது
திருநாமம் மனத்தைச்
சூழ்ந்துள்ள உலகப்
பற்று எனப்படும்
மேகத்தை
அழிக்கிறது.
-ஸ்ரீசாரதாதேவி







**இதுவரை காலமும் யாழ்ப்பாண மாவட்டத்தில் பணிபுரிந்த நாம் 30.08.2010 தொடக்கம் வன்னி பெருநிலப்பரப்பில் கால்ஊன்றி இதுவரைக்கும் ரூபா 3 1/2 இலட்சத்துக்கு மேலாக செலவழித்து விட்டோம். இது வரைக்கும் சேவாச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமி 11 முறை அங்கு பணிநிமித்தமாகச் சென்றுள்ளார்.**

1) உருத்திரபுரம் சம்வாய்க்கால் அருட்சகோதரர்களின் மாணவர் இல்லம் - மின்சார இணைப்பு, இதர பணிகள் ரூபா 21/2 இலட்சம்.



2) புனித திரேசா மகளிர் பாடசாலையில் மாணவர்கள் 7 பேருக்கு துவிச்சக்கரவண்டி அன்பளிப்புச் செய்யப்பட்டது.

3) உருத்திரபுரம் சம்வாய்க்கால்-அருட்சகோதரர்களின் மகளிர் இல்லத்துக்கு ஒரு மோட்டார் சைக்கிள் ரூபா 76,000/= (01.01.2011இல் வழங்கப்படவுள்ளது)

4) உருத்திரபுரம் மகாவித்தியாலயத்துக்கு ஒரு ஜெனரேற்றர் ரூபா 8,500/= வழங்கியுள்ளோம்.



5) வட்டக்கச்சி மகாவித்தியாலயத்துக்கும், ராமநாதபுரம் பாடசாலை மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் ரூபா 15,000/= வழங்கப்பட்டன.

6) வட்டக்கச்சியில் அடையாளம் காணப்பட்ட 3 குடும்பங்களுக்கு ஒரு பசுமாடு வழங்குவதற்கு நிதியுதவிக்கு ரூபா 50,000/= ஒதுக்கப்பட்டுள்ளது.

அடுத்த வருடம் தொடக்கத்தில் மேலும் பணிகள் விஸ்தரிப்பு செய்ய ஆவன செய்யப்படும்.



முக்கிய குறிப்பு :- வட்டக்கச்சியில் பணிவிஸ்தரிக்க தடையாக இருப்பது கிளிநொச்சியில் இருந்து வட்டக்கச்சிக்கு போகும் தெரு மிகவும் மோசமான நிலையில் உள்ளது. பொதுவாக பட்டணங்களில் வசிப்பவர்களுக்கு கிராமங்களில் வசிப்பவர்களின் துன்பங்கள் தெரியவாய்ப்பில்லை. அங்கு காலகதியில் தங்கி பணிபுரிய கருத்தில் கொண்டுள்ளோம்.



உருத்திரபுரம், வட்டக்கச்சி சூழல் மனிதனுக்கு மிகவும் இதமான இடங்கள். பட்டணத்தின் ஆடம்பரத்தின் விளைவுகள் அங்கு கிடையாது. இவ்வளவு காலம் அங்கு செல்லவில்லை என்பது எங்களின் ஆழ்ந்த கவலை.

- அன்னையின் அடியவன்.



யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா கையளித்த உழவு இயந்திரங்களை அமைச்சர் பசில் ராஜபக்ஷ யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச அதிகாரிடம் ஒப்படைப்பதையும் அவ் உழவு இயந்திரங்களை செலுத்தப்படுவதையும் துணைத் தூதரகத்தின் நினைவுக்கல்லை திறந்துவைக்கப்படுவதையும் மேலுள்ள படங்களிலும், தூதரகத் திறப்புவிழாவில் கலந்துகொண்ட பிரமுகர்களை அடுத்துள்ள படங்களிலும் வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி இந்தியாவின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்படவுள்ள வீடமைப்புத் திட்டத்திற்கான அடிக்கல்லை நாட்டுவதையும், வீடமைப்புத் திட்டத்தை பிரமுகர்கள் பார்வையிடுவதையும் இந்தியதுணைத்தூதுவர் மகாலிங்கம் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

படங்கள்:- எஸ்.கரன், என். குமார்

# 13ஆவது அரசியல் திருத்தம்...

அவர்தனதுஉரையில்மேலும்கூறியதாவது,

யாழ்ப்பாணத்தில் இந்திய உதவித் தூதரக அலுவலகத்தைத் திறந்து வைக்கும் இந்த வைபவத்தில் பிரசன்னமாகி இருந்தமைக்காக உங்கள் எல்லோருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

பொதுவாக வட மாகாணத்தைச் சேர்ந்த மக்களுக்கும் விஷேடமாக யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சேர்ந்த மக்களுக்கும் தென்னிந்திய மக்களுடனான உறவைப் பற்றிக் குறிப்பிடாவிட்டால் இலங்கைக்கும் இந்தியாவுக்குமான உறவுகள் பற்றிய குறிப்பு பூரணமற்றதாகவேயிருக்கும்.

பல நூற்றாண்டுகளாக யாழ்ப்பாணம் எப்போதும் இந்தியாவின் வரலாறு, கலாசாரம், சமயம், அரச மற்றும் அரசதானிகள், வர்த்தக மற்றும் வாணிகம் கலை,நடனம், இலக்கியம் போன்றவற்றுடன் சம்பந்தப்பட்டேயிருந்துள்ளது. யாழ்ப்பாணத்துறை முகமானது இந்தியாவின் முக்கிய கடல் மார்க்கத்திலமைந்துள்ளது.

தமிழ் இலக்கியத்தில் ஐம்பெருங் காப்பியங்களிலொன்றான மணிமேகலையில் யாழ்ப்பாணம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

காஞ்சிபுரத்திலிருந்து யாழ்பாடி ஒருவருக்குப் பரிசாக அரசனால் வழங்கப்பட்டதால் யாழ்ப்பாணம் எனப் பெயர் பெற்றதாக புராணக்கதைகள் கூறுகின்றன. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆறுமுகநாவலர், சி.டபிள்யூ தாமோதரம்பிள்ளை போன்ற கல்விமான்களும் அறிஞர்களும் பழந்தமிழ் இலக்கியத்தில் தங்களுடைய அறிவாலும் ஆராய்ச்சிகளாலும் தமிழ் இலக்கியத்திற்குப் பெரும் அணி செய்தனர். எனவே இந்திய உதவித் தூதரக அலுவலக மொன்றைத் திறப்பதற்கு முடிவு செய்தபோது யாழ்ப்பாணமே அதற்கு இயல்பானதும் தவிர்க்கமுடியாததுமான இடமாகவிருந்தது இயற்கையானதே.

இங்கு பிரசன்னமாகவிருப்போரிற் பலர் திருச்சிக்கும் பலாலிக்குமிடையேயான நேரடி விமானச் சேவையும், தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்குமான கப்பல் சேவையும் நடைபெற்ற நாட்களைக் கண்டிருப்பீர்கள். அப்போது மெட்றாஸ் என்றழைக்கப்பட்ட சென்னைக்கு உங்களிற் சிலர் திரைப்படம் பார்ப்பதற்காகவும் சென்றிருப்பீர்கள். அந்தத் தொடர்புகளுக்குப் புத்துயிர் அளிக்க வேண்டிய சரியான தருணம் இதுவேயாகும்.

**வடக்கைத் தாக்கிய ஆயுத போராட்டம்**

இலங்கையானது சரித்திரத்தின் மிகவும் கடினமானவொரு காலத்திலிருந்து மீண்டுள்ளது. சென்ற ஆண்டு முடிபடைந்த ஆயுதப் போராட்டமானது இலங்கையின் சகல சமூகங்களிடையேயும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்த போதிலும் அது பெருமளவில் வட மாகாண மக்களையே பாதித்தது. அவர்களால் ஏற்படுத்தப்பட்டிராதவொரு யுத்த நடவடிக்கைகளின் மத்தியில் அப்பாவி ஆண்கள், பெண்கள், சிறுவர் ஆகியோர் அகப்பட்டிருந்தனர். மனித கேடயங்களாகப் பயன்படுத்தப்பட்ட பல்லாயிரக் கணக்கான உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் யுத்த வலயத்திலிருந்து மீண்டு வெளியே வந்தனர். இலங்கையின் முன்னாலுள்ள பாரிய சவாலானது உள் நாட்டில் இடம் பெயர்ந்தோரை மீளக்குடியேற்றுவதும் இலங்கையின் வட பகுதியை மீள் நிர்மாணம் செய்வதுமாகும்.

வடபகுதியிலுள்ள மக்கள் அடைந்த கஷ்டங்கள் கிலேசங்கள் ஆகியவற்றை நிவர்த்தி செய்வதற்கு இந்தியா தன்னால் இயன்றளவு பங்களிப்பை வழங்க முயன்றது. முதலில் உணவு, உடை, மருந்து வகைகள் மற்றும் நாளாந்த தேவைகளுக்கான பொருட்கள் ஆகியவற்றை விரைவாக முகாம்களுக்கு அனுப்பி வைத்தது. எங்கள் அவசரகள வைத்தியசாலை முதலில் புல்மோட்டையிலும் பின்னர் மெனிக்பாம் பகுதியிலும் ஐம்பதினாயிரம் பேருக்கு மேல் வைத்திய உதவியளித்தது. அத்துடன் இந்திய வைத்தியர்கள் மூவாயிரத்திற்கும் அதிகமான சத்திரசிகிச்சைகளைப் புரிந்துள்ளார்கள். இது யுத்தத்தின் கடைசிக் கட்டத்தில் கடுமையாகப் பாதிக்கப்பட்டோருக்கான இந்தியாவின் அக்கறையின் ஓர் எடுத்துக்காட்டாகும். கடந்த மாதங்களில் தங்களுடைய சொந்த இடங்களில் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட மக்களுக்கு அவர்கள் தற்காலிகத் தங்குமிடங்களை அமைத்துக் கொள்ளும் பொருட்டு கூரைத் தகடுகள், சீமெந்து போன்றவற்றையும் சிறிய அளவில் அவர்கள் தோட்ட வேலைகளை ஆரம்பிக்கும் பொருட்டு விவசாய உபகரணங்களையும் வழங்கினோம்.

**இலங்கையின்முயற்சிக்குத் துணை**

நாங்கள் தற்போது வடமாகாணத்தின் புனருத்தாரணம் மற்றும் மீள் நிர்மாணப் பணிகளில் ஈடுபடுவதன் மூலம் இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகளுக்குத் துணையாகவுள்ளோம். இன்னும் சற்று நேரத்தின் பின்னர் இந்திய அரசாங்கத்தால் வடக்கிலும் கிழக்கிலும் அமைக்கப்படவுள்ள ஐம்பதாயிரம் வீடுகளின் நிர்மாணத் தொடக்க வைபவத்தை ஆரம்பித்து வைக்கவுள்ளேன். இம்மாத ஆரம்பத்தில் இந்தியா விதைகளையும் ஐந்நூறு ட்றாக்ரர்களையும் அதன் இணைந்த பாகங்களுடன் வட மாகாணத்திலுள்ள கமநல நிலையங்களுக்கு வழங்க ஆரம்பித்துள்ளது. வட மாகாண மக்களின் சீவனோபாயத்தை மீளமைத்து அவர்கள் தங்கள் வாழ்க்கையைக் கட்டியெழுப்பச் செய்வதில் இந்தியா ஈடுபடும்.

உடனடித் தேவைகளான நிவாரணம் மற்றும் புனரமைப்புப் பணிகளில் எமது கவனத்தைச் செலுத்தும் அதே நேரத்தில் நீண்ட கால மீள் நிர்மாணப் பணிகளும் முக்கியமானவையாகும். அப்படியான பணியை மேற்கொள்ளுவதிலும் இந்தியா உறுதியாகவுள்ளது. இன்னும் சற்று நேரத்தில் இர்கொன் (IRCON) எனப்படும் இந்திய நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும் மதவாச்சியிலிருந்து மடு வரையிலான புகையிரதப்பாதை நிர்மாணப் பணிகளை அங்குரார்ப் பணம் செய்து வைப்பேன். மடு – தலை மன்னார் மற்றும் ஓமந்தை – பளை புகையிரதப் பாதைகளை அமைக்கும் பணிகளும் சம காலத்தில் ஆரம்பமாகும்.

**இந்திய– இலங்கைஉறவு பலப்படும்**

இந்தப் பிராந்தியம் அமைதிக்கும் இயல்பு நிலைக்கும் திரும்பும்போது இரு நாடுகளுக்குமிடையேயான பழைய தொடர்புகளை மீண்டும் தொடர்வதற்கு முன்னுரிமையளிக்க வேண்டியது இரு நாடுகளினதும் கடப்பாடாகும். இதைக் கருத்தில் கொண்டு கொழும்பு – தூத்துக்குடி மற்றும் தலைமன்னார்– இராமேஸ்வரம் கப்பல் சேவைகளைத் திரும்பவும் ஆரம்பிப்பதற்கு வேண்டிய புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றிற்கான பேச்சுவார்த்தைகளைச் சமீபத்தில் நிறை வேற்றியுள்ளோம். தலைமன்னாரிலுள்ள பழைய கப்பல் துறையும் மீளமைக்கப்படும். காங்கேசன்துறைத் துறைமுகப் புனரமைப்பு மற்றும் மீள்நிர்மாணப் பணிகளை நாம் ஏற்கெனவே ஆரம்பித்துள்ளோம். இது யாழ்ப்பாண வாணிபத்தின் மையமாக மீண்டும் உயிர்பெறும். கலிமர் முனையானது காங்கேசன்துறையிலிருந்து 40 கடல்மைல் தூரத்திலேயே உள்ளது. பலாலி விமான நிலையத்தை மீண்டும் அபிவிருத்தி செய்து இந்தியாவுக்குமிடையேயும் மற்றும் உள்நாட்டு விமான சேவைகளுக்கும் பொருத்தமானதாக இலங்கை அரசாங்கம் அபிவிருத்தி செய்யுமென நம்புகிறோம். எதிர்வரும் வருடங்களில் இத்தகைய பலதரப்புத் தொடர்புகள் மக்களுக்கும் மக்களுக்குமிடையேயான தொடர்புகளை மட்டுமன்றி இரு நாடுகளின் உள்நாட்டுப் பொருளாதாரத்திற்கும் ஒரு செயலூக்கத்தை அளிக்குமெனநாம்நம்புகின்றோம்.

யாழ்ப்பாணத்தின் கலாசார எழுச்சிக்குப் புத்தூக்கமளிக்கும் முகமாக இந்திய உதவித் தூதரக அலுவலகம் யாழ்ப்பாணத்தில் ஒரு கலாசார நிலையத்தை அமைப்பதற்கும் துரையப்பா விளையாட்டரங்கைச் செப்பனிடுவதற்கும் வேண்டிய உதவிகளை வழங்கும். மன்னாரிலுள்ள திருக்கேதீஸ்வரம் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்யும் பணியையும் இந்தியா ஏற்றுள்ளது.

**13–வது அரசியல் திருத்தம்**

2009 மே மாதத்தில் முடிபடைந்த ஆயுதப் போராட்டமானது முக்கியமான பிரச்சனைகளைப் புரிந்துணர்வுடனும் பரஸ்பர விட்டுக்கொடுப்புடனும் அணுகி உண்மையான தேசிய நல்லிணக்கத்தை நோக்கிய நகர்வுக்கான அரிய சந்தர்ப்பத்தை அளித்துள்ளது. 13வது அரசியலமைப்புத் திருத்தத்தின் அடிப்படையில் அமைந்த அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுப் பொதி ஒரு நிரந்தர அரசியல் தீர்வுக்கான சூழ்நிலையை ஏற்படுத்துமென நாம் நம்புகின்றோம். அதற்கான பேச்சுவார்த்தைகள் எல்லாச் சமூகங்களினதும் பங்களிப்புடன் விரைவில் ஆரம்பமாகு மென நாம் நம்புகிறோம். அதன் இறுதியான குறிக்கோள் கௌரவத்துடனும்சமாதானத்துடனும்வாழ்வதேயாகும்.

எனது உரையை முடிப்பதற்கு முன் இந்த உதவித் தூதரக அலுவலகத்தைத் திறப்பதற்கான சகல ஒத்தாசைகளையும் வழங்கிய பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அவர்களின் தலைமையிலான இலங்கை வெளியுறவு அமைச்சுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் வடமாகாண ஆளுநர் மற்றும் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் ஆகியோரது அலுவலக உத்தியோகத்தர் களுக்கும் இந்த அலுவலகத்தை அமைப் பதில் ஆற்றிய உதவிகளுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அவர்களுடைய ஒத்துழைப்பும் உதவிகளும் மேலும் தொடருமென எதிர் பார்க்கின்றேன். இத்தகைய அபிவிருத்தியானது எதிர்காலத்தில் இரு நாடுகளுக்குமான உறவுகளை மேலும் மேலோங்கச் செய்யும் என்பதில் எனக்கு சந்தேகமில்லை எனக் கூறினார். (ச–5)



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப்அலிசர்தாரியை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து வரவேற்பதை படத்தில் காணலாம்.

# பாக்.ஜனாதிபதி...

நாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு சென்றிருந்தனர்.

எதிர்வரும் 30ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக்கும் அவர் ஜனாதிபதி, பிரதமர், வெளியுறவுத் துறை அமைச்சர் ஆகியோரோடு இருதரப்பு இராஜதந்திர விடயங்கள் குறித்து கலந்துரையாடவுள்ளார்.

இதேவேளை சில இருதரப்பு உடன்படிக்கைகளிலும் கைச்சாத்திடவுள்ளதாக வெளிவிவகாரத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தவிர நாளை மறுதினம் பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி இலங்கை நாடாளுமன்றத்திற்கும் விஜயம் செய்யவுள்ளார். (ச-5)

# துணைவேந்தர் நிய...

துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பித்த யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், பேராசிரியர் ரட்ணஜீவன் கூல், பேராசிரியர் எஸ்.சத்தியசீலன், பேராசிரியர் என்.ஞானகுமாரன் உள்ளிட்ட 8 பேர் போட்டியிட்டனர்.

இவ்வாறு போட்டியிட்டவர்களில் துணைவேந்தர் பதவிக்கு தெரிவு செய்வதற்கான வாக்களிப்பு மூலம் பல்கலைக்கழக பேரவையினால் மூவரின் பெயர்கள் ஜனாதிபதிக்கு பரிந்துரைக்கப்படும்.

இதில் ஒருவரை ஜனாதிபதி, யாழ். பல்கலைக்கழகத்தின் அடுத்த துணைவேந்தராக நியமனம் வழங்குவார்.

இவ்வாறு பரிந்துரைக்கப்பட்ட பெயர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊடாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்படும்.

இம் மூவரில் ஒருவரை ஜனாதிபதி விரைவில் யாழ்.பல் கலைக்கழகத்தின் துணைவேந்தராக நியமனம் வழங்குவார்.

இதேவேளை இவ்வாக்களிப்பில் பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் 8 வாக்குகளுடன் மூன்றாம் இடத்தைப் பெற்றார்.

அத்துடன் கலைப் பீடாதிபதி என்.ஞானகுமாரன் 5 வாக்குக ளை பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

# இந்திய...

களும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் இடையில் அலரிமாளிகையில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

அரசியல் தீர்வுத்திட்டம், தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை, இடம் பெயர் மக்கள் பிரச்சினை, மீள்குடியேற்றம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து இந்த சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (ச-5)

# இருபது வருடங்களுக்கு பின் யாழில் இந்திய இராணுவம்!

(யாழ்ப்பாணம்)

இருபது வருடங்களுக்கு பின் 50இற்கும் மேற்பட்ட இந்திய இராணுவத்தினர் யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகை தந்தனர்.

இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவின் விஜயத்தினை முன்னிட்டே இந்திய இராணுவத்தினர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தனர். இத் திறப்பு விழாவில் ஏராளமான பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிலையில் எஸ்.எம்.கிருஷ்ணா, துணைத் தூதரக திறப்பு விழாவில் கலந்து கொண்ட பிரமுகர்கள் ஆகியோருக்கும், திறந்து வைக்கப்பட்டிருக்கும் துணைத் தூதரகத்துக்கும் பாதுகாப்பு வழங்குகின்றமைக்காகவே இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டிருந்தனர் என்று கொழும்பில் உள்ள இந்திய தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ச-5)


## வீடு வளவு விற்பனைக்கு

பலாலி வீதியை அண்மித்து கோண்டாவில்காளிகோவில் ஒழுங்கையில்சுற்றுமதிலுடன் கூடியவீடும்3 1/2பரப்புக்காணியும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
தொ.பேசி இல.021 222 6369
நேரம் பிற்பகல் ஒரு மணி தொடக்கம் மாலை 4 மணி வரை

(சி-1691)


# இந்தியத்துணைத் தூதர...

விருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோரும் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்தனர்.

இலங்கை விமானப்படையின் விமானத்தில் நேற்றுக் காலை 9 மணிக்கு பலாலி விமான நிலையத்திற்கு வந்த இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர், யாழ்.பொது நூலகத்துக்கு முன்பாக நடந்த வடக்கு விவசாயிகளுக்கு இந்தியா 500 உழவு இயந்திரங்களை வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் இந்திய அரசினால் வடக்கு மாகாண விவசாயிகளுக்கு வழங்கப்படும் 500 உழவு இயந்திரங்களை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் சம்பிரதாயப்பூர்வமாககையளித்தார்.

தொடர்ந்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ 500 உழவு இயந்திரங்களை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ்.அரசஅதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோரிடம் சம்பிரதாய பூர்வமாக கையளித்தார்.

இந் நிகழ்வில் யாழ்.மாநகர சபை முதல்வர், பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்றகுழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமார், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், சுமந்திரன், சரவணபவன் மற்றும் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், வடக்கு மாகாண அதிகாரிகள், யாழ். திணைக்கள தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வை தொடர்ந்து யாழ்ப்பாணம் பலாலி வீதி கந்தர்மடத்தில் அமைக்கப்பட்டுள்ள இலங்கைக்கான இந்தியத் துணைத் தூதரகத்தை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் திறந்து வைத்தார்.

இலங்கைக்கான யாழ்ப்பாண இந்திய துணைத் தூதுவர் மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், புத்திஜீவிகள், அரச அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து இந்திய அரசினால் வடக்கு,கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களுக்கு கட்டிக் கொடுக்கப்படும் 50 ஆயிரம் வீடுகள் திட்டத்தை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா நேற்று பிற்பகல் அரியாலையில் சம்பிரதாயபூர்வமாக அடிக்கல் நாட்டி ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து மதவாச்சிக்கு விஜயம் செய்த இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் இந்திய அரசினால் மதவாச்சி-மடு புகையிரதப் பாதை அமைக்கும் பணியை ஆரம்பித்து வைத்தார். (ச-5)


## சொற்பொழிவு

சின்மயா மிஷனானது பல ஆன்மீகப் பணிகளை உலகளாவிய ரீதியில் மேற்கொண்டு வருகின்றது.அந்த வகையில் இலங்கையில் பல்வேறு பாகங்களிலும் இயங்கி தனது பணிகளை மேற்கொண்டு வருகின்றது.அதன் ஒரு அம்சமாக யாழ்ப்பாணத்திலும் கடந்த ஒரு வருடமாக பல நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் ஆத்மீக சொற்பொழிவுகளை யாழ்.குடாநாடு முழுவதும் நடாத்தி வருகிறது.அந்த வரிசையில் 'முருக வழிபாடு' பற்றி இந்தியாவில் நாகப்பட்டினத்திலிருந்து வருகை தந்திருக்கும் சுவாமி இராமகிருஷ்ணானந்தஜி அவர்கள் சொற்பொழிவு ஒன்றினை ஆற்ற உள்ளார்.

இடம்: நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

காலம்: 28.11.2010 ஞாயிறு (இன்று) மாலை 5 மணி

அனைவரையும் கலந்துகொள்ள அழைக்கின்றோம்.அனுமதி இலவசம்.

விளம்பர அனுசரணை: மதி கலர்ஸ் பிறிண்டேர்ஸ் 15/2,முருகேசர் லேன்.நல்லூர்.

(சி-1686)





## கலைமகள் அழகு நிலா

Beauty Accademy

2010 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு அகவொளி மண்டபத்தில் 21.11.2010 அன்று சான்றிதழ் வழங்கும் வைபவம் இடம்பெற்று, கியூடெக் கரித்தாஸின் முன்னாள் இயக்குனர் அருட்பணி கி.யோ.ஜெயக்குமார் அவர்களால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

புதிய பிரிவு எதிர்வரும் 2010.12.01 அன்று ஆரம்பமாகும்.
பயிற்சி முடிவில் Diploma சான்றிதழ் வழங்கப்படும்.
வயதெல்லை இல்லை . அனைவரும் பயிற்சிகளில் பங்குபற்றி சான்றிதழினைப் பெற்றுக்கொள்ளலாம்.

பயிற்சிக்கான அனுமதிக் கட்டணம்: 3000/=

பயிற்சி நேரம் : காலை 10 முதல் - மாலை 4 .00மணி வரை

மேலதிக விபரங்களுக்கு: கலைமகள் அழகு நிலா
390, பிரதான வீதி, பஸ்தியன் சந்தி, யாழ்ப்பாணம்.

தொடர்புகள்:
077 3719071
021 4908151

(சி-1684)


## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 02 | 08 |
| 09 | 12 |
| 1987 | 2009 |

### அமரர் திருமதி இந்திரகுமார் பங்கயற்செல்வி

தேடிய செல்வம் கணப்பொழுதில்
கைவிட்டுப் போவதைப்போல்
என்வாழ்வில் தென்றலென வந்து
புயலாகிச் சென்ற மாயம் என்ன
அழுதுஅழுது விழிகள் பழுதாகி
நான் துயருற்றபோது தெரிந்தது

நீர் சென்று ஓராண்டு ஓடிமறைந்தது
எனும் உண்மை
செல்வி விண்ணோடு நீர்சென்றாலும் கூட
உம் உருவம் என் நெஞ்சோடு உள்ளது
ஏழ் ஏழ் பிறவி எடுத்திடினும் என் செல்வி
என்னுள்ளே என்றும் நீ வாழ்வாய்

அன்னாரின் 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி இன்று (28.11.2010) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இந்திரச் செல்வி மகால்
சிலம்புப் புளியடி வீதி,
சங்கானை.

(3134)

தகவல்
கணவன் க.இந்திரகுமார்
(கந்தசாமி அன் சன்ஸ்) சங்கானை.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.